மே 27, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்



## எரிக் சொல்ஹெய்ம் தமிழ்ச் செல்வனை கண்டதும் மகிழ்ச்சி; பேச்சு முடிவில் ஏமாற்றம்; சோகம்!

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# புலிகளிடம் ஹெலிக்கொப்டர்கள் அரசு செய்யும் பிரசார தந்திரமா?

இலகு வழி ஹெலிக்கொப்டர்களைக் கடல் வழியாகப் புலிகள் வன்னிக்குக் கொண்டுவந்து சேர்த்துள்ளார்களா?

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகள் மீண்டும் இத்தகைய சந்தேகத்தை வெளியிட்டிருக்கின்றன.

இதற்கான விரிவான ஆதாரம் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி ஆழ்கடலில் இடம்பெற்ற கடற் சமரின் போது பிடிபட்ட எட்டு புலிகளைப் புலனாய்வாளர்கள் விசாரணை செய்தபோது தெரியவந்ததாக ஸ்ரீலங்கா புலனாய்வு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக கட்டுரைகளை வரைந்து வரும் பிரபல இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸின் களநிலைவர அறிக்கையிலேயே இந்தத் தகவல் வெளியாகியிருக்கிறது.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட புலிகள் தெரிவித்த தாகக் கூறப்படும் பல தகவல்களைப் பாதுகாப்புத் தரப்பினர் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றனர். அவை அனைத்துமே சமாதான முயற்சி, ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் ஆகியவற்றுடன் புலிகள் பெருந்தொகையான யுத்த தளவாடங்களை வன்னியில் குவித்து வருகிறார்கள் என்ற செய்தியையும் சொல்லுபவையாகவே இருக்கின்றன.

புலிகள் பெரும் யுத்தத்துக்குத் தயாராகி வருகிறார்கள் என்பதற்கான சான்றுகளாக இந்தப் புலனாய்வுத் தகவல்கள் கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் புலிகள் ஹெலிக்கொப்டர்களை அல்லது அவற்றின் பாகங்களை பெரிய கொள்கலன்கள் மூலம் தரையிறக்கி இருக்கிறார்கள் என்ற தகவலும் வெளியிடப்பட்டிருக்கிறது.

மின் பிறப்பாக்கிகள் (Power Generator) போன்ற இரு பெரிய கருவிகளும் தரையிறக்கப்பட்டதாக பிடிபட்ட புலிப் போராளிகள் குறிப்பிட்டுள்ளனர். அவை 'கன்வஸ்' துணியினால் நீர் புகாதவாறு நன்கு சுற்றி மூடி மறைக்கப்பட்டிருந்தன. அவை படகுகளுக்கான என்ஜின்களா, அல்லது இலகு ரக ஹெலிக்கொப்டர்களா?

புலனாய்வு வட்டாரங்களில் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

புலிகளின் விமானப் பலம் குறித்து ஸ்ரீலங்கா அரசுப் படைகள் தகவல் வெளியிடுவது இது முதன்முறை அல்ல. முன்னரும் பல தடவைகள் புலிகள் வசம் இலகு ரக விமானங்கள் இருப்பது பற்றிய செய்திகள் வெளிவந்திருந்தன.

புலிகளிடம் உள்ள விமானத் தொழில் நுட்பம் குறித்து முதலில் தகவல் வெளியிட்டது இந்தியஅமைதிப்படையே. புலிகளின் விமானப் பலம் குறித்து இந்தியப் புலனாய்வாளர்களும் தொடர்ச்சியாகக் கண்காணிப்பினை மேற்கொண்டு வந்துள்ளனர். வன்னியில் ஓமந்தைப் பகுதியில் சிறிய விமான ஓடு பாதை ஒன்றைத் தாங்கள் கண்டுபிடித்ததாக இந்திய அமைதிப் படை 1988இல் தெரிவித்திருந்தது.

இதைவிட புலிகள் விமானப் படைப் பிரிவு ஒன்றை அமைத்து வருவதாகவும் சங்கர் என்பவரின் தலைமையில் விமானப் பொறியியல் தொழில் நுட்பப் பிரிவை புலிகள் இயக்கி வருவதாகவும் கூட அவ்வப்போது தகவல்கள் வெளியிடப்பட்டு வந்தன.

இவற்றை விட வடக்கு வானில் மர்ம வான் ஊர்திகளின் நடமாட்டம் குறித்தும் ஸ்ரீலங்கா அரசுப் படைகள் முன்பு பல தடவைகள் தகவல் வெளியிட்டதுண்டு.

1988ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் குடாநாட்டின் தீவுப் பகுதிகளுக்கு மேலாகத் தென்பட்ட அடையாளம் தெரியாத வான் ஊர்தி ஒன்றின் மீது கடற்படைப் படகுகளில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

வானில் சிவப்பு நிற ஒளிப் பட்டாகத் தெரிந்த அந்த மர்ம ஊர்தியைக் கண்டு மிரண்ட கடற்படையினர் 127 மில்லிமீற்றர் பீரங்கி கொண்டு அதன்மீது தொடர்ச்சியாகச் சுட்டனர்.

விடுதலைப் புலிகளுடையது எனச் சந்தேகிக்கப்படும் வானூர்தி ஒன்றுக்கு எதிராக வடக்கில் அரசப் படைகள் தாக்குதல் நடத்த முயன்றமை அதுவே முதல் சம்பவம் ஆகும்.

அதன் பின்னர் வடக்கு வான் பரப்பில் பல தடவைகள் விமானத்தின் சமிக்ஞை விளக்கை ஒத்த சிவப்பு நிற ஒளிப் பொட்டை கடற்படையினர் கண்டிருந்தனர். 'ராடர்' கருவிகள் கூட



அதனைப் பதிவு செய்திருந்தன. அத்தகைய வேளைகளில் வடக்கில் உள்ள படைமுகாம்கள் உஷார்படுத்தப்பட்டும் இருந்தன.

அதே ஆண்டு நவம்பரில் புலிகள் வசம் வான் ஊர்திகள் இருப்பது தெரியவந்தது. நவம்பர் மாவீரர் நாளன்று வன்னியில் மாவீரர் கல்லறைகள் மீது இரண்டு ஹெலிக்கொப்டர்கள் மலர்களைத் தூவின என்று வந்த செய்தி ஸ்ரீலங்காப் படைத்தரப்புக்கு அதிர்ச்சியாய் வந்து அமைந்தது.

முல்லைத்தீவில் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு மேலாக புலிகளின் ஹெலிகளை தாங்கள் நேரில் கண்டதாக வன்னி வாசிகள் அச்சமயம் கூறியிருந்தனர்.

அந்த ஹெலிகள் புலிகளுக்கு எப்படிக் கிடைத்தன என்பது குறித்து படைத்தரப்பினர் மயிரைப் பிய்த்துக்கொண்டு ஆலோசிக்க வேண்டி இருந்தது.

விடுதலைப் புலிகள் வசம் வான் ஊர்திகள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதால் அவற்றை இனங்கண்டு அவற்றின் வகை, தாக்கும் திறன் மற்றும் அவை தொடர்பான தகவல்களைச் சேகரிக்க வேண்டிய அவசியம் படை நிபுணர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

ஆனால் அந்த மாவீரர் காலத்துக்குப் பின்னர் வன்னியில் எந்தப் பகுதியிலும் இத்தகைய வான் ஊர்திகள் பறந்ததாகத் தகவல் இல்லை.

எனினும் புலிகளின் விமானத் தாக்குதல் — முதலாவது தாக்குதல் — எப்படி இருக்குமோ என்ற பீதி கலந்த எதிர்பார்ப்பு ஸ்ரீலங்கா படை அதிகாரிகளிடையே இன்னமும் இருக்கிறது.

பாதுகாப்பு ஆய்வாளர்களிடம் மட்டுமன்றி சாதாரண பொது மக்கள் மத்தியிலும் கூட அப்படி ஓர் எதிர்பார்ப்பு அன்று முதல் (1988 நவம்பர்) இருந்து வருகிறது.

கொழும்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி மீது வான் வழியான தாக்குதல்கள் நடத்தப்படலாம் என எதிர்பார்த்து அங்கு மூன்று விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் பொருத்தப் பட்டன.

விமான எதிர்ப்பு ஆயுதங்களாகவும் பயன்படுத்தக்கூடிய — தரைத்தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் துப்பாக்கிகள், பீரங்கிகள் என்பன போர் முனையில் உள்ள படையினரிடம் நிறையவே உள்ளன. எனினும் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் எதுவும் வடபகுதிப் படைத்தளங்களில் இல்லை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தற்சமயம் வடக்கு வான் பரப்பில் மர்ம விமானங்களின் ஊடுருவல்கள் பற்றிய தகவல்களுக்கு இந்திய தென்பிராந்தியக் கடற்படையின் 'ராடர்'களையே ஸ்ரீலங்கா கடற்படை நம்பி இருக்கிறது.

சந்தேகத்துக்குரிய கப்பல்களின் நடமாட்டங்கள் குறித்து ஸ்ரீலங்கா அரசுக்கு இந்தியத் தரப்பில் இருந்து தகவல்கள் பரிமாறப்பட்டு வருவது உண்மை. அதுபோல மர்ம விமான நடமாட்டங்கள் குறித்தும் அவ்வப்போது தகவல்கள் இரு தரப்பினரிடையேயும் பரிமாறப்படுகின்றன. ஆனால் அவை பகிரங்கப்படுத்தப்படுவதில்லை என்று கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

விடுதலைப் புலிகளின் பலத்தை நிரூபித்துவிடும் என்பதால் புலிகளின் விமான பலம் குறித்த தகவல்களை ஸ்ரீலங்கா அரசுத் தரப்பும் எடுத்த எடுப்பிலேயே ஊர்ஜிதம் செய்து விடுவதுமில்லை.

ஆனால் 1988 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தங்கள் விமானப் பலம் குறித்து புலிகளும் மௌனமாகவே இருந்து வருகின்றனர்.

இந்தப் பின்னணியில் — புலிகள் விமான எரிபொருளையும் இலகு ரக ஹெலிக்கொப்டர்களையும் வன்னிக்குக் கடத்தி வந்திருப்பதாக இப்போது திடீரென அரசுத்தரப்பிலிருந்து தகவல் வெளியிடப்படுவது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

புலிகள் சமாதானக் காலத்திலும் பெரும் ஆயுதக் குவிப்பை மேற்கொண்டு வருகிறார்கள் என்று வெளியுலகுக்குக் காட்டும் வெறும் பிரசார தந்திரமே இதுவென்று சில அவதானிகள் கருதுகின்றனர்.


புலிகளுடனான சமாதானப் பேச்சு முயற்சிகளில் ஈடுபட்டுவரும் அதேவேளை புதிய இராணுவ நடவடிக்கைகளுக்காக பெருமளவு யுத்த தளவாடங்களை அண்மையில் வெளிநாட்டில் இருந்து வாங்கிக் கொழும்புத் துறைமுகத்துக்குக் கொண்டுவந்து சேர்த்திருந்தது அரசு.

தனது ஆயுதப் பெருக்கத்துக்கு நியாயம் தேடுவதற்காகப் புலிகளும் தங்கள் ஆயுதப் பலத்தைப் பெருக்கி யுத்தத் தயாரிப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்பதை நிரூபிக்க வேண்டிய அவசியம் அரசுத் தரப்புக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே புலிகள் புதிது புதிதாக ஆயுதங்களை வாங்கிக் குவித்து வருகின்றனர் என்பது போன்ற புலனாய்வுத் தகவல்கள் தொடர்ந்து வெளியாகும் என எதிர்பார்க்கலாம்.


— ஆதர்ஷாதாஸ்

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தால் கூட்டணி-ஈ.பி.டி.பி. சொற்போர்!

## ஏட்டிக்குப் போட்டியாக அறிக்கைகள்; வசை மாரிப் பேச்சுக்கள்



ஆனந்தசங்கரி



தவராசா

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம், ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் மற்றும் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு, வடக்கு – கிழக்கு தமிழ் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற மக்கள் குறை நிவர்த்தி சேவை என்பன காரணமாக குடாநாட்டில் தமிழ் அரசியல் கட்சிகளிடையேயான இழுபறி நிலை கடந்த வாரம் உச்சக் கட்டத்தை அடைந்தது.

குறிப்பாக ஈ.பி.டி.பி கட்சிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையிலான அறிக்கை மோதல் சூடுபிடித்தது.

டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தையும், மறுநாள் 18 ஆம் திகதி நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தையும் மாவட்டத்தின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் பகிஷ்கரித்தனர்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, சி.சிவமகாராசா ஆகியோரே இந்தக் கூட்டங்களைப் பகிஷ்கரித்து அவற்றில் கலந்து கொள்ளாது விலகி இருந்தனர்.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை யாழ். செயலகத்தில் நடத்துமாறு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் செயலரான யாழ். அரச அதிபரிடம் இந்த ஐந்து எம்.பிக்களும் கோரி இருந்தனர்.

தமது அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாமையாலும் கூட்டங்கள் நடைபெறும் இடம் தமக்குப் பாதுகாப்பான இடமாக இருக்கும் எனத் தாங்கள் கருதாமையினாலும் கூட்டங்களில் தாங்கள் கலந்து கொள்ளவில்லை என்று அவர்கள் தெரிவித்திருந்தனர்.

ஆனால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை என்று கூட்டணியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் எடுத்த முடிவுக்கு மாறாக அக்கட்சியைச் சேர்ந்த யாழ். மாநகரசபை மேயர் என். ரவிராஜ், பிரதி மேயர் செல்லன் கந்தையன் வலிவடக்குப் பிரதேச சபையின் தலைவரும் கூட்டணி உறுப்பினருமான திருமதி பா. ஸ்ரீபாஸ்கரன் ஆகியோர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றி உரையாற்றியிருக்கின்றனர். இது கூட்டணி வட்டாரங்களில் சலசலப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த விவகாரம் ஓய்ந்து விட்ட பிறகும் கூட்டணியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி, ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். தவராசா ஆகிய இருவருக்கும் இடையிலான அறிக்கை மோதல் படுசுவாரஸ்யமாகத் தொடர்கிறது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்து அதற்கான காரணங்களை விளக்கி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில், வழமைப் பிரகாரம் மிக மூத்த நாடாளுமன்ற உறுப்பினரான தம்மையே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக நியமித்திருக்க வேண்டும் என்று வீ. ஆனந்தசங்கரி தெரிவித்திருந்தார்.

சங்கரியின் அந்தக் கடிதம் உள்ளூர் பத்திரிகையில் வெளியாகியதை அடுத்து ஒருங்கிணைப்புக் குழுவின் தலைமைப் பதவி தொடர்பான சர்ச்சை கிளம்பியிருக்கிறது.

ஜனாதிபதிக்கு ஆனந்தசங்கரி அனுப்பிய கடிதத்தில் தெரிவித்த தகவலுக்குப் பதிலளித்து ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராசா பதில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

ஒருங்கிணைப்புக் குழுவுக்கு யார் தலைவராக நியமிக்கப்படலாம் என்பது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினரான ஆனந்த சங்கரியால் சரி வரப் புரிந்து கொள்ள முடியவில்லை; அதற்காக அனுதாபப்பட மட்டும் தான் முடியும் என்று தவராசா தனது அறிக்கையில் சாடியிருந்தார். இதனைத் தொடர்ந்து இந்த விவகாரம் மேலும் சூடு பிடித்திருக்கிறது.

தவராசா குறிப்பிட்ட சுற்றிக்கை பற்றி விளக்கி மற்றொரு பத்திரிகை அறிக்கையை விடுத்திருக்கிறார் ஆனந்தசங்கரி.

ஆனால் அதில் அவர் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்பட்ட சுற்றிக்கையில் கூறப்பட்டிருக்கும் விடயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் அது மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைமைப் பதவி சம்பந்தமானது. ஆனால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைமைப் பதவி பற்றியே தவராசா எம்.பி தனது அறிக்கையில் சுட்டிக் காட்டி இருந்தார்.

இதனால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைமை பற்றிய சர்ச்சையா? அல்லது மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைமை பற்றிய சர்ச்சையா இது என்பதில் பொதுமக்கள் மத்தியில் ஆனந்தசங்கரியின் அறிக்கை குழப்பத்தை ஏற்படுத்தியது.

இதற்கிடையில் கடந்த வாரம் முன்னாள் யாழ். மேயர் சரோஜினி யோகேஸ்வரனின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஆனந்தசங்கரி ஈ.பி.டி.பி அமைப்பினரைக் கடுமையாகச் சாடினார்.

''இன்று ஆடம்பர வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் ஈ.பி.டி.பியினர் தீவுப் பகுதியை அடிமைப்படுத்தி வைத்துள்ளனர். தீவகத்தில் இரண்டு மூன்று மனைவிமாரை வைத்துக் குடும்பம் நடத்திக் கொண்டிருப்பவர்கள் வெளியிலே நல்லவர்கள் போல் நடமாடுகிறார்கள்'' என்று தனது உரையில் ஈ.பி.டி.பியினர் மீது வசைமாரி பொழிந்தார்.

ஆனந்தசங்கரியின் இந்தக் கூற்று தவராசாவை சீற்றமுற வைத்திருக்கிறது.

''ஆனந்தசங்கரியின் அசிங்கமான அரசியல் பேச்சின் வழியில் ஈ.பி.டி.பியினராகிய நாம் இழுபடத் தயாராகவில்லை. எனவே அவரது அசிங்கக் குற்றச்சாட்டுகளுக்கு நாங்கள் பதில் தரப் போவதில்லை. இந்த அசிங்க அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நேரம் வந்து விட்டது'' என்று ஈ.பி.டி.பி எம்.பியான தவராசா தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அமைச்சர் தேவானந்தா மற்றும் வடக்கு–கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்தன ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெற்று முடிந்துள்ளது.

—ஆதித்தன்

# தமிழ்ச்செல்வன் கொலைச் சதி: அதன் சூத்திரதாரி யார்?




நோர்வேயின் விசேட சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான சமாதானக் குழுவை வரவேற்பதற்காகச் சென்ற புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் சு.ப. தமிழ்ச்செல்வனை இலக்கு வைத்து கடந்த 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளைமோர் கண்ணிவெடித்தாக்குதல் நடத்தப்பட்டது.

செவ்வாய் மாலை, வன்னியில் முக்கிய தளங்களில் ஒன்றான ''தமிழேஸ் பேஸ்'' இலிருந்து சுமார் 3.45 மணியளவில் ஒரு தொகுதி வாகனங்களை உள்ளடக்கிய தமிழ்ச்செல்வனின் வாகனத் தொடரணி யாழ்–கண்டி (ஏ–9) பிரதான வழங்கல் பாதையூடாக மல்லாவி நோக்கிப் புறப்பட்டது.

மாலை 4 மணியளவில் இந்த வாகனத் தொடரணி முறிகண்டிக்கும்–இரணைமடுவுக்கும் இடையில் அமைந்துள்ள கொக்காவில் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, இந்த அணியைச் சேர்ந்த 'பிரேவோ இரண்டு' ரக வாகனம் கிளைமோர் கண்ணி வெடியில் சிக்கி வெடித்துச் சிதறியது. சத்தம் பல மைல் தொலைவுவரை கேட்டது.

புலிகளின் நிறமுடைய – கறுப்புக் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட – புத்தம்புதிய 'மிற்சுயி' இன்ரகூலர் பஜிரோ வாகனம், பின்னேவந்த வாகன வெடிப்பின் உதைப்பினால் பல நூறுயார் தூரத்துக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டது.

இந்த பஜிரோவில்தான் தமிழ்ச்செல்வன் பயணம் செய்வது வழக்கம். ஆனால் அன்று – தாக்குதல் இடம்பெற்ற சமயம் – தமிழ்ச்செல்வன் அந்த வாகனத்தில் இருக்கவில்லை. அவரது மெய்ப்பாதுகாவலர்கள் மூவரே இருந்தனர்.

யாழ். மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட எழிற்செல்வன் அல்லது ரூபநிதி என அழைக்கப்படும் சிவசிதம்பரம் – சிவசீலன் என்ற புலி உறுப்பினர் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டார். மற்றைய இருவரும் படுகாயமடைந்தனர்.

அமெரிக்க விஷேட கொமாண்டோப் பிரிவினால் பயிற்றப்பட்ட இராணுவத்தின் ஊடுருவித் தாக்கும் சிறப்பு அணி – ஒன்றே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்று விடுதலைப்புலிகள் வன்னியில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சமாதான முயற்சியைக் குழப்பும் அரசின் சதி நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று எனப் புலிகள் அரச படைகளைச் சாடியுள்ளனர்.

ஆனால், பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் இந்தத் தாக்குதலுக்கும் படையினருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று கூறி புலிகளின் கூற்றை மறுத்தது.

சமாதானம் பேசச் சென்றவர்கள் மீது மறைந்திருந்து தாக்குதல் நடத்தப்பட்டது இது முதல் தடவை அல்ல.

இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்டிருந்த காலப்பகுதியில் சமாதான விவகாரம் தொடர்பாக பேச்சு நடத்துவதற்குச் சென்ற விடுதலைப் புலிகளின் அப்போதைய பிரதித் தலைவர்களில் ஒருவரான மகேந்திரராஜா (மாத்தையா) மீது இந்திய இராணுவம் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியிருந்தது.

மாத்தையா வழக்கமாக வரும் வாகனம் சின்னாபின்னமாய்ச் சிதைந்தது.

ஆனால், மாத்தையா அந்த வாகனத் தொடரணிக்குப் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்தபடியால் மயிரிழையில் தப்பினார்.

கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதி, சர்வமத சமாதானக் குழுவை மடுவில் சந்தித்துவிட்டு வன்னி திரும்பிக் கொண்டிருந்த தமிழ்ச்செல்வன் மீது பள்ளமடுவை அண்டிய பகுதியில் வைத்து, இதேமாதிரியான கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனை மன்னார் ஆயர் வண. இராயப்பு யோசப் அடிகளார் உறுதிசெய்த போது படைத்தரப்பும் இனவாத சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் அவரைப் 'புலிகளின் ஆதரவாளர்' என்று முத்திரை குத்தின.

மடு சென்ற சர்வமத சமாதானக் குழுவில் 30 பௌத்த பிக்குகள் உட்பட 50க்கும் மேற்பட்ட மும்மதத் தலைவர்களும் அடங்கி இருந்தனர். ஆனால் தாக்குதலால் அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

தமிழ்ச்செல்வன் மீது பெப்ரவரி 20இல் நடத்தப்பட்ட தாக்குதலை இராணுவம் நடத்தியிருக்க வாய்ப்புகள் அதிகம் என்று நம்பப்பட்டது.

காரணம் பள்ளமடுவுக்கு சுமார் இரண்டரை கிலோமீற்றர் கிழக்காக இராணுவத்தின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் அப்போது அமைந்திருந்தன. பொதுமக்களும் அப்பகுதியில் வசித்துவருவதால் பொதுமக்களின் உதவியுடன் இராணுவம் இந்தத் தாக்குதலை ஊடுருவி மேற்கொண்டிருக்கக்கூடிய வாய்ப்புகள் காணப்பட்டன.

ஆனால், கடந்த 15ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் புலிகளின் அதிதீவிர பாதுகாப்புப் பிரதேசத்தினுள் படையினரின் இறுதிப் பாதுகாப்பு எல்லைக் கிராமமான ஓமந்தையில் இருந்து சுமார் 45 கிலோ மீற்றர்களுக்கு வடக்கே உள்ள கொக்காவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மறுபுறம், யாழ்ப்பாணத்தில் படையினரின் இறுதி நிலையான முகமாலை இராணுவ முன்னணிக் காவலரண்களிலிருந்து சுமார் 40 கிலோ மீற்றர் தெற்காக கொக்காவில் உள்ளது.

எது எப்படியாயினும் தாக்குதல் நடத்தப்பட்டது ஏதோ உண்மைதான்.

தாக்குதலை அடுத்து புலிகளின் சிறப்பு எல்லைப்படை மற்றும் எல்லைப் படை தாக்குதல் இடம்பெற்ற பகுதியை அண்டிய பிரதேசத்தில் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தின.

அந்தப் பிரதேசம் முற்றாக சுற்றி வளைக்கப்பட்டு தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக இது வரை எவரும் கைது செய்யப்பட்டதாகத் தகவல் இல்லை.

அப்படியானால் இந்தத் தாக்குதலை நடத்தியது யார்?

தமிழ் பேசும் மக்களை மட்டுமல்ல அரசியல் தலைவர்களையும், வெளி நாட்டு இராஜதந்திரிகளையும் இது கேள்விக் குறியாக்கி விட்டுள்ளது.

அடிப்படையில் இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் என்று பல தரப்புக்கள் மீதும் சந்தேகிக்கப்படுகிறது.

முதலாவதாக, இராணுவத்தினர். அதாவது நன்கு பயிற்றப்பட்ட இராணுவச் சிப்பாய்கள் (இவர்கள் தமிழர்களாகவும் இருக்கலாம்).

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவி அவர்கள் இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம். தனி நபர் தாக்குதல் யுக்தியாகக் கூட அமையலாம்.

ஆனால், புலிகளின் தலைவர்களை இலக்கு வைப்பது என்பது அவ்வாறான இலகுவான விடயம் அல்ல. சாதாரணமாக அவர்களின் அசைவுகள், நடவடிக்கைகள் ஆகியவை அவரவரது மெய்ப்பாதுகாப்பாளர்களுக்கே தெரியாதவாறே பேணப்படுகின்றன. புலிகளின் தலைவர்களது நடமாட்டத்தை உன்னிப்பதும், அவதானிப்பதும், புலனாய்வதும் பின்னர் அவர்களை இலக்கு வைப்பதும் சுலபமானது அல்ல என்றே கூறவேண்டும்.

ஆனாலும், உள்ளூர் இடம்பெயர்வுகளால் சனநெருக்கடியாகிவிட்ட இரணைமடு, கொக்காவில் மற்றும் அதனை அண்டிய முறிகண்டிப் பகுதிகளில் அடிக்கடி பயணம் செய்யும் கறுப்புக் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட வரிப்புலிகள் நிறமுடைய வாகனங்களை இலக்கு வைப்பது முடியாத காரியம் அல்ல என்றும் ஒரு சாரார் கருதுகின்றனர்.

புலிகளுக்கு எதிராகச் செயற்படும் மாற்று இயக்கங்களின் வேலையாகவும் இது இருக்கலாம். வன்னிப் பிரதேசத்தை நன்கு அறிந்த மாற்று இயக்க உறுப்பினர்களோ அல்லது உறுப்பினர் ஒருவரோ புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் புகுந்து, மக்களோடு மக்களாக உருமாறிச் சென்று இந்தத் தாக்குதலை நடத்தியிருக்க லாம். என்றாலும் புலிகளின் பிரதேசத்துக்குள் கிளைமோர் போன்ற வெடிபொருள்களைக் கொண்டு செல்வது என்பதும் அவர்களது பகுதிக்குள் அவற்றை மறைத்து வைத்திருப்பது என்பதும் சுலபமான காரியங்கள் அல்ல என்றும் சொல்லப்படுகிறது.

இராணுவத்துடன் ஒபிடும்போது மாற்றுக் குழுக்களுக்கு இந்த வேலை எளிதாக இருக்கலாம். ஆனால் இவ்வாறான ஆற்றல் மிக்கவர்கள் அக்கட்சிகளில் இன்னும்இருக்கிறார்களா என்பது இன்னும் தெரியவரவில்லை.

உள்வீட்டு விவகாரம் என்று படைத்தரப்பு தெரிவித்த கருத்தை புலிகள் நிராகரித்தனர்.

ஒழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இராணுவத்துக்கு எதிராக சளைக்காது போராடி, தற்போது மரபுமுறை இராணுவமாக பலமடைந்துள்ள புலிகள் அமைப்பில் இவ்வாறான குளறுபடிகள் இடம்பெறுவது என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றது. இதுதான் அவர்களின் உண்மையான பலமும் கூட.

இது சம்பந்தமாக வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவர் கூறுகையில்:–

நோர்வேயின் தலையீட்டை எள்ளளவும் விரும்பாத அண்டை நாடு ஒன்றின் உளவுப்பிரிவின் வேலையாக இது இருக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

ஆனாலும் படையினரின் கூலி இன்றியோ அல்லது அரச கைக்கூலிகளின் உதவியின்றியோ இவ்வாறு தனித்து எந்தச் சக்தியாலும் இதனைச் செய்திருக்க முடியாது என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

உண்மையில், இது உள்வீட்டு வேலையாக இருந்தால் புலிகள் கடைசிவரை இதனை வெளி உலகுக்கு பகிரங்கப்படுத்தி இருக்கமாட்டார்கள்.

ஏனெனில் ஒரு புறத்தில் இந்தச் செய்தி போராளிகளின் மனோ நிலையில் குழப்பத்தை ஏற்படுத்திவிடும். மறுபுறத்தில் அரச பிரசார இயந்திரத்துக்கு வாய்ப்பாகிவிடும்.





Euromind Active Antenna.
for Clear Reception
Of all Channels in all Locations
Importers and Suppliers
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax :075-370018

தலைநகரில்
Maths / Science & Technology
O/L 2001, O/L 2002

| Subject | O/L 2001 | Grade 10 |
|---|---|---|
| Maths | Fri 5.00-7.00 | Fri 3.00-5.00 |
| Science | Thu 5.00-7.00 | Thu 3.00-5.00 |

விரிவுரை W.L.Rajaratnam
EPI
316, காலி வீதி, கொழும்பு - 04.
தொலைபேசி:075 516790
(St. Peters பஸ்தரிப்பு முன்னால்)

என்டெனா பொருத்துதல்


Get it Installed by professionals
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk


ஐரோப்பிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
Eurostar டிஷ் அன்டெனாக்கள் மற்றும்...
Digital / Analog Receiver, Positioner, LNB, LNBF, Actuator, Splitter, Feed Horn, Multi Switch...
Sole Distributors in Sri Lanka for
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.
Tel. 075-370019, Fax 075-370018

மலைநாட்டில்
Maths / Science & Technology
O/L 2001, O/L 2002, Grade 9

| Subject | O/L 2001 | O/L 2002 | Grade 9 |
|---|---|---|---|
| Maths | Sat 1.30-330 | Sun 10.30-12.30 | Mon / Tue 4.45-5.30 |
| Science | Sat 11.30-130 | Sun 8.30-10.30 | Mon / Tue 4.45-5.30 |

விரிவுரை W.L.Rajaratnam
EPI
87/1A, கட்டுகஸ்தோட்ட வீதி, கண்டி. தொலைபேசி:072-500475
(வித்தியார்த்த கல்லூரி முன்னால்)

அவசர திருத்தங்கள்


Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

சுடர் ஒளி

27 மே, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com

# காலம் கடந்த ஞானம்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தன்னைச் சமாதான முயற்சியில் ஈடுபடுத்தியிருக்கிறது.

இதை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஆங்கில நாளிதழான 'டெயிலி நியூஸ்' (Daily News) தெரிவித்திருக்கிறது. அதுவும் கடந்த திங்கட்கிழமை தனது தலையங்கத்தில்.

'டெயிலி நியூஸ்' பத்திரிகை உண்மையை உணர்ந்து அதை மறைக்காமல் வெளிப்படுத்தியது இது முதல் முறை.

புராண இதிகாச காலத்தில் விசுவாமித்திரருக்கு வசிஷ்டமாமுனி பிரம்மரிஷிப் பட்டம் கொடுத்த மாதிரியான சங்கதி இது.

நோர்வேயின் விசேஷ தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையாகவே புலிகள் ஒரு தலைப் பட்சமாக ஒருமாத யுத்த நிறுத்தத்தை 24.12.2000 திகதியில் அறிவித்தார்கள். பின்னர் அடுத்தடுத்து மூன்று மாதங்களாக அதை நீடித்து வந்தார்கள்.

அது மட்டுமல்ல, யுத்த நிறுத்த காலத்தில் புலிகளைப் பொறுமை இழக்கச் செய்து அவர்களை யுத்தத்தில் இறங்கத் தூண்டும் விதத்தில் அரசாங்கம் பல தாக்குதல்களை நடத்தியது. விஷயத்தை விளங்கிக் கொண்ட புலிகள் அப்போதும் பொறுமை காத்தார்கள்.

புலிகள் தமது பலவீனத்தை மறைக்கவும் தம்மைச் சமாதான விரும்பிகளாகக் காட்டவும், உலக நாடுகள் தமது இயக்கத்தைத் தடை செய்யாமல் பார்த்துக் கொள்ளவுமே ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்து நாடகமாடினார்கள் என்று அரசாங்கம் கிண்டல் செய்தது; கண்டித்தது.

'டெயிலி நியூஸ்' பத்திரிகையும் அதே கருத்தைத்தான் வெளியிட்டது.

இப்போது தலைகீழ் மாற்றம். படுதோல்வியில் முடிந்த படையினரின் அக்கினிச் சுவாலை தாக்குதல் நடவடிக்கை பழைய நிலைப்பாட்டைச் சுட்டெரித்து விட்டதோ?

''துணிந்தவர்கள் வெற்றி பெறுவார்கள்'' என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை—பிரபாகரன் ஒரு பத்திரிகைப் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

துணிந்தவர்களால் தான் சமாதானத்தைக் கொண்டு வர முடியும் என்று 'டெயிலி நியூஸ்' பத்திரிகை கூறுகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடைபெற வைப்பதற்கான ஆரம்பப் பேச்சுக்கள் ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்றன. இந்தநிலையிலும் சமாதானமுயற்சிகளைத் தொடருவதற்கு நோர்வே அரசு திடசங்கற்பம் பூண்டிருக்கிறது. இது மிகுந்த நம்பிக்கை தருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு நீக்க வேண்டும் என்பது போன்ற பிரச்சினைக்கு உரிய விஷயங்கள் எழுந்தாலும் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதில் நோர்வே அரசு உறுதியாக இருக்கிறது. அப்படித்தான் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும். இது நல்லது நடக்கும் என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரம்.

தாண்டப்படுவதற்காகவே தடைகள் இருக்கின்றன. மனம் இருந்தால் தாண்டி விடலாம் என்கிறது 'டெயிலி நியூஸ்' தலையங்கம்.

பிரச்சினைக்கு உரிய சில விஷயங்கள் எழுந்துள்ள போதிலும் முக்கியமான சில கருமங்களில் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது என்றும் நோர்வேயின் விசேஷ தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்திருக்கிறார்.

முக்கியமான சில கருமங்களில் அரசுக்கும் புலிகளுக்குமிடையே இணக்கம் ஏற்பட்டிருப்பதால் பிரச்சினைக்கு உரிய விஷயங்களைக் காலப் போக்கில் தீர்த்து விடலாம்.

எதிர்மறையான காரியங்களை வெளிச்சம் போட்டுப் பெரிதுபடுத்திக் காட்டுவதை விடுத்து உடன்பாடான விஷயங்களில் தான் நாம் கட்டுமானத்தை எழுப்ப வேண்டும். அதுதான் முக்கியம் என்று 'டெயிலி நியூஸ்' பத்திரிகை புத்திமதியும் கூறுகிறது.

இப்படி 'டெயிலி நியூஸ்' முன்னர் நடந்து காட்டியிருந்தால் இன்று நிலைமை வேறாக இருக்காதா, என்ன?

தேவையைப் பொறுத்து காலம்கடந்து தான் பலருக்கும் ஞானம் பிறக்கிறது. என்ன செய்யலாம்?

# பேச்சுப் பற்றிப் பேச்சு! அதுதான் இனித் தொடரும்

கொழும்பு வாசகர்கள் இந்தக் கட்டுரையை 22 ஆம் திகதி புதன்கிழமை படிக்கும்போது புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுப்பற்றி லண்டனில் பேசப்படும்.

நோர்வேயின் விசேஷ தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கமும் தான் பேசிக் கொண்டிருப்பார்கள்.


சொல்கெஹய்ம்

எரிக்சொல்ஹெய்ம் கடந்த வாரம் இலங்கை வந்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்துப் பேசினார். அவர் தெரிவித்த கருத்துக் களுடன் 17 ஆம் திகதி வியாழக்கிழமை வன்னியில் உள்ள மல்லாவிக்குச் சென்று புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச் செல்வனுடன் பேச்சு நடத்தினார்.

தமிழ்ச்செல்வன் வாய் நிறைந்த மகிழ்ச்சிப் புன்னகை யுடன் சொல்ஹெய்மை வரவேற்றார். சொல்ஹெய்மும் மகிழ்ச்சியில் மிதந்தார். தாம் வந்த காரியம் நல்லபடியாக நடக்கும் என்று மனதார நம்பினார்.

ஆனால் கடைசியில் கிடைத்தது ஏமாற்றம் தான்.

யுத்த நிறுத்தம், தமிழ்ப் பகுதிகளுக்கான பொருளாதாரத் தடை முழுமையாக நீக்கம், புலிகள் மீதான தடையை அகற்றுதல் இவை மூன்றும் நடந்தால் தான் புலிகள் பேச்சு வார்த் தையில் கலந்து கொள்வார்கள் என்று தமிழ்ச் செல்வன் உறுதிபட அறுதியிட்டுக் கூறி விட்டார்.

மனப்பாரத்துடனேயே சொல்ஹெய்ம் கொழும்பு திரும்பினார். ஜனாதிபதியைச் சந்தித்தார். தமிழ்ச்செல்வன் சொன்னதை ஒப்புவித்தார்.

ஜனாதிபதியாலும் அது ஜீரணிக்க முடியாத ஒன்று. சமாதானப் பேச்சுவார்த்தை நடக்க வேண்டும் என்ற ஆர்வம் ஜனாதிபதிக்கு உண்டோ இல்லையோ அது வேறு விஷயம்.


பாலசிங்கம்

ஆனால் அரசாங்கம் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர ஐ.தே.க ஆயத்தம் செய்து வரும் இவ் வேளையில் பேச்சுவார்த்தை நடக்கும் சாத்தியம் இல்லை என்ற நிலை ஏற்பட்டால் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு அரசாங்கத்துக்குக் கிடைக்குமா?

அரசின் மற்ற நடவடிக்கைகளைத் தமிழ் எம்.பிக்கள் விரும்பாவிட்டாலும் பேச்சு வார்த்தை நடக்கவேண்டும் என்பதற்காக வேனும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்து அரசாங்கம் விழுந்து விடாமல் முட்டுக் கொடுப்பார்கள்.

அந்த வாய்ப்பு இல்லை என்றால் என்ன ஆகும்.?

ஜனாதிபதிக்கு அரசுநிலைக்க வேண் டுமே, அதற்கு என்ன செய்யலாம் என்ற கவலை.

எரிக் சொல்ஹெய்முக்குத் தமது முயற்சி முந்திய சந்தர்ப்பங்களில் போல் இம்முறையும் பயனற்றுப் போய்விட்டதே என்ற மன வருத்தம்.

எரிக் சொல்ஹெய்ம் கொழும்பிலிருந்து நேரே லண்டன் சென்று முதல் வேலை யாக அன்டன் பாலசிங்கத்தைச் சந்தித் துப் பேசுவார் என்றே எல்லோரும் நினைத் தார்கள்.

பாலசிங்கத்திடம் சொல்ல என்ன இருக்கிறது? கொழும்பில் ஜனாதிபதி கூறியவற்றை அடிப்படையாக வைத்து மல்லாவியில் தமிழ்ச்செல்வனிடம் பேசிய போது அவர் பழைய நிலையில் இருந்து இம்மியும் விலகவில்லையே!

அதனால் சொல்ஹெய்ம் அமெரிக்கா சென்று விட்டார்.

அமெரிக்காவில் அந்த நாட்டுத் தலைவர் களுடன் கலந்து ஆலோ சனை நடத்தினார். அதன் பின்னரே லண்டன் சென்று இன்று அன்டன் பாலசிங்கத்துடன் பேசுகிறார்.


தமிழ்ச் செல்வன்

அன்டன் பாலசிங்கத்தோடு பேசுவதற்கும் தமிழ்ச் செல்வனோடு பேசுவதற்கும் வித்தி யாசம் உண்டு.

தமிழ்ச்செல்வன் மிகுந்த பொறுமைசாலி. சாந்தமாகப் பேசுபவர். நியாயங்களை எடுத்துக்கூறி அவரைச் சிறு சிறு விட்டுக் கொடுப்புகளுக்கு தயார்படுத்திக் கொள்ளலாம். இப்படித் தான் சொல்ஹெய்ம் நம்பினார்.

இம்முறை தமிழ்ச் செல்வனுடன் பேசிய பின்னர் தான் சொல்ஹெய் முக்கு உண்மை விளங்கியது.

அன்டன் பாலசிங்கம் சொன்னாலும் சரி, தமிழ்ச்செல்வன் சொன்னாலும் சரி ஒன்றைத் தான் சொல்வார்கள். சொல்லும் விதமும் தொனியும் மாறுபடலாம். ஆனால் பொருளில் வேறுபாடு இருக்காது.

காரணம், என்ன சொல்ல வேண்டும் என்பது இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் கலந்து ஆலோசித்து முன் கூட்டியே முடிவு செய்யப்பட்டு விடுகிறது. அந்த முடிவை யார் சொன்னால் என்ன, ஒரே மாதிரியாகத் தான் இருக் கும். அதை இப்போது தான் சொல் ஹெய்ம் சரிவரப் புரிந்து கொண்டு ள்ளார்.

சொல்ஹெய்மின் கருத்துப்படி யுத்த

காண்டீபம்

நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம் — இரண்டிலும் இரு தரப்பும் ஓர் இணக்கத் துக்கு வரக் கூடியளவுக்குப் புரிந்துணர்வு ஏற்பட்டு விட்டது.

புலிகள் இயக்கத் தடையை நீக்குவதில் தான் சிக்கல்.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற உலக நாடுகள் பலவற்றையும் கெஞ்சிக் கூத்தாடிப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யுமாறு அரசாங்கம் கோரி வந்தது. இப்போதும் கோரவே செய்கிறது.

அமெரிக்காவும் பிரிட்டனும் புலிகள் இயக்கத்தைத் தடை செய்து விட்டன.

இந்த நிலையில் இலங்கை புலிகள் இயக்கத் தடையை நீக்கினால் அமெரிக்காவும் பிரிட்டனும் மற்ற உலகநாடுகளும் இலங்கையைப் பற்றி என்ன நினைக்கும்?

அதனால் தான் தடையை ஒரேயடியாக நீக்காமல் பேச்சுவார்த்தை நடைபெறும் காலத்தில் தடையை நடைமுறைப்படுத்தாமல் விடலாம் என்று ஒரு ஆலோசனை முன்வைக் கப்பட்டதாகத் தெரியவருகிறது.

அந்த ஆலோசனை எடுபடவில்லை. சட்ட பூர்வமாக விதிக்கப்பட்ட தடை சட்ட பூர்வமாக நீக்கப்படவேண்டும். தடை செய்யப்பட்ட பயங்கரவாத கிறிமினல் இயக்கமாக இருந்து கொண்டு தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக எப்படிப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள முடியும்?

தவிரவும் சட்ட பூர்வமாக அரசுடன் சட்ட விரோத இயக்கம் சமத்துவமாக இருந்து பேச முடியாது. பேசினாலும் முடிவுகளுக்குச் சட்ட பூர்வ அந்தஸ்து கிடைக்கமாட்டாது.

இவை எல்லாவற்றையும் விட இன்னொரு முக்கிய விடயமும் இதில் அடங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டதை அடுத்து எத்தனையோ அப்பாவிகள், புலிகள் இயக்கத்துடன் தொடர்பு உடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பிடித்துத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இயக்கத்தடையை முற்றாக நீக்கினால் தான் அவர்களுக்கு விடிவு ஏற்படும். இப்படியெல்லாம் புலிகள் இயக்க வட்டாரங்கள் விளக்கம் அளிக்கின்றன.

சரி அன்டன் பாலசிங்கத்துடனான சொல்ஹெய்மின் பேச்சாவது பலன் அளிக்குமா?

லண்டன் வட்டாரங்கள் இதற்கு இரத்தினச் சுருக்கமாகப் பதில் அளித்தன.

''புலிகள் இயக்கம் தனது நிலைப்பாட்டிலிருந்து மாறப்போவதில்லை அரசும் சும்மா இருக்கப்போவதில்லை சொல்ஹெய்மும் தனது சமாதான முயற்சியைக் கைவிட மாட்டார். எனவே பேச்சு அல்ல, பேச்சுப் பற்றிய பேச்சுத்தான் தொடர்ந்து நடைபெறப் போகிறது'' அதன் பெறுபேறு நலமாக அமைய வேண்டும் என்று எதிர் பார்ப்போம்.

இப்படி லண்டன் வட்டாரங்கள் கூறின.

# வடக்குப் பிரதிநிதித்துவத்தை மேலும் முடக்கச் சதித்திட்டம்

வடக்குப் பிரதிநிதித்துவத்தை மேலும் முடக்கவும் தமிழ் மக்களின் மிச்ச சொச்ச உரிமைகளைப் பறிக்கவும் குடிசனக் கணக்கெடுப்பு என்ற பெயரில் சதித்திட்டம் தீட்டப் பட்டுவிட்டது. இதற்குத் தமிழ் மக்கள் இடமளிக்கக் கூடாது.

நாடு முழுவதிலும் ஜூலை 16 ஆம் திகதி இறுதிக் கட்டக் குடிசனக் கணக்கெடுப்பு நடைபெற இருக்கிறது. இதற்குத் தமிழ்த் தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

யுத்தம் காரணமாக வடபகுதி மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம் பெயர்ந்துள்ள இந்த நிலையில் குடிசனக் கணக்கெடுப்பை நடத்துவதில் உள்ள ஆபத்தைத் தமிழ்த் தலைவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

### விநாயகமூர்த்தி

தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையில் குடிசனக் கணக்கெடுப்பால் யாழ் மாவட்ட எம்.பிக்களின் எண்ணிக்கை வருங் காலத்தில் 5 ஆகக் குறையலாம் என்று அச்சம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

யாழ் மாவட்டத்துக்கு உரிய எம்.பிக்களின் எண்ணிக்கை முன்னர் 11 ஆக இருந்தது. கடந்த பொதுத் தேர்தலில் அது 9 ஆகக் குறைந்தது. வருங்காலத்தில் அது 5 ஆக மேலும் குறையலாம்.

தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழகப் பிரவேசம் மற்றும் தமிழ் மக்களின் உரிமைகள் ஆகியவற்றுக்கும் பாதிப்பு ஏற்படும்.

யாழ் குடாநாட்டு நிலைமை காரணமாக அங்கிருந்து வெளியேறி வேறு மாவட்டங்களில் பலர் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் அனைவரும் திரும்பி வந்து சொந்த இடங்களில் வசிக்கத் தொடங்கிய பின்னரே குடிசனக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இப்படி விநாயகமூர்த்தி கூறினார்.

### மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணத்திலிருந்து 60 சதவீதத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்து விட்டார்கள். இந்த நிலையில் குடிசனக் கணக்கெடுப்பை நடத்துவது தமிழ் மக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று யாழ் மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி மாவை சேனாதிராசா கூறுகிறார்.

தற்போதைய நிலையில் குடிசனக் கணக்கெடுப்பை நடத்தினால் அடுத்த தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறையும்.

யாழ் மாவட்டத்தில் இப்போது 13 இலட்சம் மக்கள் இருக்க வேண்டும். ஆனால் 5 இலட்சத்துக்கு உட்பட்ட மக்களே இருக்கிறார்கள். இந்த நிலையில் குடிசனக் கணக்கெடுப்பா என்றும் அவர் கேட்டார்.

### அடைக்கலநாதன்

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் வட—கிழக்குப் பகுதியில் நேர்க்கமான சனத்தொகைக் கணிப்பீட்டினை மேற்கொள்ள முடியாது. எனவே இத் திட்டத்தினை அரசாங்கம் நடைமுறைப் படுத்துவதனைப் பிற்போட வேண்டும்.

தற்போது சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படுவதனைத் தமது கட்சி எதிர்க்கின்றது என்று ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

சிறுபான்மையினர் அகதிகளாச் சிதறியுள்ள நிலையில் சனத்தொகைக் கணக்கெடுப்பினை மேற்கொள்வது தமிழ் மக்களின் இருக்கும் உரிமைகளையும் இல்லாது ஒழிக்கும் செயலாகும் என்றும் அவர் கண்டனம் தெரிவித்தார்.

### சுரேஷ் பிரேமச்சந்திரன்

மாவட்டம் தோறும் சனத்தொகையின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

தற்போதைய சூழலில் யாழ்ப்பாணம் உட்பட வட—கிழக்கில் தமிழ் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள நிலையில் சனத்தொகைக் கணக்கெடுப்பினை மேற் கொள்வது தமிழ் மக்களுக்குப் பாதகமான செயலாகும். இப்படி ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் சுரேஷ் அணியின் செயலாளர் சுரேஷ் பிரேமச் சந்திரன் தெரிவித்தார்.

இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ள நிலையில் கணக்கெடுப் பினை நடத்தாது அதனை பின் தள்ளிப்போட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# மாணவருக்கு உபகரணங்கள் பஞ்சம் களஞ்சிய அறையிலோ கறையான் அரிப்பு

## மத்திய மாகாணத்தில் சீர்கேடு அம்பலம்; யார் பொறுப்பு?

புதிய கல்விச்சீர்திருத்தத் திட்டத்தின் படி பாடசாலைகளுக்கு வழங்கப்படவேண்டிய நவீன உபகரணங்கள் மலையகப் பாடசாலைகளுக்குக் கிடைக்கவில்லை. இதேவேளை பல கோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள் மத்திய மாகாண கல்வி அமைச்சின் களஞ்சிய சாலையில் தேக்கி வைக்கப்பட்டுள்ளன. இரண்டு வருடங்களுக்கு மேல் தேக்கி வைக்கப்பட்டுள்ள உபகரணங்கள் பாவனைக்கு உதவாத நிலையை அடைந்துள்ளன.

இந்த அநியாயத்துக்கு யார் பொறுப்பு? மாகாண அமைச்சர்களின் அசமந்தப் போக்கா, அல்லது அதிகாரி களின் அசட்டையா? அண்மையில் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் போதே இந்த சீர்கேடு அம்பலமானது.

புதிய கல்வித் திட்டத்தின்படி சகல பாடசாலைகளுக்கும் கணினி இயந்திரங்கள் உட்பட தேவையான உபகரணங்கள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இதற்கென வரவு செலவுத்திட்டத்திலும் ஆகக் கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாணத்திலும் மத்திய மாகாணத்திலும் அமைச்சர்கள் சச்சிதானந்தனும் இராதா கிருஷ்ணனும் தமக்கு வழங்கப்பட்ட நிதியில் பெரும் பகுதியை மலையகப் பாடசாலைகளுக்கு வழங்கி தேவைகளில் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்துள்ளனர். ஆனாலும் மத்திய அரசும் சரி, மாகாண அமைச்சுகளும் சரி மலையகப் பாடசாலைகளின் அபிவிருத்தியில் போதிய அக்கறை கொள்வதில்லை.

பல பாடசாலைகளில் தட்டச்சு இயந்திரங்கள் கூட இல்லை. பாடசாலை நூல் நிலையங்களில் புத்தகங்கள் இல்லை, விளையாட்டு உபகரணங்களோ, வாத்தியக் கருவிகளோ கிடையாது. இதனால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிபர்களால் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றன.

மத்திய மாகாண முதலமைச்சருக்குக் கிடைத்த இரகசிய தகவலின்படி முதல்வர் பொல் கொல்லையில் உள்ள மத்திய மாகாண கல்வி அலுவலகத்தின் களஞ்சிய அறையில் திடீர் சோதனையை மேற்கொண்டார்.

அங்கு ரோணியோ இயந்திரங்கள், தட்டச்சு இயந்திரங்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், விளையாட்டு உபகரணங்கள், வாத்தியக் கருவிகள், வாசிக சாலைகளுக்கான புத்தகங்கள் என பல உபகரணங்கள் கறையான் அரித்து சேதமடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் பெறுமதி ஒரு கோடியே 43 லட்சத்து 80 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உபகரணங்கள் யாவும் 2000ஆம் ஆண்டு முற்பகுதியில் உயர் அதிகாரி ஒருவரினால் தனிப்பட்ட முறையில் கொள்வனவு செய்யப்பட்டவை எனத் தெரிய வந்துள்ளது.

மாகாண சபையில் ''டெண்டர் சபை'' ஒன்று உள்ளது. இருந்தாலும் கல்வி அமைச்சின் இந்த உயர் அதிகாரி டெண்டர் கோராமல் தன்னிச்சையாக செயற்பட்டுள்ளார் என்பதும் தெரிய வந்துள்ளது.

இதே போன்று மேலும் பல மோசடிகள் இடம் பெற்றிருக் கலாம் என்று கருதப்படுகிறது. இது தொடர்பாக பூர்வாங்க விசாரணைகளை நடத்த முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அரசாங்கமும் அமைச்சர்களும் அபிவிருத்தித் திட்டங்களுக்காகப் பல கோடி ரூபாய்களை ஒதுக்குகின் றனர். அதை நிர்வகிக்கும் பொறுப்பை தனிப்பட்ட அதிகாரி களிடம் ஒப்படைத்து விடுகின்றனர். ஆனால் நம்பிக்கைக் குரிய சில அதிகாரிகளோ நிதியில் கைவைத்து விடுகின் றனர். இதனால் பாதிக்கப்படுவது ஏழைச் சிறார்களே.

கடமை உணர்வுடன் நேர்மையாக செயற்படும் சில அதிகாரிகளும் இருக்கின்றனர். ஆனால் அவர்களையும் மீறி பல மோசடிகள் நடைபெற்று விடுகின்றன.

# சுதந்திரதின லீவுக்கு அங்கீகாரம், சம்பளம் தர நிருவாகங்கள் மறுப்பு

இலங்கையின் சுதந்திரதினமான பெப்ரவரி 4ஆம் திகதி அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறைதினமாக இருந்து வருகிறது. தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை இத்தினம் இதுவரை ஒரு விடுமுறைத்தினமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் இவ்வாண்டில் முதல் முறையாக தோட்டத் தொழிலாளர்களுக்கும் சுதந்திர தினம் சம்பளத்துடன் கூடிய ஒரு விடுமுறைதினமாக அரசினால் அங்கீகரிக்கப்பட்டது.

சுதந்திர தினம் மே தினத்தைப் போன்று சம்பளத்துடன் கூடிய விடுமுறைதினமாக அங்கீகரிக்கப்பட்டதால் தோட்டத்தொழிலாளர் அத்தினத்தில் விடுமுறையையும் அதேவேளை அத்தினத்துக்கான சம்பளத்தையும் பெற்றுக்கொள்ள உரிமையுடையவர்களாவர்.

இவ்வாறு இருந்தும் சில தோட்ட நிருவாகங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு அத்தினத்துக்கான சம்பளத்தை வழங்கவில்லை. சட்டப்படி நடந்து கொள்ள அவை முன்வரவில்லை.

இதையடுத்து, தொழிற் சங்கங்கள் இது குறித்து தோட்ட நிருவாகங்களுடன் தொடர்பு கொண்டன. தமக்கு எந்த விதமான உத்தரவுகளும் இது தொடர்பாக கம்பெனிகளிடமிருந்து கிடைக்கவில்லை என நிருவாகங்கள் கைவிரித்துவிட்டன.

சப்பிரகமுவ மாகாணத்தில் ஹப்புகஸ்தன்ன பிளாண்டேசன், காவத்தை பிளாண்டேசன், மத்துரட்ட பிளாண்டேசன், பலாங்கொட பிளாண்டேசன் ஆகிய கம்பெனி நிருவாகங்கள் இதுவரை இந்தக் கொடுப்பனவை வழங்கவில்லை.

மலையக மக்கள் முன்னணி அமைப்பாளர் கள் அழகர்சாமி, ஏ.பொன்னையா ஆகியோர் உதவித் தொழில் ஆணையாளரிடம் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

இம் முறைப்பாட்டைப் பரிசீலனை செய்த பெல்மதுளைப் பிரதேச உதவித் தொழில் ஆணையாளர் உடனடியாக இக் கொடுப்பனவை வழங்கும்படி சகல தோட்ட நிருவாகங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார். ஆனால் தோட்ட நிருவாகங்கள் இந்த உத்தரவை உதாசீனப்படுத்தி விட்டன. கம்பெனிகளின் அனுமதியின்றி வழங்க மாட்டோம் எனவும் கூறிவிட்டன.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவும் சுதந்திரதினத்தன்று சம்பளத்துடன் கூடிய விடுமுறை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என அறிவித்திருந்தார்.

இவ்விவகாரம் தொடர்பாக தொழில் அமைச்சர் அலவி மௌலானாவிடம் விவரம் கேட்டோம். இக் கொடுப்பனவு கட்டாயம் வழங்கப்படவேண்டும். தொழிற் சங்கத் தலைவன் என்ற முறையிலும் தொழில் அமைச்சர் என்ற வகையிலும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்ததின் பேரிலேயே இதற்கான அங்கீகாரம் கிடைத்தது. இது தொழிலாளர் சரித்திரத்தில் ஒரு அதி முக்கிய விடயமாகும். சுதந்திர தினத்திற்கான சம்பளத்தை வழங்க மறுத்தால் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

இதோடு அமைச்சர் நின்றுவிடவில்லை. இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் எல்லா மாவட்டங்களிலும் உள்ள உதவித் தொழில் ஆணையாளர்கள் மூலம் விவரங்களைத் திரட்டும்படியும் உத்தரவு பிறப்பித்துள்ளார். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தத்தமது பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் விவரங்களையும், வழங்க மறுக்கும் நிருவாகங்களின் பட்டியல்களையும் திரட்டி வழங்கினால் அதுவே பெரிய சேவையாகும்.

## மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திர சிகாமணி

# இடமிருந்தும் மனமில்லை தமிழ் பாடசாலையின் அவலம்

## விமோசனம் கேட்கிறார் மனோ கணேசன்

முக்கோண கலாசாரம், மூன்று மதங்கள். இவற்றுக்கு மத்தியில் சிக்கித்தடுமாறுகின்றனர் ஒபேசேகரபுர தமிழ் வித்தியாலய மாணவர்கள்.

இவர்களுக்கு விமோசனம் வேண்டும் என்கிறார் மேல் மாகாணசபை உறுப்பினரும், மேல் மாகாண மக்கள் முன்னணியின் அமைப்பாளருமான மனோ கணேசன்.

புதிய தலைநகரான கோட்டை ஸ்ரீ ஜயவர்த்தனபுரவை உள்ளடக்கிய இராஜகிரிய கல்வி வலயத்திலேயே இந்த அவல நிலை.

ஒரே வளாகத்தில் மூன்று பாடசாலைகள். இரண்டு தமிழ் பாடசாலைகள். இடையில் ஒரு சிங்களப் பாடசாலை.

கலாசாரரீதியாகவும், சமய ரீதியாகவும், முரண்பட்ட கருத்துகளும், வித்தியாசமான போக்குகளும் இங்கு பயிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன.

இராஜகிரிய சிங்கள மகா வித்தியாலயம், இராஜகிரிய றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம் என்பன நிரந்தர கட்டடங்களில் இயக்குகின்றன. இவற்றுக்கு மத்தியில் ஒபேசேகரபுர தமிழ்ப் பாடசாலை தற்காலிக கட்டடத்தில் இயங்கி வருகிறது. இங்கு பயிலும் மாணவர்களுக்குக் குடிதண்ணீர் வசதியே இல்லை. அத்தியாவசியமான கழிப்பறைகள் இல்லை. போதிய வகுப்பறைகள் இல்லை. இவர்கள் விளையாட மைதானமும் இல்லை.

இந்த மாணவர்களுக்கு ஏன் இந்த அவலம்? இவர்களுக்கு ஒரு தனியான பாடசாலைக் கட்டடம் இல்லையா? விளையாட்டு மைதானம் இல்லையா? ஏனைய அத்தியாவசிய வசதிகள் இல்லையா?

இவற்றை ஆராயப்போன போது பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்தன.

ஒபேசேகரபுர தமிழ்ப் பாடசாலை 40 வருட காலச் சரித்திரத்தைக் கொண்டது. ஒபேசேகரபுர – கொலன்னாவ வீதியில் சகல வசதிகளும் கொண்ட கட்டடங்களில் இயங்கி வந்தது.

1977 தேர்தல் வன்முறைகளின் பின் ஒபேசேகரபுர பிரதேசத் தமிழ்க் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இப்பாடசாலை அகதி முகாமாகவும், பின்னர் காவலரணாகவும், தொடர்ந்து தொழிற்பயிற்சி நிலையமாகவும் மாற்றப்பட்டது.

இங்கு கல்வி பயின்ற மாணவர்களுக்கு இராஜகிரிய தமிழ்ப் பாடசாலை வளவில் தற்காலிக கட்டடங்கள் அமைக்கப்பட்டு அவர்கள் அங்கு மாற்றப்பட்டனர்.

அன்று முதல் கடந்த 23 வருடங்களாக இந்தப் பாடசாலை மாணவர்கள் தொடர்ந்தும் தற்காலிக கட்டடத்திலேயே முடக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எனப் புதிதாக கட்டடங்கள் அமைக்கத் தேவை இல்லை. கொலன்னாவ வீதியில் முன்பு இயங்கிய பழைய பாடசாலைக்கே செல்ல அனுமதித்தாலே போதும். வெறுமனே இருக்கும் இக்கட்டடங்களை கோட்டை மாநகரசபை பூட்டி வைத்திருக்கின்றது. இங்கு ஒரு தமிழ்ப் பாடசாலை இயங்க முட்டுக்கட்டையாக இருக்கிறது.

இதனை மனோ கணேசன், மேல் மாகாணசபை முதல்வரிடம் சுட்டிக் காட்டினார். இப்பாடசாலைக் கட்டடத்தை மீண்டும் ஒபேசேகரபுர தமிழ் வித்தியாலய நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

முதலமைச்சரின் அலுவலகத் தகவலின் படி — இப்பாடசாலைக் கட்டடம் மீண்டும் பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படலாம் எனத் தெரியவருகிறது. இது நடைமுறைப்படுத்தப்பட்டால் ஒபேசேகரபுர தமிழர்கள் சார்பில் மனோ கணேசனுக்கு ஒரு சபாஷ்!

IPSS For Computer Studies;
- Dip. in Windows Applications
- Dip. in Desk Top Publishing
- Dip. in Computer Programming
- Computer Hardware Engineering
- Data Entry Operator
- Ms Office 2000
- JAVA
- Internet & Email
- Visual Basic

With Unlimited Practicals....!

I.T.Division
Netspaq Computer Technologies
For all your Computer Requirements
- Computer Sales, Accessories
- Upgrading
- Maintenance Contracts, Repairing
- Network Planing, Installations & Maintenance
- Software Development & CD Copying

309 2/5, Galle Road, Colombo - 06.
Tel : 596961, 074-308614 Fax : 596961
email : netspaq@mail.visual.lk

# துருவப் பனிக் குகையில் 16 மாதம் குடியிருப்பு



துருவப்பிரதேசங்களில் வாழ்பவர்கள் பனிக்குகைகளில் தான் குடியிருக்க வேண்டும். அந்தப் பிரதேசங்களில் பிறந்து வளர்ந்தவர்களுக்குத்தான் அது முடியும். ஆயினும் இந்திய மருத்துவரான 52 வயது கன்வல வில்கு என்னும் பெண்மணி 16 மாதங்கள் துருவப்பனிக் குகையில் வாழ்ந்திருக்கிறார். ''தென்துருவத்தின் காந்த மண்டலத்தால் மனித உடலில் ஏற்படும் மாறுதல்'' பற்றி ஆராய்ந்த இந்திய அணியில் இவரும் ஒரு ஆய்வாளர். ஒரு ராணுவ அதிகாரியின் மனைவியாக இருப்பதால் பனிக்குகையும் இவருக்கு பஞ்சு மெத்தையாகி விட்டது.



# அணுசக்தியை எதிர்த்து முகமூடிகள் ஆர்ப்பாட்டம்

அணு சக்தியைப் பயன் படுத்துவதால் மனிதனுக்கு அபாயங்கள் தான் ஏற்படுகின்றன. இதனை வலியுறுத்திக் கூறும் விதத்தில் உக்ரேனிய நாடாளுமன்றத்தின் முன் முகமூடிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அணு சக்தி பயன்பாட்டை அறவே நிறுத்த வேண்டும். செர்னோபில் அணுமின் ஆலையை உடனே மூட வேண்டும் என்று இவர்கள் குரல் எழுப்பினர். அணு சக்தி பயன்பாடு அதிகரித்தால் மனிதர்கள் முகமூடி அணிந்து பிராணவாயுவை சுவாசிக்க வேண்டியிருக்கும் என்பதை வலியுறுத்தும் விதத்தில் இவர்கள் முகமூடிகளை அணிந்திருந்தனர்.

# சாஸ்திரிய நடனத்தில் 'பாலே' வித்தைகள்



தென் இந்திய நடனக் கலைகளில் சாஸ்திரிய கலை அம்சங்கள் மிகவும் சிறப்புப் பெற்றிருக்கின்றன. நாட்டியக் கலைஞர் தனஞ்செயன் தமது 62 வயதிலும் கட்டுக் குலையாமல் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். கலாலய மாணவன் தஷாசேத் தனது சக மாணவியுடன் இங்கு செய்து காட்டும் அபிநயம் மேல் நாட்டு ''பாலே'' நடன வித்தையை மிஞ்சி நிற்கவில்லையா?

# உயர உயர வளர்ந்தால் கூடைப் பந்து காலடியில்

கூடைப்பந்தாட்டம் ரசிகர்களை மிகவும் உற்சாகமாகக் குதூகலப்படுத்தி விடுகிறது. ஆண்களும் பெண்களும் தமது திறமைகளைக் காட்டிப் புகழ் பெறக் கூடிய விளையாட்டு இது. உயரமாக வளர்ந்தவர்களுக்கு கூடைப் பந்தாட்டத்தில் பெரும் வரவேற்பு இருக்கிறது. கைகளால் பந்தைத் தூக்கிக் கூடைக்குள் லாவகமாக வைக்கும் திறமை உயர உயர வளர்ந்தவர்களுக்கு இருக்கிறது. அமெரிக்க கூடைப்பந்து அணியில் மிகவும் உயரமாக வளர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அமெரிக்க வீரர் கொபே எவ்வளவு சாதுரியமாகப் பந்தைக் கூடைக்குள் திணிக்கிறார்.



# முதலையை முன்விட்டு வியாபாரம் நடக்கிறது!

முதலையைப் பிடித்து விளையாடும் அளவுக்கு மனிதர்கள் துணிச்சல்காரர்களாகி விட்டார்களா...? சீனாவில் ஒரு கடை வாசலில் இந்தக் காட்சியைக் காணக்கூடியதாக இருந்தது. மிருகங்கள் விற்பனை செய்யப்படும் கடையா இது? இல்லை, சாதாரண பல சரக்குக் கடைதான். ஆயினும் தமது கடைக்கு வாடிக்கையாளர்களைக் கவர்ந்து இழுப்பதற்காக முதலையைக் காட்சிப் பொருளாக வைத்திருக்கிறார்கள். எல்லாம் வியாபார தந்திரம் தான்.



# ஒளிந்திருக்கும் முகம் எது?



மே 13, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மானுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. கா. சுபாஷ், டிக்கோயா
2. ச. வாமதேவன், வவுனியா.
3. கு..அனிதா, தலவாக்கலை

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (20.05.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாயிருக்கும் இந்த உருவம் யாருடையது?. பொலிவுட்டிலிருந்து இறக்குமதியான பிரியமான ரன் நடிகை. இவர் தங்கையும் இன்று இறக்குமதியாகி விட்டார்.

இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு – 06.



# 'மல்குடி' ... எழுத்த...

'மல்குடி நாட்கள்' புகழ் எழுத்தாளர் ஆர்.கே. நாராயணன் அமரத்துவம் எய்தி விட்டார்.

இந்திய புனைகதை இலக்கியத் துறையை உலகின் முன் பிரகாசிக்கச் செய்து அதனை பெரும் மதிப்புடன் ஏற்றுக் கொள்ளச் செய்தவர் என்ற மாபெரும் புகழ் இவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் புனைகதை இலக்கியத்துக்கான நோபல் பரிசு இவருக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

எளிமையான வசன நடையுடன், ஏழ்மையான இந்திய மக்கள். அவர்களுடைய அபிலாஷைகள், ஏக்கங்கள், வாழ்க்கை நிலை இவருடைய கதைகளில் நெஞ்சை ஈர்த்து விடும் பாங்கில் வெளிப்படுத்தப்பட்டன.

1906 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் பிறந்தார். தாய் மண்ணிலே ஆரம்பக் கல்வியை கற்ற நாராயணன் மைசூர் மகாராஜா கல்லூரியில் உயர் கல்வியைத் தொடர்ந்தார். அங்கே அவருடைய பத்திரிகைத் தொழிலும் ஆரம்பமானது. அதன் பின்னர் புனைகதை படைப்பிலக்கியத்துறையில் காலடி பதித்தார்.

'மல்குடி' என்பது இவருடைய கற்பனையில் உருவாக்கப்பட்ட ஒரு நகரமே. என்றபோதும் அதில் நடமாடிய கதாமாந்தர் அனைவரும் மெட்ராஸ் மக்களே. இவர் வாழ்ந்த சூழலின் மனித சமூகமே. பல்வேறு விசயங்களை சொல்ல வேண்டியதன் பொருட்டு அதனை ஒரு கற்பனை நகரமாக உருவாக்க வேண்டிய அவசியம் நாராயணனுக்கு ஏற்பட்டதாக விமர்சகர்கள் கூறுவதுண்டு.

இவருடைய எழுத்தாளர் வரலாறு பிரச்சினைக்குரியதொன்றாகவும், சுவையானதாகவும் படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது.

ஆங்கில மொழியில்தான் நாராயணன் எழுதி வந்தார். சுவாமியும் நண்பர்களும் என்ற இவருடைய முதலாவது நாவல் பல சோதனைகளை கடந்து பிரசுரமானது. பிரிட்டிஷ் பதிப்பகங்கள் அனைத்தும் முதலில் இதனை ஏற்றுக் கொள்ள மறுத்தன. எனினும் புகழ் பெற்ற எழுத்தாளரு... கிரஹாம் கிறீ... உதவியினா... நாவல் பிரசுர...

'மல்குடி நா... தொகுதி (5 தொகுதிகள்... காவியம் பற்றிய கவிதை வடிவிலானதொரு நூல், 'கைட்', 'மிஸ்டர் சம்பத்', 'கலைப்பட்டதாரி', 'மல்குடி பிரசுரகர்த்தா', 'மகாத்மாவுக்காகக் காத்திருக்கிறேன்,' 'இனிப்புகள் விற்பவன்', 'வெறுப்புமிக்க குரு', 'வர்ணம் தீட்டுபவன்', 'மல்குடியின் புலி' ஆகியன இவருடைய புகழ்மிக்க படைப்புகளாகும்.

... நாராயணனின் முழு... கிருஷ்ணசாமி ஐயர் நாராயணசாமி என்பதாகும்.

புலமை என்பது கடுமையான மொழியில் எழுதுவது என்ற போலி வாதத்தை உடைத்தவர் நாராயணன். எளிமையான மொழி நடையும், பிரச்சினைகளை எளிதில் விளங்கும்படியாக வெளிக்கொணர்வதும் எழுத்தாளனின் முக்கியமான பணி என்பதை அவர் எடுத்துரைத்தார். சாதாரண மக்களின் கதையை இவ்வாறான எழுத்து முறையில் வெளிக்கொணர்கின்ற போது அது சக்தி மிக்கதோர் ஆயுதமாக மாறுகிறது. மக்களை எளிதில் சென்றடைகிறது என்பது அவருடைய கருத்தாகும்.

'கைட்' என்ற அவருடைய நாவல் சினிமாப் படமாகி வெற்றியடைந்தது. மல்குடி நாட்களில் வெளியான சிறுகதைகள் டெலி டிராமாக்களாக வெளியான போது வீடுகளில் மக்கள் கூட்டம் கூட்டமாக பார்த்து ரசித்தார்கள். இவை அனைத்தும் நாராயணனின் புனைகதை கருத்தோட்டங்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றிகளாகும்.

நாராயணன் போன்ற உயர் சிந்தனை மிக்க படைப்பாளியின் மறைவு, இந்திய இலக்கியத்திற்கு மாபெரும் இழப்பு.

— விஜி

# மறைந்த மாயம் என்னவோ?



"இலங்கைத் தமிழர் வாழ்வும் வகிபாகமும்" எனும் தலைப்பில் பேருரை தொடர் நிகழ்ச்சி ஒன்றை கொழும்புத் தமிழ்ச் சங்கம் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றது. பயன்மிக்க பல உரைகள் இடம் பெறுகின்றன. பல அலுவல்களுக்கு மத்தியிலும் ஆர்வம் மிக்க அறிவாளிகள் பலர் கூட்டத்திற்கு முண்டியடித்து வந்து கலந்து கொள்கிறார்கள். காரசாரமான வாதபிரதி வாதங்கள் தூள் கிளப்பும் கூட்டமாகவும் நிகழ்ச்சி நிகழ்கிறது.

பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற தலைப்பிலான உரை அண்மையில் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை முதுநிலை விரிவுரையாளரான கலாநிதி பரமு புஷ்பரட்ணம் பல அரிய தகவல்களை சுவையாகத் தந்து கொண்டிருந்தார்.

"பிராமிக் கல்வெட்டுகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பல ஆதாரங்களின் மூலம் திராவிட மக்கள் இலங்கையின் பல மாவட்டங்களிலும் வாழ்ந்திருக்கின்றனர். இவர்களுடைய வாழ்க்கை கி.மு. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் ஆரம்பித்து விட்டது. இலங்கைத் தமிழருக்கு தொன்மையானதொரு வரலாறு இருக்கிறது





பரண விதான என்ற சிங்கள அறிஞர் இதனை மறுக்கிறார். இலங்கை முழுவதும் சிங்கள மக்களே தொன்மை தொட்டு வாழ்ந்து வருகின்றனர் என்று அவர் கூறுகிறார்"

இவ்வாறு கலாநிதி பேசிக் கொண்டிருந்தார்.

அவருடைய உரையில் சபை அமைதியாகவிருந்தது. சுப்பர் ஸ்ப்பீச்'

தேள் கொட்டினால் போல தொடையில் நறுக்'கென கிள்ளல் ஒன்று விழவே ஸ்ரீமான் சஞ்சாரி துடித்து விழுந்தார்.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த இலக்கியக் காரரே சதையை அப்படி பிடுங்கி எடுத்தார்.

ஆ! ஊவ்! என காலை உதறிய ஸ்ரீமான் இலக்கியக்காரரை எரித்து விடுவது போல் முறைத்தார். அதனைப் பொருட்படுத்தாத இலக்கியக்காரர் "உந்த பேராசிரியர்மார் இப்படித்தான் ராசா! சும்மா பெரிய அளவிலே பேசுவினம் உருப்படியாக ஒன்றையும் செய்ய மாட்டினம். பரண விதான தன் சாதி சனத்திற்காக புத்தகம் புத்தகமாக எழுதித்தள்ளுகிறார். எங்கட பேராசிரியர்மார் என்ன செய்யினம்.

புத்தகம் புத்தகமாக எழுதி தமிழ் மக்கள் மத்தியிலே விசயத்தை எடுத்துச் சொல்ல வேண்டியது தானே. அதை விட்டுப் போட்டு, யூஸ்லெஸ்" என்று சலித்துக் கொண்டார். அவர் முகத்தைப் பார்க்கவே பயமாகவிருந்தது. அவ்வளவு உணர்ச்சி வேகம் பொங்கிப் பிரவாகிக்கிறது. தமிழ்ப் பற்று கண்களில் நெருப்பென ஒளிர்கிறது.

இலக்கியக்காரர் ஒவ்வொரு கூட்டத்திலும் தவறாமல் கலந்து கொள்வார். பொல்லாத தொண தொணப்புக்காரர். மேடையில் பேச்சாளர்கள் தோன்றி பேசத் தொடங்கவும் இவரும் மழைக்கால தவளையைப் போல தனது விமர்சனத்தை ஆரம்பித்துவிடுவார். இதென்னடா தொல்லை என நழுவிச் சென்றால் அவரும் விடாக்கண்டன் கொடாக்கண்டனாக தொடர்ந்து வந்து அட்டை போல் ஒட்டிக் கொள்வார்.

இன்றும் அப்படித்தான். பின்னாலே ஓடிவந்து பக்கத்து ஆசனத்தில் அமர்ந்து தொடை கிள்ளும் சேஷ்டையுடன் விமர்சனம் செய்யத் தொடங்கியிருந்தார். பெரிய எரிச்சல்தான். என்ன செய்ய, பொறுக்க வேண்டியதுதான்.

நூல் வெளியீடு ஆரம்பமானது. 'இது ஒரு பெறுமதியான புத்தகம் ஒவ்வொரு தமிழரும் இதனை வீட்டில் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும்' என நூல் அறிமுகஞ் செய்பவர் தொண்டையை கிழிக்கத் தொடங்கினார்.

இந்த நேரத்தில்—இலக்கியக்காரர் 'திடீ'ரென இருக்கையை விட்டெழுந்தார். ஆ! ஐயோ மறந்து விட்டேனே என்று 'படபட'வென நெற்றியில் விரலால் தட்டினார்.

"ஏன்? என்ன விசயம்?"

"துண்டாக மறந்து போனேன். ஒரு கலியாண வீடு கெதியா போகவேணும்..." என பரபரப்புடன் சபையை விட்டு வேகமாக வெளியேறினார்.

ஸ்ரீமான் திகைத்து அமர்ந்திருக்க புத்தக விற்பனைக்காக வந்து அருகில் நின்றவர் "ஐயா! என்ன அசந்து போய் உட்கார்ந்திருக்கிறியள். அவர் அப்படித்தான் புத்தகம் விற்பதற்காக நாங்கள் கிட்ட வந்தவுடன் கலியாண வீட்டு ஞாபகம் அவருக்கு வந்து விடும், சபையை விட்டு பறந்து விடுவார்....!" என்று சிரித்தார்.

இலக்கியக்காரர் காற்றைப் போல் மாயமாய் மறைந்த வரலாற்று ரகசியம் இது தானோ. ஆஹா! என்னே தமிழ் மகாத்மியம்!





# மல்லிகை 36வது மலர்

'மல்லிகை' சஞ்சிகையின் 36ஆவது ஆண்டு மலர் வெளிவந்துள்ளது. இலங்கையின் ஓர் இலக்கிய சிற்றேட்டைப் பொறுத்த வரையில் இது வோர் அரிய சாதனையாகும்.

'தேடுதல்' தான் எமது தலையாய நோக்கம். தேடல்கள் மூலம் அடையும் உண்மைகளையும் தகவல்களையும் வாசகர் முன் சமர்ப்பித்து மல்லிகையையும், வாசகர்களையும் செழுமைப் படுத்துவதே எமது நோக்கம்' என்கிறார் சஞ்சிகையின் ஆசிரியர் டொமினிக் ஜீவா.

ரமணியின் ஓவியத்தை அட்டைப்படமாகத் தாங்கி மல்லிகை வெளிவந்துள்ளது. சுதாராஜ், சி. சுதந்திரராஜா, இப்னு அஸீமத், பளீல், கே. எஸ். சிவகுமாரன், ஏ. வி. பி. கோமஸ், பா. இரகுவரன், ஆ. கந்தையா, ஸ்ரீ. பிரசாந்தன், மு. அநாதரட்சன், அரபி, செங்கை ஆழியான், திக்குவலை கமால், தெளிவத்தை ஜோசப், லெனின் மதிவாணன், கெக்கிராவை ஸஹானா, எஸ். முத்துமீரான், எஸ். எம். ஜே. பைஸ்தீன், பொன் பாலகுமார், நெடுந்தீவு லக்ஷ்மன், செ. யோகநாதன், சாரல் நாடன், முல்லையூரான் தி. ஞானசேகரன், முருகபூபதி, தெனியான், கே. விஜயன், ஸ்ரீதர் பிச்சையப்பா, மா. பாலசிங்கம், எஸ். வன்னியகுலம், தாமரை மகேந்திரன் ஆகியோரின் ஆக்கங்கள், கவிதை, கதை, கட்டுரை எனும் வடிவில் உள்ளடக்கமாகியுள்ளன.

தணியாத தாகமுடன் இலக்கிய வேள்வியில் ஈடுபட்டிருக்கும் டொமினிக் ஜீவாவின் மல்லிகை மலர் அரியதொரு பொக்கிஷமாகவே திகழ்கிறது.



# ஓவியக் கண்காட்சி

கொழும்பு 7இல் அமைந்திருக்கும் பிரான்ஸ் கலாசார நிலையமான பிரின்ஸ் அலையன்ஸ் மண்டபத்தில் ஓவியக்கண் காட்சி ஒன்று 18.05.2001 முதல் இடம் பெற்று வருகிறது. சந்திரிகா சிரோமணி அசுராமன எனும் பெண் ஓவியர் ஒருவரினால் தீட்டப்பட்ட ஓவியங்கள் கண் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

சந்திரிகா சிரோமணி கேகாலை மாவட்டத்தில் 1970 — ஆம் ஆண்டில் பிறந்தவர். 'பெலிகல' என்ற கிராமம் இவர் பிறந்த இடமாகும்.

தான் 7 வயதிலிருந்தே ஓவியத்துறையில் ஈடுபடத் தொடங்கியதாக சிரோமணி கூறுகிறார். ஆசிரியை எஸ்.ஆர். குணதிலக்க மெனிக்கே அவர்களே தனது ஓவிய முயற்சிகளுக்கு கைகொடுத்தவர் என்று நன்றியுடன் தெரிவிக்கிறார்.

சந்திரிகா சிரோமணி ஒரு பள்ளி ஆசிரியை மாவத்தகம மத்திய கல்லூரியில் படிப்பித்து வரும் இவர் களனி பல்கலைக்கழகத்தில் நுண்கலை பட்டதாரி பட்டம் பெற்றுள்ளார்.

இவருடைய ஓவியக் கண்காட்சிகள் இலங்கையில் பல இடங்களில் இடம் பெற்றுள்ளன.



# கலையமுதம்

கே.விஜயன்

# ...4இல் குருமாற்றம் ...யில் பிரச்சினை

## ...தானம் ஏற்படும் பலாபலன்

...ழமை நள்ளிரவு 12.34 மணி அளவில் மிதுன ராசிக்கு ...திருகசீரிடம் 3ஆம் பாதத்தில் அதாவது செவ்வாயின் நட்சத்திர ...க்கப் போகிறார். செவ்வாய் யுத்தகாரகன் நெருப்புக்கும் சம்பந் ... நெருப்பு பரவ காற்று உதவி செய்யும். ஆகவே உலகில் பொது ...லும் பரவலாக அழிவுகள் ஏற்படலாம். மேலும் குருவோடு இருப்பவர் ...ு இருவரும் சமாதானப் பிரியர் அல்லர். 12.07.2001 இல் குரு ராகுவின் ...மான திருவாதிரையில் சஞ்சரிப்பார். அப்போது சில மாற்றங்கள் நிகழ வாய்ப்பு உண்டு.

24.09.2001 தொடக்கம் குரு தன் நட்சத்திரமான புனர்பூசத்தில் சஞ்சரிப்பதால் நாட்டில் சமாதானம் ஏற்படும். 17.12.2001 வரை தன் நட்சத்திரத்தில் இருப்பார். பின் மறுபடியும் ராகுவின் நட்சத்திரமான திருவாதிரையில் வக்கிரகதியில் சஞ்சரிப்பார்.

சில நாடுகளுக்கு நன்மையான பலனும் சிலவற்றுக்கு தீமையான பலனும் நடைபெறும் கனடா, மெக்ஸிக்கோ, பிரேசில், கயனா, ஸ்கண்டிநேவிய நாடுகள், ஜேர்மனி, இத்தாலி, எகிப்து ஆகியன நன்மையடையும். கொரியா, ஜப்பான், பிலிப்பைன்ஸ், அவுஸ்திரேலியா, மேற்கு சீனா, திபேத், இமாலயம், பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, ஸ்பெயின், போர்த்துக்கல், சிக்காக்கோ, நியுயோர்க், மேற்கு இந்தியத் தீவுகள், கொலம்பியா ஆகியன பிரச்சினைகளை எதிர் நோக்கலாம்.

...டம் உண்டு. கலி...ணப் பேச்சு தடைப்படலாம். குடும்ப உறவு சீராக இருக்கும். தெய்வீகபக்தி, தலயாத்திரை அமையும். தொழில் துறையில் வருவாய் அதிகரிக்கும்.

### இடபம்

*கார்த்திகை, 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2.*

இரண்டாம் வீட்டில் குரு இருப்பது விசேஷம். எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். கடன் தொல்லை நீங்கும். கையில் காசு தங்கும். சமுதாயத்தில் நல்ல மதிப்பு இருக்கும். திருமணம் நடக்க நல்ல வாய்ப்புண்டு. நோய் நொடிகள் விலகும். தொழில்துறை அபிவிருத்தி அடையும். பதவி உயர்வு கிடைக்கும். புதிய தொழில் கிடைக்கும். இராசியில் சனி இருந்தாலும் பாதிப்பில்லை

### மிதுனம்

*மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.*

இராசியில் குரு இருப்பது சிறப்பல்ல. எடுத்த காரியங்கள் தடைப்படலாம். சமுதாயத்தில் அந்தஸ்து குறையலாம். கடன் பட நேரிடலாம். திருமணப் பேச்சு தாமதிக்கலாம். குழந்தைகளிடம் இருந்து நல்ல செய்தி எதிர்பார்க்கலாம். குடும்ப உறவு பலப்படும். தெய்வீகபக்தி, இறை வழிபாடு அதிகரிக்கும். திசை புத்தி நன்மையானால் பலன் மாற்றமடையலாம்.

### கடகம்

*புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.*

செலவுத் தானமான பன்னிரண்டாம் வீட்டில் இருப்பது சிறப்பல்ல. செலவு அதிகரிக்கும். பிரயாண பலன் உண்டு. அயன, சயன சுகம் உண்டு. வீடு, வாகனம் வாங்க அல்லது மாற்ற பலன் உண்டு. நோய் நொடிகள் விலகும். பழைய கடன் தீரும். திருமணப் பேச்சு காலதாமதமாகும். இன பந்துக்களோடு உள்ள உறவு பலமடையும். எடுத்த காரியங்கள் தாமதமாக நிறைவேறும்.

### சிங்கம்

*மகம், பூரம், உத்தரம்1.*

இலாபத்தானத்தில் குரு இருப்பது விசேஷம். வருவாய் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பிரயாணம் அமையும். தடைப்பட்ட திருமணம் நடைபெறும். புதிய திருமணப் பேச்சு ஆரம்பமாகும். நண்பர்கள் உறவினரின் உதவி இருக்கும். புத்திரரால் நல்ல செய்தி கிட்டும். குடும்ப உறவு பலப்படும். கூட்டு முயற்சி அல்லது பங்குத் தொழில் விருத்தியடையும். சகோதரச் சிறப்புண்டு.

### கன்னி

*உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2.*

தசம கேந்திரமான பத்தாம் வீட்டில் குரு இருப்பது சிறப்பு. சமுதாயத்தில் நல்ல மதிப்பு இருக்கும். கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு பிரகாசமாக இருக்கும். வீடு, வாகனம் அமையும் அல்லது மாற பலன் உண்டு. நோய் துன்பம் விலகும். கடன் அடைபடும். புதிய முதலீடு, தொழில் வாய்ப்பு உண்டு. எடுத்தகாரியத்தை சரியாகசெய்து முடிக்க தெய்வ உதவி கிட்டும்.

### துலாம்

*சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.*

குரு ஒன்பதாம் வீட்டில் இருப்பது யோகமான காலம். எடுத்த காரியம் எல்லாம் நல்லபடியாக முடியும். பணப்புழக்கம் அதிகரிக்கும். மதிப்பு உயரும். திருமண வாய்ப்பு பிரகாசம். வெளிநாட்டுப் பிரயாணம் அனுகூலமாகும். குரு இராசியை நோக்குவது கவச குண்டலம் அமைந்தது போல நல்ல பாதுகாப்பு இருக்கும். சகோதரச் சிறப்பு உண்டு. புத்திரச் சிறப்புண்டு.

### விருச்சிகம்

*விசாகம்4, அனுஷம், கேட்டை.*

எட்டாம் வீட்டில் குரு சஞ்சரிப்பது பல தொல்லைகளைத் தரலாம். பணத்தட்டுப்பாடு இருப்பினும் சமாளிப்பீர்கள். எடுத்த செயல் எல்லாம் தடைப்பட வாய்ப்புள்ளது. அயன, சயன சுகம் உண்டு. வீடு, வாகனம் விற்க, வாங்க பலன் உண்டு. உடற் சுகம் சிறிது பாதிக்கலாம். திசை புத்தி நல்லதாயின் பலன்களில் மாறுதல் ஏற்படலாம்.

### தனு

*மூலம், பூராடம், உத்தராடம் 1..*

இராசிக்கு சமசப்தமம் ராசியான ஏழாம் வீட்டில் இருந்து இராசியை நோக்குவது பல வழிகளிலும் சிறப்பைத் தரும். நோய் விலகும். வருவாய் அதிகரிக்கும். நண்பர்களால் பலத்த ஆதரவு இருக்கும். திருமணம் நிறைவேறும். குடும்பத்தில் அன்பும், மகிழ்ச்சியும் இருக்கும். சகோதரச் சிறப்புண்டு. எந்நேரமும் புன்சிரிப்பும் முகமலர்ச்சியும் இருக்கும்.

### மகரம்

*உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2.*

ஆறாம் வீடு பொதுவாக நோய், கடன், சிறை, எதிரி, அவப் பெயர் ஆகிய பதங்களை, பண்புகளைக் குறிப்பதால் மிக அவதானமாக இருப்பது மேல். தொழில் முன்னேற்றம் இருக்கும். அயன, சயன சுகம் உண்டு. கையில் பணம் புழங்கும். திருமணப் பேச்சு தடைப்படலாம். திசை புத்தி சாதகமாக அமையுமானால் பலனில் மாறுதலை எதிர்பார்க்கலாம்.

### கும்பம்

*அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.*

குரு ஐந்தாம் வீட்டில் சஞ்சரிப்பது யோகமான காலம். எடுத்த காரியம் எல்லாம் வெற்றியில் முடியும். தெய்வீக பக்தி தலயாத்திரை அமையும். வருவாய் அதிகரிக்கும். நோய் துன்பம் விலகும். வீட்டில் நன்மையான காரியங்கள் நடைபெறும். திருமண வாய்ப்பு உண்டு. குழந்தைகளின் செயலால் மனநிறைவு ஏற்படும். அமைதியான காலம்.

### மீனம்

*பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.*

குரு சுபஸ்தானமான நான்காம் வீட்டில் இருப்பது பெரிதாக நன்மை இல்லாவிடினும் தீமை இல்லை. நோய் விலகும். தொழில் விருத்தி, பதவி உயர்வு உண்டு. சில சமயம் இடமாற்றம், வீடு மாற்றம் நிகழ வாய்ப்பு உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. வீடு, வாகனம் வாங்கப் பலன் உண்டு. இனபந்துக்களுடன் சில சமயம் பகை கொள்ள இடம் உண்டு.

(ராசி பலன் 14ஆம் பக்கம்)

LINK-Salt to taste LINK-Salt to taste LINK-Salt to taste
சிறந்த தரத்திற்கான சர்வதேச விருதுபெற்ற லிங்க் அயடீன் கலந்த உப்பு
Link Imports & Exports (Pvt)Ltd.
86/1, Chatham Street, Colombo - 01.
Tel : 321085 TeleFax : 435959E-Mail :link@scienceland.lk

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் (நேரடிஒளிபரப்பு) குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | இசைக்கோலம் |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | வசந்த நிலா |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | ஸ்டார் ஷோ |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகனே | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | சாவித்திரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | ஜன்னல் |

# போரினால் அழியும் சமூகத்தை மது பாவனை சீரழிக்கும் அபாயம்!

## கசிப்பை ஒழிக்க திரளும் சமூகம்

கசிப்பு உற்பத்தியைத் தடுப்பதானால் சாராயத்தின் விலையைக் குறையுங்கள்.

யாழ் மாநகர சபை உறுப்பினர் ஒருவர் கூறிய ஆச்சரியமான ஆலோசனை இது. இந்தளவுக்கு கசிப்பு உற்பத்தி மற்றும் சட்டவிரோத மதுபான விற்பனை குடாநாடு எங்கும் பெருகி உள்ளது.

கிராமங்கள் தோறும் கசிப்பு உற்பத்தி குடிசைக் கைத்தொழில் போன்று பெருகி விட்டது.

போரினால் அழிந்துபோன தமிழ்ச் சமுதாயத்தை கசிப்பு மற்றும் மது பாவனை மேலும் சீரழித்து விடுமோ என்ற அச்சம் சகல தரப்பினரிடையேயும் எழுந்திருக்கிறது.

குடாநாட்டில் சட்டரீதியாக விற்பனை செய்யப்பட்ட மதுபானத்தின் அளவு விவரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

அந்தப் புள்ளி விவரங்களின்படி குடாநாட்டு மொத்தச் சனத்தொகையின் எண்ணிக்கையிலும் பார்க்க ஆண்டு தோறும் நுகரப்படும் மதுவின் அளவு (லீற்றரில்) அதிகரித்து வருகிறது.

1998 ஆம் ஆண்டு குடாநாட்டின் மொத்த சனத்தொகை 4 இலட்சத்து 57 ஆயிரத்து 267 ஆகும். அந்த ஆண்டு சட்டரீதியாக விற்பனை செய்யப்பட்ட மதுபானங்களின் அளவு 4 இலட்சத்து 80 ஆயிரத்து 603 லீற்றர்கள்.

இதேபோன்று 1999 ஆம் ஆண்டு மொத்தச் சனத் தொகை எண்ணிக்கை 4 இலட்சத்து 91 ஆயிரத்து 7 ஆகும். அந்த ஆண்டு விற்பனையான மதுபானத்தின் அளவு 5 இலட்சத்து 91 ஆயிரத்து 963 லீற்றர்கள்.

இந்த எண்ணிக்கை 2000 ஆம், 2001 ஆம் ஆண்டுகளில் மேலும் உயர்ந்திருக்கிறது. இவை சட்டரீதியாக விற்கப்பட்ட மதுபானங்களின் அளவு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கசிப்பு, கள்ளு என்பன இவற்றில் உள்ளடக்கப்பட வில்லை.

1999 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் அனுமதிக் கப்பட்ட மதுபான நிலையங்களின் (பார்கள்) எண்ணிக்கை 30 ஆகும். அதேவேளை இந்த எண்ணிக்கை யைப் போன்று 10 மடங்குகளுக்கும் அதிகமான மதுபான நிலையங்கள் சட்டவிரோதமாக இயங்கி வருவதாக மதுவரித் திணைக்கள வட்டாரங்கள் கூறுகின்றன.

சட்டபூர்வமான அனுமதியுடன் இயங்கும் மதுபான நிலையங்களிலும் கசிப்பு போன்ற வடிசாராய வகைகள் சட்டவிரோதமாக ஒளித்து மறைத்து விற்பனை செய்யப்படுகின்றன.

யாழ். நகரில் உள்ள சில மதுபான நிலையங்களின் பின்புற மறைவிடங்களுக்குச் சென்று கேட்டால் கசிப்பு தாராளமாகக் கிடைப்பதாகத் தகவல்.

குடாநாட்டில் மது நுகர்வும் அதனால் ஏற்படும் சமூகச் சீரழிவுகளும் கிடுகிடுவென உயர்ந்து செல்வது கண்டு வெகுண்டெழுந்திருக்கின்றனர் பல்கலைக்கழகச் சமூகத்தினர்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் உரிமைகளுக் காக ஒன்று திரண்டு குரல் எழுப்பிய பல்கலைக்கழக சமூகம் தற்போது சட்ட விரோத மதுபாவனையையும் அதனால் ஏற்படும் சீரழிவுகளையும் தடுக்கும் நோக்குடன் குடாநாட்டுச் சமூகத்தை ஒன்று திரட்டியுள்ளது.



பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் கடந்த 8ஆம் திகதி நடத்தப்பட்ட சட்ட விரோத மதுபான உற்பத்தி, விற்பனைக்கு

**வடபுலத்தில்**

எதிரான மாநாட்டில் அவற்றுக்கு எதிரான தேசியக் கருத்து ஒன்று திரட்டப்பட்டிருக்கிறது.

யாழ். மாவட்ட நீதிபதிகளின் முழு ஒத்துழைப்புடன் தடுப்புப் பணிகளை முடுக்கி விடுவது என்றும் இதற்காக சமுதாய மட்டத்தில் விழிப்புக் குழுக்களை நிறுவுவது என்றும் அந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

யாழ். மாவட்ட நீதிபதிகள், அரசாங்க அதிபர் பிரதேச செயலர்கள், விரிவுரையாளர்கள், மருத்துவர்கள், மதகுரு மார், மதுவரித் திணைக்கள அதிகாரிகள், பத்திரிகையா ளர்கள், மாணவர் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங் களின் பிரதிநிதிகள் எனப் பலர் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## கசப்பான அனுபவம்

தெய்வத்துக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்பட வேண்டியவர்கள் மருத்துவர்கள் என்று கூறுவார்கள்.

அவல மரணங்களும் நோய் நொடிகளும் மலிந்து போன குடாநாட்டில் மக்கள் டாக்டர்களையே தெய்வங்க ளாகக் கருதி மதிக்கின்றனர். ஆனால் பிரபல டாக்டர் ஒருவரைக் கண்டால் பெண்கள் — குறிப்பாக இளம் பெண்கள் — அஞ்சி நடுங்குகிறார்களாம்.

அந்த டாக்டர் சிகிச்சைக்காகச் செல்லும் இளம் பெண்கள் மீது புரியும் அங்க சேஷ்டைகள் அளவு மீறிச் செல்வதாகப் பாதிக்கப்பட்ட பெண்களின் சார்பில் பல முறைப்பாடுகள் சுடரொளிக்குக் கிடைத்திருக்கின்றன.

கடைசியாக தோள்மூட்டில் ஏற்பட்ட வலிக்காக சம்பந்தப்பட்ட டாக்டரின் கிளினிக்குக்குச் சென்ற ஓர் இளம் யுவதிக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம் குறித்து தற்பொழுது பரவலாகப் பேசப்படுகிறதாம்.

## மாணவர் கோஷ்டி ரவுடித்தனம்

குடாநாட்டில் இளைஞர் கோஷ்டிகளின் அட்டகாசங்கள் குறித்து கடந்த வாரம் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம். யாழ். புறநகர்ப் பகுதியான அத்தியடியில் இளம் மாணவர் கோஷ்டி ஒன்று கடந்த வாரம் புரிந்த ரவுடித்தனங்கள் யாழ். நகர மக்களின் கவனத்தை ஈர்த்துவிட்டிருக்கிறது.

யாழ். நகரின் இரு பிரபல பாடசாலை மாணவர்கள் அடங்கிய கும்பல் ஒன்று தமிழ் சினிமாப் பாணியில் அட்டகாசம் புரிந்திருக்கிறது.

சட்டத்தரணி ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து ரகளை பண்ணியதை அடுத்து இக் கோஷ்டியைச் சேர்ந்த மாண வர்களைக் கைதுசெய்து விசாரிக்குமாறு யாழ். நீதிவான் உத்தரவிட்டிருக்கிறார்.

பாடசாலை மாணவி ஒருவர் சம்பந்தப்பட்ட பிரச்சினையே மாணவர்களின் இந்த சினிமாப் பாணி அட்டகாசத்துக்குக் காரணம் என்று தெரிய வருகிறது.

தற்போது அந்தப் பகுதியில் பொலிஸ் ரோந்து தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. மாணவர்கள் சிலரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

## யாழ். சேவை யாருக்கு?

இலங்கை வானொலியின் யாழ். சேவை ஒலிபரப்பு குடாநாட்டு மக்களுக்குப் பயனுள்ள பல நல்ல சேவை களை வழங்கி வருகிறது. ஆனால் அதில் ஒரு குறை.

அந்த வானொலி சேவையில் தினமும் இரவு 9.00 மணி செய்திக்குப் பின்னர் 'குடாநாட்டுச் செய்திகள்' என்ற தலைப்பில் செய்தித் தொகுப்பு நிகழ்ச்சி ஒன்றை ஒலிபரப்புகின்றனர். ஆனால் அந்த நிகழ்ச்சி முழுக்க முழுக்க தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் புகழ்பாடுவதாகப் பலரும் குறைபட்டுக் கொள்கிறார்கள்.

குறிப்பிட்ட அரசியல் கட்சி சம்பந்தமான — அக்கட்சியின் செய்திப் பிரிவினால் வழங்கப்படும் — செய்திகள் மட்டுமே 'குடாநாட்டுச் செய்திகள்' என்னும் பொதுத் தலைப்பின் கீழ் வாசிக்கப்படுவதாக யாழ். வாசி ஒருவர் சுட்டிக்காட்டியிருக் கிறார்.

— வலிகாமத்தான்




## பக்ஸில் வந்த வேண்டுகோள்

பத்து தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் தற்போதைய செயலற்ற நிலையையும், உள்கசமுசாவையும் கேள்விப் பட்ட, அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழ் வானொலி நிலையம் ஒன்றின் உரிமையாளர் உள்ளம் கலங்கிப் போயிருக்கிறாராம்.

இதனால் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சி முக்கியஸ்தர்கள் சிலருக்கு பக்ஸ் மூலம் அவசர வேண்டுகோளை அவர் விடுத்துள்ளாராம்.

பத்து தமிழ்க்கட்சிகளும் குரோதங்களை மறந்து ஒன்றுபட்டு தீவிரமாக செயற்பட வேண்டும். இரண்டெ ழுத்து தமிழ் இயக்கக்காரர்கள் குரல் எழுப்பும் போது அதனை மக்களின் குரலாக வெளிப்படுத்த கூட்டமைப் பின் தீவிர, நீடித்த செயற்பாடு பேருதவியாக இருக்கும். இதுவே இரண்டெழுத்து இயக்க ஆதரவாளர் களின் கருத்து என்று அந்த வேண்டுகோளில் அந்த வானொலிக்காரர் கேட்டிருக்கிறாராம்.

## ஆஸியில் அமோக அழைப்பு

சமீபத்தில் பெருங்கண்டத் தீவுக்கு போன கிழக்கின் இரண்டெழுத்து இயக்க அனுதாபியான கூட்டணிச் சிங்கத்தா ருக்கு அங்கே கடும் 'டிமாண்ட்' என்று செய்தி வந்திருக்கிறது.

அந்தச் சிங்கம் அங்கு போய்ச் சேர்ந்த நாளில் இருந்து இரண்டெழுத்து இயக்க ஆதரவாளர்கள் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்குகள், விழாக்கள், கலந்துரையாடல்கள் ஆகிய வற்றில் ஓய்வின்றி அடுத்தடுத்துக் கலந்து கொண்டார் என்று அந்தச் செய்தி தெரிவிக்கிறதாம்.

## இரத்தம் கொடுத்தால் அடியும், சூடும்

அடைக்கலமானவரின் இயக்கத்தின் இராணுவப் பொறுப்பாளரும், நிதிப்பொறுப்பாளரும் கொழும்பில் கம்பீரமான நகரக் கட்டடத்துக்கருகில் சுட்டுக் கொலை செய்யப்பட்டதன் இரண்டாவது ஆண்டு நினைவாஞ்சலி நிகழ்ச்சிகள் கடந்த வாரம் வவுனியாவில் இடம்பெற்றன.

தவசிக்குளத்தில் அன்னதானமும், வவுனியாவில் கிரிக் கட் சுற்றுப் போட்டிகளும் நடத்திய அந்த இயக்கம் இரத்ததான நிகழ்ச்சி ஒன்றையும் ஏற்பாடு செய்திருந்ததாம். வவுனியா ஆஸ்பத்திரியில் வைத்து அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இரத்ததானம் செய்தார்களாம்.

முன்பெல்லாம் இந்த இயக்கத்தின் 40 தொடக்கம் 50 பேர் வரை ஒரே நேரத்தில் இரத்ததானம் செய்வதுண்டாம். ஆனால் இம்முறை 15 பேர்தான் இரத்தம் கொடுத்தார்களாம். இரத்தம் தேவையானால் தொடர்புகொள்ள வேண்டிய சுமார் 40 பேரின் பெயர் முகவரிகள் ஆஸ்பத்திரி இரத்தவங்கி யிடம் கொடுக்கப்பட்டதாம்.

ஏன் இப்படி?

''எமது மக்களின் உயிரைப் பாதுகாக்கவே எமது இரத்தத்தைப் பயன்படுத்த வேண்டும். ஒரே நேரத்தில் பெருமளவினர் இரத்ததானம் செய்தால் பயன் அடைவது சீருடைக்காரர்கள் தான். பொல்லுக்கொடுத்து அடிவாங்கும் நிலைமை எமக்கு வேண்டாம்.''

இப்படி யதார்த்தமாக விளக்கும் அந்த இயக்க முக்கியஸ்தர் களுக்கு சீருடைக்காரர்கள் மீது அப்படியொரு வெறுப்பாம்.

## தனித்துவத்தின் எதிரான வாக்குகள்

மாவனல்லை வன்முறைச் சம்பவங்களுக்காக நேரடி யாக குற்றம் சாட்டப்பட்ட அதிகாரத்தரப்பு பேரினவாத அமைச்சருக்கு எதிராக பச்சைக் கட்சிக்காரர்கள் கொண்டு வரப்போகும் நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து தனித்துவக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மத்தியில் அதிகமாக அவசரப்படுகிறதாம்.

அந்த அமைச்சருக்கு எதிராக நேரடியாகவும் பகிரங்க மாகவும் குற்றம் சாட்டிய தனித்துவக்கட்சியின் தலைவர் பச்சைக் கட்சியின் அந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பாரா அல்லது ஆதரவாக வாக்களிப்பாரா என்றே அந்த முக்கியஸ்தர்கள் அலசுகிறார்கள்.

அதிகார அம்மணியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை யில் திருத்தம் செய்து கைச்சாத்திட்டுவிட்டால் தனித்துவத் தலைவரின் ஆவேசம் எல்லாம் அடங்கிவிடும் என்று அவர் தலைமைத்துவத்துக்கு எதிரானவர்கள் கொக்கரிக்கிறார்களாம்.

ஆனால் அவருக்கு ஆதரவான, அவருடன் கூட இருப்ப வர்களே அந்த அமைச்சருக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று தனித்துவ தலைவரிடம் வலியுறுத்துகிறார்களாம்.

''நாங்கள் அதிகாரத்தரப்பு ஆட்சி கவிழ வாக்களிக் காமல் இருக்கலாம். ஆனால் அந்த அமைச்சருக்கு எதிரா கவே வாக்களிக்க வேண்டும். அப்படிச் செய்ய நாம் தவறு வோமேயானால் அதன்பின் மக்கள் முகத்தில் விழிக்க முடியாது'' என்று ஆவேசமாகப் பேசுவது எதிராக வாக்க ளிப்பதை உறுதிப்படுத்துகிறதாம்.

## இடம் மாறிய தலைமையகம்

அதிகாரத்தரப்பாருக்கு ஆதரவு கொடுக்க மறுத்த சீரு டைக்காரர்களினால் ஆயுதம் களையப்பட்ட அந்த இயக்கத்துக்கு இப்போது கஷ்டகாலமாம்.

தலைநகரில் இரு தடவைகள் தலைமை அலுவலகத்தை மாற்றிவிட்ட அந்த தமிழ்க் கட்சிக்கு அதிகாரமன்றில் உறுப் புரிமை பெற்றோர், வசதிபடைத்தோர் இருந்த போதிலும் கூட அவர்களால் கூட அந்தக் கஷ்டத்தைப் போக்க முடியவில்லை. இப்படி அந்தக்கட்சிக்குள் சிலர் குறைபட்டுக்கொள்கிறார்கள்.

நிதிப்பற்றாக்குறை காரணமாக பாவனையில் இருந்த ஐந்து தொலைபேசிகள் படிப்படியாகக் குறைந்து கடைசி யில் ஒன்றாக மாறியிருந்தது. பின்பு அதுவும் வெட்டப் பட்டுவிட்டதாம். விசாரித்ததில் தான் இந்த 'கஷ்ட ஜீவனம்' தகவல் வெளியாகியது.

கொழும்பு — 3 பகுதியில் ஆடம்பரமான பகுதியில் அந்த தமிழ்க் கட்சியின் தலைமையகம் இருந்தது. திடீர் என்று அந்தக் கட்டடத்தின் சொந்தக்காரர்கள் அதனை மீளக்கேட்டு வற்புறுத்தினார்களாம்.

புதிய இடம் தேடிக் கிடைக்காமை, கிடைத்தாலும் எதிர் பார்க்கப்படும் முற்பணத் தொகையைக் கொடுக்க முடியாத நிதிப் பற்றாக்குறை முதலான காரணங்களால் தலைமை யகத்தை வவுனியாவுக்கே மாற்றிவிட்டார்களாம். முக்கிய பல புள்ளிகளும் இதனால் அங்கு இடம் மாறிவிட்டார்களாம்.

## பால், நெய், ஆடை, மானம்

பால் பொங்கி வரும் நேரம் தாழியை உடைப்பது போல இரண்டெழுத்து இயக்கக் காரர்களும், அதிகாரத் தரப்பாரும் பேச்சுக்கு தயார் ஆகும் போது பச்சைக் கட்சியின் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிகளுக்கு ஆதரவு கொடுக்கக் கூடாது என்று கிளிநொச்சி ஆனந்தமானவர் கூறி இருந்தார்.

இப்பேச்சு இன்னுமொரு தமிழ்க் கட்சியின் கூத்தனா ருக்கு பெருத்த கோபத்தை ஏற்படுத்திவிட்டதாம்.

''அதிகார அம்மணி தரப்பில் பாலும் இல்லை; நெய்யும் இல்லை, ஆடையும் இல்லை. அப்படியிருக்க அந்தத் தமிழ்க் கட்சிக்காரர் மட்டும் மானம் இல்லாமல் எங்களுடன் மோதவந்து விட்டார்'' என்று பல முக்கியஸ்தர்களிடம் கூத்த னார் இரட்டை அர்த்தமாப் பேசி வருகிறாராம்.

இன்னுமொரு தமிழ்க் கட்சியின் முக்கிய தலைவரும் ஒட்டு மொத்தமாக இப்போது ஆனந்தமானவர் சார்ந்த தமிழ்க் கட்சியைச் சாடத் தொடங்கியுள்ளாராம்.

# ஆறு மாதக் கெடு முடியும் முன்னர் ஜெயலலிதா அடுத்த வேட்டை!

ஜெயலலிதா எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் அவருக்கு சாதகமாகவே அமைந்து அவர் எண்ணப்படியே தமிழக முதலமைச்சராகி விட்டார்.

ஜெயலலிதா அடுத்து வரும் ஆறு மாத காலத்துக்குள் தமிழக சட்டசபை இடைத் தேர்தல் ஒன்றில் போட்டியிட்டு சட்டசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுவிட வேண்டும். தமிழக ஆளுநர் விதித்த இந்த நிபந்தனையை உரிய காலக்கெடுவுக்குள் ஜெயலலிதா நிறைவேற்றி விடுவார் என்றே அ.தி.மு.க தொண்டர்கள் நம்புகிறார்கள்.

ஆயினும், ஜெயலலிதா அந்தக் காலக்கெடுவுக்குள் மற்றொரு வேட்டையை நடத்தத் தயாராகிவிட்டார்.

ஜெயலலிதாவின் புதிய அமைச்சரவை கூடி நிறைவேற்றிய முதலாவது தீர்மானம் தமிழக உள்ளூராட்சி சபைகளுக்கு உடனடியாகத் தேர்தல் நடத்துவது என்பது பற்றியேதான்.

தமிழக மாநகர சபைகள், நகர சபைகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் பெரும்பான்மையானவை தி.மு.க வின் கீழ்தான் இருக்கின்றன. அ.தி.மு.க வசம் இருப்பவை ஒரு சிலவே.

தமிழக சட்டசபைத் தேர்தலில் 80 சதவீதமான வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்றது அ.தி.மு.க அணி. எனவே இந்த வெற்றிக்களிப்பைத் தமக்கு

பக்கத்து வீடு

சாதகமாகப் பயன்படுத்தி தமிழக உள்ளூராட்சி சபைகளையும் சூறையாடிவிட வேண்டும் என்று ஜெயலலிதா துடிக்கிறார்.

தமிழக உள்ளூராட்சி சபைகளில் தி.மு.க வுக்கு அடுத்த படியாக அதிகளவு சபைகளைத் தம்வசம் வைத்திருப்பது தமிழ் மாநில காங்கிரஸ் ஆகும். மூப்பனாருக்கு கருணாநிதி முன்னர் தானம் செய்தவை இவை. கருணாநிதியைத் தாக்குவதற்கு ஜெயலலிதா எடுத்து வைக்கும் இந்த அடி மூப்பனாரையும் தாக்கவே செய்யும்.

1996ஆம் ஆண்டு நடந்த தமிழக சட்ட சபைத் தேர்தலில் தி.மு.க அமோக வெற்றி பெற்றது. உடனடியாகவே தமிழக உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தி பெருவெற்றி கண்டார் கருணாநிதி. அப்போது மூப்பனார் கருணாநிதி அணியில் இருந்ததால் குறிப்பிடத்தக்க உள்ளூராட்சி சபைகள் மூப்பனாருக்கும் கிடைத்தன. இப்போது அவைகளைப் பறிக்கப் போகிறார் ஜெயலலிதா. அதுவும் கருணாநிதி பாணியில்.

இதற்கிடையில் தேர்தலில் வெற்றிபெற்றிராத ஜெயலலிதா தமிழக முதலமைச்சரானது போல, பாண்டிச்சேரிக்கும் ஆறு மாதக்கெடுவுடன் முதலமைச்சர் ஒருவர் பதவியேற்கப் போகிறார்.

காங்கிரஸ் தலைவி சோனியாவின் தொண்டரான ப.சண்முகம் தற்போது முதலமைச்சராக இருக்கிறார். ஆயினும் தேர்தலில் அவர் போட்டியிடவில்லை. ஆட்சி அமைக்கும் தகுதியைக் காங்கிரஸ் பெற்றிருப்பதால் ப.சண்முகமே மீண்டும் முதலமைச்சராகிறார். ஆயினும் அவர் ஆறு மாதங்களுக்குள் சட்டசபை உறுப்பினராகத் தெரிவாக வேண்டும்.

ஆறு மாதக் கெடுவை ஜெயலலிதா நிறைவேற்றினாலும் சண்முகம் நிறைவேற்றுவது கஷ்டம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அவருக்கு ஜெயலலிதாவின் கடாட்சம் தேவைப்படுகிறது.

தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா பதவியேற்ற பிரச்சினை இந்தியாவில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. இருப்பினும், தமிழக ஆளுநர் பாத்திமா பீபி திடமனதுடன் ஜெயலலிதாவுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

அ.தி.மு.க வேட்பாளர் பட்டியலை ஆளுநரிடம் கையளித்த போது ஜெயலலிதா மிகவும் பரபரப்புடனேயே இருந்தார்.



''நான் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளலாமா?'' என்று மெல்லிய குரலிலேயே கேட்டார்.

''சட்டமா அதிபருடன் ஆலோசனை நடத்திவிட்டு இது பற்றி அறிவிக்கிறேன்'' என்று ஆளுநர் பதில் தருவார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. சட்டமா அதிபர் வெளிநாடு சென்றிருந்ததால் அவருடன் ஆளுநர் தொடர்பு கொள்ள நாட்கள் எடுக்கும். எனவே பிரச்சினை சூடுபிடிக்கும் என்றே அனைவரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், ஆளுநர் பாத்திமா பீபி சட்டமா அதிபருடன் தொடர்பு கொள்ள முயலவில்லை. தாமே முடிவெடுத்தார். மத்திய அரசின் தூதுவர் என்னும் நிலையில் தமிழ் நாட்டில் பணியாற்றுகிறோமே என்று அவர் தயக்கம் காட்டவில்லை. ஜெயலலிதா கேட்டதுமே ''தாராளமாக நீங்கள் பதவியேற்றுக் கொள்ளலாம்'' என்று கூறிவிட்டார்.

ஆளுநரின் சம்மதம் கிடைக்கும் என்று எதிர்பார்த்திராத ஜெயலலிதா உஷார் நிலையை அடைந்தார். ஆளுநர் 'தயார்' என்று கூறியதுமே அடுத்த சில மணிகளிலேயே முதலமைச்சர் பதவியைத் தாம் ஏற்றுவிட வேண்டும் என்று துடித்தார். ஆளுநர் சம்மதம் தெரிவித்தது பற்றி அவர் யாரிடமும் கூறவில்லை.

ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவியேற்பதை நீதிமன்ற உத்தரவு மூலம் தடுப்பதற்கு சிலர் முயற்சி செய்து கொண்டிருந்த நேரம் அது. எனவே, அத்தகைய உத்தரவு பெறப்படுவதற்கு முன்னரே தான் முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து விட வேண்டும் என்று ஜெயலலிதா துணிந்து நின்று காரியமாற்றினார்.

ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவியேற்ற அதேநேரம் ஐந்து அமைச்சர்களும் பதவிப் பிர்மாணம் செய்து கொண்டார்கள். மு.தம்பித்துரை, சி.பொன்னையன், டி.ஜெயகுமார் ஆகிய பழைய அமைச்சர்களுடன் அய்யாறு வாண்டையார், ஆர்.சரோஜா ஆகியோரும் அமைச்சர்களாகினர்.

பின்னர், 19 அமைச்சர்கள் சனிக்கிழமை பதவியேற்றார்கள். இவர்கள் அனைவரும் புதியவர்கள். முதலமைச்சர் ஜெயலலிதாவின் புதிய அமைச்சரவையில் 24 அமைச்சர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 21 அமைச்சர்கள் புதியவர்கள். அவர்களிலும் அநேகமானவர்கள் முதற் தடவையாக சட்ட சபைக்குத் தெரிவாகியிருக்கிறார்கள்.

ஜெயலலிதாவின் அமைச்சரவையில் மாத்திரம் இளம் இரத்தங்கள் இடம்பெறவில்லை. தமிழக சட்டசபையிலேயே மொத்தமுள்ள 234 பேரில் 170 பேர் புதியவர்கள்தான். இவர்களில் 7 புதியவர்கள் தி.மு.க அணியில் இடம்பெறுகிறார்கள். ஏனையோர் அ.தி.மு.க அணியினர்.

— கதாசி

## சிறைத் தண்டனை பெற்றவர் மந்திரியாக முடியாது; முதலமைச்சர் ஆகலாம்

ஜெயலலிதாவின் வேட்புமனுக்கள் மறுக்கப்பட்ட போது அதனை ஒரு பெரிய பிரச்சினையாக அவர் எடுத்துக் கொண்டார்.

''கேரளத்தில் பாலகிருஷ்ணபிள்ளை என்பவர் ஐந்து ஆண்டு காலச் சிறைத் தண்டனை பெற்றவர். அவருடைய வேட்பு மனுவை அங்கு ஏற்றிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் 3 ஆண்டு காலச் சிறைத்தண்டனை பெற்ற எனது வேட்பு மனுவை ஏற்க மறுத்து விட்டார்கள். கருணாநிதியின் சர்வாதிகாரச் செயல் இது''— என்று ஜெயலலிதா பிரசாரம் செய்தார்.

அந்த அனுதாப அலை தமிழகத்தில் அம்மாவுக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது. தேர்தலில் போட்டியிட முடியாது போன ஜெயலலிதா தனது கட்சி தேர்தலில் வெற்றி பெற்றதால் முதலமைச்சராகி விட்டார். அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்திருக்கிறார் தமிழக ஆளுநர்.

ஆனால் கேரளாவில் வேட்புமனு ஏற்கப்பட்டு தேர்தலில் நின்ற பாலகிருஷ்ணபிள்ளையின் கட்சி தேர்தலில் வென்று ஆளுங்கட்சியாகியிருக்கிறது. முதலமைச்சர் ஏ.கே.அந்தோனி பாலகிருஷ்ணபிள்ளையை தமது அமைச்சரவையில் சேர்க்க முன்வந்தார்.

ஆனால் கேரள ஆளுநர் சுகதேவ் சிங், பாலகிருஷ்ண பிள்ளைக்குப் பதவிப்பிரமாணம் செய்து வைக்க மறுத்து விட்டார். இங்கே அம்மாவுக்கு ஒரு நீதி. அங்கே பிள்ளைக்கு ஒரு நீதி.

தமிழக ஆளுநர் பாத்திமா பீபியும் கேரள ஆளுநர் சுகதேவ் சிங்கும் இந்திய மத்திய அரசின் தூதுவர்களாக இரு மாநிலங்களில் பணியாற்றுகிறார்கள். ஆனால் ஒரே தன்மையான நிருவாகப் பணிகளை வெவ்வேறுவிதமாக மேற்கொண்டிருக்கிறார்கள்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை மிகவும் ஐயப்பாட்டுடன் மக்கள் நோக்க வேண்டிய கட்டம் வந்திருக்கிறது.

# முதல்வரின் மேஜை மீது எம்.ஜி.ஆர் படத்தை ஏன் வைக்கவில்லை?

## அவசரமாகப் பதவியேற்ற 'ஜெ'யின் முதல் கேள்வி?

தமிழ்நாடு சட்ட சபைத் தேர்தலில் அ.தி.மு.க அமோக வெற்றி பெற்றதில் கட்சித் தொண்டர்களிடையே அளவு கடந்த குதூகலம். ''அம்மாவுக்கு ஜே....'' என்று அ.தி.மு.க மகளிர் அணியினர் ஒருபுறத்தில் வீதிகளில் சிதறு தேங்காய் உடைப்பு. மறுபுறத்தில் போயஸ் கார்டன் பங்களாவுக்கு வெளியே திரண்ட தொண்டர்கள் ஸ்வீட்டுகளை அள்ளி வழங்குகிறார்கள். தேர்தலில் வென்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏக் கள் தலைமைக் கழகத்தில் கூடி மகிழ்ச்சி கொண்டாட்டம்.

இந்த குதூகலத்துக்கும் கொண்டாட்டத்துக்கும் மத்தியில் மிகப் பெரியதொரு சஸ்பென்ஸ் எல்லோர் மனதிலும் இருந்தது. முதல்வராகப் பதவியேற்க ஜெயலலிதாவை ஆளுநர் அழைப்பாரா? மாட்டாரா? என்பதே அது.

இந்த சஸ்பென்ஸுக்கு மத்தியில் கட்சி அலுவலகத்துக்கு ஜெயலலிதா பிற்பகலில் வந்தார். யாரிடமும் மலர்க் கொத்தோ, சால்வையோ வாங்காமல் நேராக எம்.எல்.ஏக்கள் இருந்த மண்டபத்துக்குச் சென்றார். 15 நிமிடங்களின் பின் ஆளுநரின் மாளிகைக்கு விரைந்தார். அங்கு ஆளுநருடன் பத்து நிமிடங்கள் ஆலோசனை நடத்தினார். பின் வெளியே வந்து காரில் பறந்துவிட்டார்.

இதேநேரம், போயஸ் தோட்டத்தில் பலவாறான பேச்சுக்கள் ''டில்லியில் இருந்து மத்திய உள்துறைச் செயலாளர் இரண்டு முறை ஆளுநர் பாத்திமா பீபியுடன் பேசியிருக்கிறார். மத்திய அமைச்சர் மாறனும் ஆறு, ஏழு தடவைகள் தொலைபேசியில் பேசியிருக்கிறார். ஆளுநரின் மனதைக் கலைக்க முயற்சி நடக்கிறதோ! என்று சந்தேகமாக இருக்கிறது. டில்லியில் உள்ள சட்ட நிபுணர் யாராவது உச்ச நீதிமன்றத்தில் பொதுநலவழக்கு போட்டாலும் போடலாம்'' என்று அங்கு பேசப்பட்டது.

மே மாதம் 18 ஆம் திகதியே பதவி ஏற்பதென ஜெயலலிதா முதலில் நினைத்திருந்தாராம். ஆனால் நிலைமைகள் கண நேரத்தில் மாறிப்போனதால் 14ஆம் திகதியே பதவி ஏற்க முடிவானது . இதன்படியே ஏற்பாடுகள் எல்லாம் விரைவுபடுத்தப்பட்டன.

ஜெயலலிதா ஆளுநருடன் ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கையில் ''இன்று நல்லநாள். நாளை அஷ்டமி தினம். அதனால்.... என்று கூறவே'' இன்றே கூட நீங்கள் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளலாமே'' என்று ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆளுநரின் அழைப்போடு போயஸ் தோட்டத்துக்கு திரும்பிய ஜெயலலிதா சற்றும் தாமதிக்கவில்லை. அவசர அவசரமாகச் செயற்பட்டார். பதவியேற்பு விழாவைச் சிறப்பாகச் செய்ய திட்டமிட்டிருந்த அவர் அதனைக் கைவிட்டார். எளிமையாக பதவியேற்பு வைபவத்தை நடத்த அதிகாரிகளுக்கு உத்தர விட்டார். பதவியேற்பு விழாவுக்கு வரச் சொல்லி கூட்டணிக் கட்சித் தலைவர்களை தொலைபேசியிலேயே அழைத்தார்.

பதவியேற்பு விழாவுக்காக புதிய எம்.எல்.ஏக்கள், கூட்டணித் தலைவர்கள் என்று பலரும் கூடியிருந்தனர். ஆனால், கூட்டணிக்கட்சியான பா.ம.க தலைவர் ராமதாஸ் வரவில்லை. கடைசியாக ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான சசிகலா விழா அரங்கத்திற்குள் நுழைந்தார். இறுதியில் ஆளுநர் பீபி, ஜெயலலிதா, தலைமைச் செயலாளர் முத்துசாமி ஆகியோர் வந்து சேர்ந்தனர். ஜெயலலிதா தமிழில் உறுதிமொழியைப் படித்தார்.

ஆளுநர் மாளிகையை விட்டு வெளியே வந்த முதலமைச்சர் ஜெயலலிதாவை தொண்டர்கள் கோஷமிட்டு வாழ்த்தினர். மாளிகைப் படிக்கட்டுகளில் அவர் இறங்கிக் கொண்டிருக்க மின் விளக்குகள் பட்டென அணைந்தன. மாளிகை ஜெனரேட்டர்கள் உடனே இயக்கப்பட்டு வெளிச்சம் வந்தது.

அ.தி.மு.க பிரமுகர்கள் சிலர் மின்துறை அமைச்சராக இருந்த ஆற்காடு வீராசாமி தான் காரணம் என்று சப்தமிட்டனர். உடனே அவர்கள் பக்கம் திரும்பிய முதல்வர் ''அதெல்லாம்'' இருக்காது. இருந்தாலும் இனி நடக்காது'' என்று அமைதியாகக் கூறி விட்டு காரில் ஏறினார்.

போயஸ் கார்டனுக்கு முன்கூட்டியே சென்று விட்ட சசிகலா ஆரத்தி எடுத்து ஜெயலலிதாவை வரவேற்றார்.

முதல்வர் பதவியை எப்படி அவசரக் கோலத்தில் ஜெயலலிதா ஏற்றாரோ அப்படியே தலைமைச் செயலகத்துக்கும் அவசரமாகவே சென்று கடமையையும் பொறுப்பேற்றார்.

புதிய முதல்வர் வருகிறார் என்றதுமே முதல்வர் அறையில் முதலில் மாறியது நாற்காலிதான். கடந்த ஐந்து ஆண்டுகளாக கலைஞர் கருணாநிதி உட்கார்ந்து வந்த நாற்காலியை ஊழியர் சிலர் வெளியே தூக்கி வந்தனர். புதிய நாற்காலி ஒன்று உள்ளே கொண்டு செல்லப்பட்டது.

அடுத்து தமிழகமுதல்வர் கலைஞர் டாக்டர் மு.கருணாநிதி என்ற பெயர்ப்பலகை கழற்றப்பட்டது. புதிய பெயர்ப்பலகை பொருத்தப்பட்டது. வேறு சின்னச் சின்ன மாற்றங்களுடன் அறை தயாரானது.

இரவு 8.15 மணியளவில் ஜெயலலிதா வந்தார். அறையில் நுழையும் முன் ஒரு நிமிடம் நின்று நிதானித்து வலது காலை எடுத்து வைத்து உள்ளே சென்றார். மேஜை மீது தயாராக இருந்த கோப்புகளைப் பார்த்தபடியே கதிரையில் அமர்ந்தார்.

மேஜையின் இடது புறமாகப் பார்த்த ஜெயலலிதா ''எம்.ஜி.ஆர் படத்தை ஏன் வைக்கவில்லை?'' என்று கேட்டு விட்டு கோப்புகளை எடுத்துப் பார்த்தார். புதிய முதல்வர் என்ற முறையில் முதலாவது கையெழுத்தை வைத்தார். பிறகு திரண்டிருந்த நிருபர்களுக்குப் பேட்டி கொடுத்தார்.

வெளியே வாசலில் திரண்டிருந்த அதிகாரிகள் போட்டி போட்டுக் கொண்டு பூச்செண்டுகளை வழங்கினார்கள்.

மேஜை மீது எம்.ஜி.ஆர் படத்தை வைக்கும் படி மீண்டும் ஒரு தடவை கூறிவிட்டு முதலமைச்சர் ஜெயலலிதா அங்கிருந்து வெளியேறினார்.

— எட்வேட்

நியூவோர்லியன்ஸ் கடற்கரையில் காதலர்கள் ஜோடி ஜோடியாக நிறைந்து இருக்கிறார்கள்.

பறவைகள் சரணாலயத்தில் காணப்படும் அமளி துமளி போல் ஒரே உற்சாக, மழை தூள் பரப்புகிறது.

ரோஸ்மேரியும், கிறிஸ்தோபரும் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து முத்தங்களை பரிமாறிக் கொண்டு இந்தக் கூட்டத்தில் இரண்டறக் கலந்து விடுகிறார்கள்.

அவர்கள் மிகவும் அந்நியோன்யமாக நடந்து கொள்கின்ற போதும் அது ஒரு பொருத்தமில்லாத ஜோடி என்பதை அனைத்துக் கண்களும் மௌனமாகச் சொல்லிக் கொள்கின்றன.

அவள் இளம் பெண். பதினொரு வயதான இளங்குருத்து.

அவனோ ஆஜானுபாகுவானவன், தடித்த மனிதன். 48 வயது இருக்கலாம்.

ஒரு தந்தையும் மகளும் போல் அவர்கள் தோன்றுகிறார்கள்.

# அலைகளின் நடுவில்



அதேவேளை ஆடு இலை குழைகளை 'நறுக் நறுக்'கென அரைத்து அசைபோடுவது போல சுவிங்கம் சப்பிக் கொண்டிருந்தான் ஒருவன்.

கறுப்புக் கண்ணாடிக்குள் இருக்கும் அவனுடைய கண்கள் அந்த ஜோடியை வெறித்தவாறிருக்கின்றன.

விஸ்கி அருந்துவதும், ஆலிங்கனம் செய்வதுமாகவிருந்த ரோஸ்மேரியும், கிறிஸ்தோபரும் கடலை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக நீருக்குள் இறங்கிக் கொண்டிருக்கும் அவர்கள் முற்றாகவே மூழ்கிப் போனார்கள்.

அலைகள் எகிறிக் குதித்து விசிறியடித்துக் கொண்டிருந்த கரையை நோக்கி அந்தக் கண்ணாடிக்காரன் வேகமாக ஓடினான், கரையில் நின்றான். கடலின் வெகுதொலைவு வரை அவனுடைய கண்கள் அவர்களை வேட்டையாடித் திரும்பின.

எங்கே போனார்கள்?

ஆ! அதோ, நீருக்கு மேலாகத் தலைகள் தெரிகின்றன. அடடா, மணலில் புரண்டு இப்போ நீருக்குள்ளுமா திரு விளையாடல் என அவன் எண்ணியிருக்கக்கூடும். அவன் கண்களில் பொறாமைத் தீ கொழுந்து விட்டெரிகிறது.

கடலில் இறங்கினான், மூழ்கினான். ஒரு சுறா மீனைப் போல் 'சுரீ'ரென நீரைக் கிழித்துக் கொண்டு விரைந்தான். அந்த ஜோடி நீச்சலடித்துக் கொண்டிருக்கும் திசையில் அவன் உள்நீச்சலில் சென்றான்.

* * *

நேரம் பறந்து கொண்டிருக்கிறது.

கடற்கரையின் அல்லோலகல்லோலத்தில் அந்த மூன்று பேருக் கும் என்ன நடந்தது என்பதை எவரும் கவனிக்கவில்லை.

கடலில் —

கிறிஸ்தோபரின் தலை தெரிகிறது. பின்னர் இரு கைகளும் மேலெழும்புகின்றன.

''உதவி! உதவி!''

அவனது அலறல் அலை ஓசையில் மரணிக்கிறது.

ஆனால் சுழியோடிகள் அதனைக் கண்டு விடுகின்றனர்.

'தொபீர் தொபீ'ரென கடலில் குதிக்கும் அவர்கள் அவன் இருக்கும் திசை நோக்கி வேகமாக நீந்துகிறார்கள்.

அவர்கள் மறுபடியும் கரை நோக்கி திரும்பிய போது ரோஸ்மேரியையும் தூக்கிக்கொண்டு வந்தார்கள், நீர்ச்சுழியில் அகப்பட்டுக்கொண்ட அவளை அவர்கள் கரை சேர்த்தார்கள்.

கிறிஸ்தோபர் இடிந்துபோய் விட்டிருந்தான். தலையை இரு கைகளாலும் தாங்கிக் கொண்டு கடற்கரை மணலில் உட்கார்ந்திருந்தான்.

ரோஸ்மேரி மணலில் கிடத்தப்பட்டாள், வயிற்றை அழுத்தி நீரை வெளியேற்றும் முதலுதவி அளிக்கப்பட்டது.

அதனால் பயனெதுவும் ஏற்படவில்லை. அவள் மூச்சு நின்றுவிட்டிருந்தது, இறந்துவிட்டாள்.

கிறிஸ்தோபர் குலுங்கிக் குலுங்கி அழுதான், சிறு குழந்தையொன்று அழுவது போலிருந்தது.

சுற்றி நின்று கொண்டிருந்த அனைவருக்கும் ஆச்சரியம், பூதம் போலிருக்கும் ஒரு மனிதன் இப்படி அழுகிறானே என்று ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சடலமாகக் கிடந்த மேரியின் கண்கள் பயந்தவள் போல் முழுசிக் கொண்டிருந்தன. கிறிஸ்தோபர் அவள் கண் இமைகளை மூடிவிட்டுக் கன்னத்தில் லேசாக முத்தமிட்டான். அந்தக் காட்சி அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது. இந்தமனிதன் இந்த சிறுபெண் மீது அளவற்ற பாசம் கொண்டிருக்கிறான் என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள்.

கடற்கரையில் இத்தகைய சோக சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, அந்த கண்ணாடி மனிதன் கொஞ்சம் தொலைவில் கரையேறிக் கொண்டிருந்தான்.

கரையேறிய அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். ரோஸ்மேரியும் கிறிஸ்தோபரும் முன்னர் கடற்கரை மணலில் அமர்ந்திருந்த இடத்திற்கு வேகமாகச் சென்றான். அங்கிருந்த விஸ்கி போத்தல் இரண்டையும் எடுத்துக் கொண்டான்.

அவனுடைய இந்த நடவடிக்கைகள் எதனையும் ஒருவரும் காணவில்லை.

ஆனால் —

அவன் இன்னொரு நபருடன் ரோஸ்மேரியின் சடலம் கிடந்த இடத்திற்கு வந்த போது கிறிஸ்தோபர் பேயடித்தவன் போல் திகிலுடன் எழுந்து நின்றான்.

* * *

கடற்கரையில் சண்டை மூண்டுவிட்டது. கண்ணாடிக் காரனுடன் வந்தவன் வாட்டசாட்டமான ஆசாமி அல்ல, மெலிவானவன், உயரமாகவிருந்தான், ஆனால் மிகவும் பலசாலி என்று தெரிந்தது.

கிறிஸ்தோபர் ஒரு வெறி நாயைப் போல அவன் மீது பாய்ந்தான். 'பாவி! பாவி மேரியை கொன்னுட்டியேடா' என்று அலறி அவன் தலைக்கேசத்தைப் பிடித்து இழுத்து மணலில் உருட்டித் தள்ளினான். 'இதென்னடா சங்கடம்!' என வந்தவன் மிரண்டு போய் எழுந்து ஓட, இவன் விரட்ட ஒரே களேபரம்.

என்ன நடக்கிறது என்பது புரியாமல் அனைவரும் 'திருதிரு'வென முழிக்கிறார்கள்.

'அவன் குட்டியை இவன் தள்ளிக்கொண்டு வந்து விட்டான் போல' என்று எவனோ குறும்புக்கார ஆசாமி சொல்ல, 'கொல்'லென சிரிப்பொலி எழுகிறது.

ரோஸ்மேரியின் சவ அடக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அவள் ஒரு ஏழைக் குடும்பத்துப் பெண், உறவினர்கள் அதிகமாக இல்லாதவள். சவ அடக்கத்தில் கொஞ்சம் பேரே கலந்து கொண்டிருந்தார்கள்.

கிறிஸ்தோபர் தாளமுடியாத சோகத்தில் தலை கவிழ்ந்து கொண்டிருந்தான்.

பாதர் ஜெபம் படித்துக்கொண்டிருந்த போது பொலீஸ் வாகனமொன்று மயான பூமிக்குள் நுழைந்தது. அதில் கண்ணாடி அணிந்த அந்த ஆசாமியும், கடற்கரையில் தலைதெறிக்க ஓடிய பேர்வழியும் சில பொலீஸ்காரர்களுடன் அமர்ந்திருந்தார்கள்.

மேரி புதைக்கப்பட்டாள்.

பொலீஸ் வாகனம் அந்த இடத்திற்குச் சென்றது, பொலீஸ்காரர்கள் 'தடதட'வென இறங்கினார்கள். கண்ணாடி அணிந்திருந்தவர் இன்ஸ்பெக்டர் ஸ்டீபன். அவர் கிறிஸ்தோபரை கைது செய்தார். ரோஸ்மேரியை திட்டமிட்டுக் கொன்றதாக அவன் மீது குற்றஞ் சுமத்தப்பட்டது.

* * *

நீதிமன்றத்தில் கிறிஸ்தோபரின் லீலைகள் வெளியாகின.

கிறிஸ்தோபர் ஒரு பணக்கார விவசாயி. தனது விவசாய நிலத்தில் தொழில் செய்யும் ஏழைப் பெண்களைக் காதலிப்பது போல் நடித்து, சில காலம் அவர்களை அனுபவித்ததன் பின்னர் ஆள் வைத்து கொன்று விடுவான்.



ஒரு நாள் அந்த மெலிவான மனிதன் இன்ஸ்பெக்டரை சந்தித்து ரோஸ்மேரியை கொலைசெய்வதற்கு கிறிஸ் தோபர் தன்னிடம் பேரம் பேசிய விசயத்தைக் கூறினான். ரோஸ்மேரியை தானும் விரும்புவதாகவும் சொன்ன அவன் மேரிக்கு பாதுகாப்பு கொடுக்கும்படியாக இன்ஸ்பெக்டரை கெஞ்சிக் கேட்டான்.

அன்றிலிருந்து இன்ஸ்பெக்டர் அந்த ஜோடியை நிழல் போல் தொடர்ந்தார்.

கடற்கரையிலும் படகின்மேல் அமர்ந்து அவர் வேவு நடவடிக்கையிலேயே ஈடுபட்டிருந்தார்.

அப்பொழுது —

கடற்கரை மணலில் விஸ்கி அருந்தியதையும் அதன் பின்னர் கடலை நோக்கி நடந்தபோது மேரி கண்களை மூடிக்கொண்டு நடந்ததையும் அவருடைய கூர்மையான கண்கள் கண்டுவிடுகின்றன.

'மேரிக்கு ஆபத்து' என்று மனம் அடித்துக்கொள்ள அவர் வேகமாக விரைந்தார்.

அதற்குள் விசயம் முடிந்துவிட்டது.

மேரியை முத்தமிட்டவாறே கடலுக்குள் இழுத்துச் சென்ற கிறிஸ்தோபர் 'திடீரென' அவள் கழுத்தை நெரிக்கத் தொடங்கினான்.

> மேரியை முத்தமிட்டவாறே கடலுக்குள் இழுத்துச் சென்ற கிறிஸ்தோபர் திடீரென அவள் கழுத்தை நெரிக்கத் தொடங்கினான். ஆனால் மேரி அவன் எதிர்பார்க்காத வண்ணம் உயிர்ப் போராட்டத்தில் ஈடுபட்டாள். தனது நீண்ட நகத்தினால் கிறிஸ்தோபரின் நெஞ்சிலே ரத்தக் காயங்களை அவள் ஏற்படுத்தினாள். ஆனால் அந்த இளங்குருத்து அந்தப் பெரிய பூதத்திடம் தோல்வியடைந்தது.

ஆனால் மேரி அவன் எதிர்பார்க்காத வண்ணம் உயிர்ப் போராட்டத்தில் ஈடுபட்டாள். தனது நீண்ட நகத்தினால் கிறிஸ் தோபரின் நெஞ்சில் இரத்தக் காயங்களை ஏற்படுத்தினாள்.

ஆனாலும் அந்த இளங்குருத்து அந்தப் பெரிய பூதத்திடம் தோல்வியடைந்தது.

கிறிஸ்தோபரின் நெஞ்சில் காணப்பட்ட ரண காயங்கள், விஸ்கி போத்தலில் இருந்த மயக்க மருந்தின் எச்ச சொச்சம், கொன்ரேக் கில்லரின் சாட்சியங்கள் கிறிஸ் தோபரை குற்றவாளியாக்க ஆதாரங்களாகின.

கிறிஸ்தோபர் ஏற்கனவே 13 இளம்பெண்களை ஆள் வைத்து கொன்றிருந்தான். அதனை அவன் ஒப்புக்கொண்டான்.

மரண தேவதை அவனை அணைத்துக் கொள்ள தீர்ப்பு வழங்கப்பட்டது.

## கவி எழுதும் சூட்சுமம்!

கவி எழுதும் ஆவலுடன்
காகிதத்தை மேசையின் மேல்
ஓவியமாய் எடுத்து வைத்து
உட்கார்ந்தேன் தனியறையில்

மடை திறந்த வெள்ளம் போல்
மணி மணியாய்க் கவியெழுதப்
போனாவை உதறிவிட்டுப்
பிள்ளையார் சுழியுமிட்டேன்!

கரம் என்னும் கைவழியே
கவிதை வந்து பாயுமென்றார்
உறங்காமல் கண் விழித்தேன்
ஒரு வார்த்தை வரவில்லை

கம்பனுக்குப்பின் பிறந்தும்
கவியெழுத முடியவில்லை
பாரதிக்குப் பின் பிறந்தும்
பாட்டெழுத முடியவில்லை

கன்னித் தமிழ் மொழியில்
கவியெழுதிச் சேவை செய்ய
எண்ணித்தான் முயற்சித்தேன்
ஏமாற்றம் கண்டேன் நான்

பேர் போன கவிஞரைப்
பேட்டி கண்டேன்...
அவர் சொன்னார்
சீர்தளைகள் மோனையெலாம்
சிந்தனைக்கோர் விலங்காகும்!
கடிவாளம் வாயிலிட்டால்
கவிஞா! உன் கற்பனைகள்
பொடியாகிப் போகுமப்பா!

## நீருக்கு ஈடேது?

மலையில் சுரக்கும் நதியை
தாய் மார்பில் சுரக்கும்
பாலைப் போலென நினைத்து
நல்வழியில் அதனை செலுத்து
நாடும் — வீடும் —
நாமும் நலம்பெற
ஓடும் இந்த நதிக்கு
ஈடாய் என்ன இருக்கு?
வீண் விரையம் ஆவதை தடுத்து
நல்வழியில் அதனை செலுத்து

— ரா. சேகர்

## சீதனம்

காகிதத்தில் ஒப்பந்தமாகும்
ஓர் களப்பலி!
ஆண்களை உயிரோடு
வாங்கவும் விற்கவும் கூடிய
கசாப்புக்கடை!
சமூகத்தின்
சம்மதத்துடன் இடம் பெறும்
பகல் கொள்ளை!
இது...
ஆண்கள் செய்யும்
விபச்சாரம்!
பெற்றோர்... தமது
மரணச் சடங்கிற்காக
மகனை விற்று
வாங்கிக் கொள்வது!
ஆண்கள் போடும்
பொன் (பெண்) விலங்கு!

— ஸ்ரீ. சாந்தரூபன்

## பெண்ணே!

என்னை
பூவாய் மாறி
புயலை சந்திக்கச் சொல்
மீனாய் மாறி
வலையை சந்திக்கச்சொல்
மானாய் மாறி
கணையை சந்திக்கச்சொல்
இலையாய் மாறி
உதிர்வை சந்திக்கச் சொல்
பனியாய் மாறி
பரிதியை சந்திக்கச் சொல்
கனியாய் மாறி
கற்களை சந்திக்கச் சொல்
விறகாய் மாறி
அனலை சந்திக்கச் சொல்
ஆனால்! உன் நண்பியாய்
உரு வெடுத்த பின்னர்
உந்தன்
பிரிவை மட்டும்
சந்திக்கச் சொல்லாதே
அதை நொடிப் பொழுதேனும்
சந்தித்தால்— மறுகணம்
என் இதயம்
நிரந்தர ஓய்வினை
நிச்சயம் சந்திக்கும்.

— பூபாலசிங்கம் சுகந்தினி

## கவிதைப் பூங்கா

# கோடம் பாக்கத் திரைக்களத்தில் இளம் நாயகர்களின் படையெடுப்பு!

தமிழ் சினிமாவில் எப்போதுமே கதாநாயகர்களின் ஆதிக்கம் உள்ளமை கண்கூடு. எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜினி, விஜயகாந்த், கார்த்திக், பிரபு, அஜித், விஜய், பிரசாந்த், விக்ரம் என கதாநாயகர்கள் ஆதிக்கம் செலுத்தினர், செலுத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இப்போது எதிர்பாராத விதமாக பல இளையநாயகர்கள் திரைக்களத்தில் குதித்திருக்கின்றனர். அவர்களைப்பற்றி அறிய உங்களுக்கும் ஆவலாக இருக்கும் தானே! எங்கே அவர்களைப்பற்றிப் பார்ப்போமா?



ஷியாம்—ஜோதிகா
படம் — '12 B'

## '12 B' நாயகன் ஷியாம்

சிம்ரன், ஜோதிகா இணைந்து நடிக்கும் '12 B' படத்தின் நாயகன். பார்வைக்கு மும்பை இளைஞனைப்போல் தோற்றமளிக்கிறார்.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர். நடிப்புத் தான் இலட்சியம் என்று கூறும் ஷியாம் புகைப்படங்கள் சகிதம் நடை நடையாக நடந்து டைரக்டர் ஜீவாவுக்குப் பிடித்துப் போனதனால், ஸ்கிரீன் டெஸ்ட் எடுத்துப்பார்த்து ஓ.கேயாக, இப்போது '12B' படத்தின் நாயகனாகி ஜோதிகாவின் கரம் பற்றியிருக்கிறார்.. ''பார்வைக்கு மும்பைக்காரன் போலத் தோற்றமளித்தாலும் இந்த மாமன் மதுரைக்கார னாக்கும்'' என்று பெருமை யுடன் சொல்லும் ஷியாமின் கண்களில் துருதுருப்பு அதிகம் இருக்கிறது.

இவரும் இரண்டு வருடங்கள் மும்பையில் மொடலிங் செய்திருக் கிறார். திரை யு லகு எப்படி யிருக்கிறது என்று கேட்டால், ''ஜாலியாக இருக்கிறது. ஜோதிகா, சிம்ரன் என்று ரெட்டைச்சவாரிடா மாப்பிளை. ம்.. எல்லாம் மச்சம்டா'' என்று நண்பர்கள் கேலி செய்யும் போதுதான் வெட்கம் லேசாக எட்டிப்பார்க்கிறது. ஆனாலும் நடிகர்களுக்கு மக்களிடையே கிடைக்கும் அங்கீகாரத்தைப்பார்க்கும் போது, நாம் நடிகனாகி புகழ் பெற வேண்டும் என்ற ஆர்வமும் உந்துதலும் அதிகமாகின்றது. எப்படியாவது நடிப்பில் நல்ல பெயரையும் புகழையும் பெற்று விட வேண்டும்''என்கிறார்.

(ஜோதிகா, சிம்ரனுக்கு இல்லாத வெட்கம் உங்களுக்கு ஏன் ஸார்)



ஸ்ரீகாந்த்—பூமிகா
படம் — 'ரோஜாககூட்டம்'

## 'ரோஜாக் கூட்டம்' நாயகன் ஸ்ரீகாந்த்

மென்மையாக, உயரமாக, வசீகரமாக இளம் உள்ளங்களைக் கொள்ளை கொள்வதற்கான அத்தனை அம்சங்களும் கொண்ட இளைஞன்.

கம்பியூட்டர் சயன்ஸ் படித்தவர். படிக்கும்போது ஃபஷன் ஷோக்களில் கலந்து கொண்டார். படித்து முடித்த பின் மொடலிங்கில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவருக்குச் சினிமா ஆசை துளிர் விடவே, அல்பமொன்றைத் தயாரித்துக்கொண்டு டைரக்டர் சசியைச் சந்தித்திருக்கிறார். சசி—'சொல்லாமலே' என்ற வெற்றிப்படத்தை லிவிங்ஸ்டன்—கௌசல்யாவை வைத்துத்தந்தவர், அதற்குப்பின் சொல்லிக்கொள்ளாமலே தெலுங்குப்பக்கம் போய் விட்டார். மீண்டும் ஒரு நல்ல தமிழ்ப்படத்தைத் தரும் நோக்கத்தில் இருந்தவர் ஸ்ரீகாந்தைச் சந்தித்ததும் பூமிகா என்ற ரோஜாப்பூவை ஸ்ரீகாந்துடன் இணை சேர்த்து 'ரோஜாக்கூட்டம்' என்ற படத்தைத் தொடங்கி விட்டார். ''வாவ்! சினிமாவில் கதாநாயகனாக நடிச்சிட்டிருக்கிறதை என்னால் நம்பவே முடியவில்லை என்று வாயைப்பிழந்து ஆச்சரியப்படும் ஸ்ரீகாந்தின் சொந்த ஊர் திருப்பதி. வளர்ந்தது எல்லாம் ஹைதராபாத்தில் தான்.

'ரோஜாக்கூட்டம்' படத்தைப்பற்றி ஸ்ரீகாந்திடம் கேட்டபோது, இந்தப்படத்தின் ஒவ்வொரு காட்சியிலும் ஏதாவது ஒரு மூலையில் ஒரு ரோஜாப்பூ எட்டிப்பார்ப்பது போன்று காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது.

லவ் சப்ஜெக்ட் திகட்டத் திகட்டக் காதலிக்கும் காட்சிகள். கொஞ்சம் காதல் கூடுதல் சுவாரஸ்யம் என்னவென்றால், காதலின் கிளைமாக்ஸ் கல்யாணம் இல்லை என்று சொல்லும் கதை. மிகவும் இன்ரஸ்டிங்காக இருக்கிறது.

எனக்கு சினிமாவில் நடிக்கக்கிடைத்தது வாழ்வில் கிடைத்த மிகப்பெரிய அதிஷ்டம். வாய்ப்புக்கிடைத்ததும் முதலில் எனது பெற்றோரிடம் தான் ஆசி வாங்கினேன் என்று கூறும் ஸ்ரீகாந்த் இப்போது சென்னை டு ஹைதராபாத் என்று விமானத்தில் பறந்து பறந்து நடித்துக் கொண்டிருக்கிறார்.

## "ஜூன் ஜூலை" ஜீவா

''தமிழில் ஹீரோக்கள் குறைவு. முன்னணி ஹீரோக்களின் கால்ஷீட் கிடைப்பது குதிரைக்கொம்பாக இருக்கிறது. சம்பளத்தில் எட்டாத உயரத்தில் இருக்கும் கதாநாயகர்களை ஒப்பந்தம் செய்வது தயாரிப்பாளர்களுக்கு சிரமமானதால் என்னைப் போன்ற புதுமுக நடிகர்களுக்கு இடம் கிடைக்கும் என்று நம்புகிறேன்'' — இது 'ஜூன் ஜூலை' நாயகன் ஜீவாவின் கருத்து.



அபர்ணா—ஜீவா
படம் — 'ஜூன் ஜூலை'



ஈஸ்வர்—மோனிஷா
படம் — 'லவ்சேனல்'

## 'லவ் சேனல்' ஈஸ்வர்

பிரான்ஸில் பிரபல கம்பனியொன்றின் மேலதிகாரியாகப்பணியாற்றியவர். நடிப்பின்மீது உள்ள ஆசையால் சென்னை வந்து நடித்துக் கொண்டிருக்கிறார்.

## "காதல் வைரஸ்" நாயகன் ரிச்சர்ட்

இவர் ஷாலினியின் சகோதரர். 'காதல் வைரஸ்' படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார்.

—ஷாம்



## லைலாம்மா நன்றி மறக்கலாமா?

லைலா தமிழ்த் திரையுலகிற்கு வந்ததென்னவோ வி.ஐ.பி படத்தில் நடிப்பதற்காகத்தானாம்.

போட்டோ தெரிவு வரை சென்று பின்னர் சிம்ரனை ஒப்பந்தம் செய்து வெறுப் பேற்றியிருக் கிறார்கள். மீண்டும் மும்பை போனவரை 'கள்ளழகர்' மூலம் தமிழிற்குக் கொண்டு வந்தவர் விஜயகாந்த். 'பார்த் தேன் ரசித்தேன்', 'தீனா' இரண்டின் மூலமும் ரசிகர்களைக் கைக்குள் போட்டுக் கொண்ட லைலா இப்போது 'தில்', 'நந்தா' படங்களில் நடித்து வருகிறார். லைலாவைத் தனது புதிய படத்தில் நடிக்க விஜயகாந்த் கேட்டதற்கு ஆகட்டும் பார்க்கலாம் என்று கூறியிருக்கிறாராம் அம்மணி.



## உலக அழகியுடன் ஜோடி சேர்கிறார் விஜய்

தனது ரசிகர்களுக்குப் புத்தாண்டுப் பரிசாக 'பத்ரி'யைத்தந்த குஷியோடு பல படங்களில் ஒப்பந்தமாகியிருக்கிறார் இளையதளபதி விஜய்.

இதில் முந்திக் கொண்டது 'வேலன்' வித்தியாசமான விறுவிறுப்பான காதல் கதையான இதில் விஜய்யுடன் ஜோடி சேர்கிறார் உலக அழகி பிரியங்கா சோப்ரா.

உலக அழகியுடன் ஜோடி சேர முன்னணி ஹீரோக்கள் வலை வீசினர். ஆனாலும் அதிஷ்டம் இளைய தளபதிக்கே அடித்திருக்கிறது.

# இனி இவர்கள்..

* ராஜூசுந்தரம் – சிம்ரன் நடிப்பில் 'ஐலவ்யூடா' உருவாகிக் கொண்டிருக்கிறது. இது தெரிந்த விஷயம். ஆனால் புது விஷயம் ராஜூசுந்தரத்தின் புதியபடம் 'யூத்' இதில் அவருக்கு ஜோடி ஜோதிகா.

* இன்றைய இளம் பெண்களின் பிரச்சினைகளை மையமாக வைத்து 'ஐஸ்வர்யா' என்ற படத்தைத் தயாரிக்கிறது ஜி.மூவிஸ். இதில் சுமித்ராவின் மகள் உமா, அனுராதாவின் மகள் அபினயா ஸ்ரீ முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர்.

* 'ரொம்பப் படிச்சவங்க' படத்தில் மும்தாஜ்–அபிராமி நாயகிகளாக நடிக்கின்றனர்.

* அக்னி நட்சத்திரத்திற்குப் பிறகு பிரபு– கார்த்திக் 'கிளிக்' படத்தில் இணைகிறார்கள்.

## தேறிவிட்டார் கார்த்திக்

கார்த்திக் என்றாலே கால்ஷீட் சொதப்புவார் என்ற ஒரு பெயர் நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அதனாலேயே கார்த்திக் கடந்த காலங்களில் சில சறுக்கல்களையும் சந்தித்தார். ஆனால் இப்போது கார்த்திக் முற்றிலும் தேறிவிட்டார். இப்போது அவர் மீள் பிரவேசம் செய்த 'லவ்லி' படத்தில் அதிக ஈடுபாடு காட்டுகிறாராம்.



## மும்தாஜின் புதிய படம் மும்தாஜ்!

ரசிகர்களைக் கவர்ந்து இழுக்கும் கவர்ச்சிக் கண்ணழகி மும்தாஜின் பெயரிலேயே படத்தை உருவாக்கி அவரையே இரட்டை வேடத்திலும் நடிக்க வைக்கிறார் தயாரிப்பாளர் கே.ராஜன்.

இவருடன் ராம்கி, பாபுகணேஷ், வையாபுரி, கோவை சரளா, ஸ்ரீவித்யா, மதன்பாப் ஆகியோரும் நடிக்கின்றனர்.

ஒலிப்பதிவை கிஷண்சாகர் செய்ய, இசை சேர்க்கிறார் பிரம்மா, பாடல்கள் பொன்னியின் செல்வன், பாபு கணேஷ், பிரம்மா, ரவி எடிட்டிங்– ராம்பாபு.

மும்தாஜ்



## பூமிகா தீவிர காதலில் தயாரிப்பாளர் சிக்கலில்

'பத்ரி' படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் படக்கென குதித்திருப்பவர் பூமிகா. வந்த வேகத்திலேயே ரசிகர்களின் நெஞ்சங்களை அள்ளிக் கொண்டவர்.

அடுத்து புதிய நடிகர் ஸ்ரீகாந்த் ஜோடியாக 'ரோஜாக்கூட்டம்' படத்தில் நடித்து வருகிறார்.

தமிழில் ஒரு ரவுண்ட் வரப்போகிறார் ஜோதிகாவை ஓரங்கட்டப் போகிறார் என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் அம்மணியின் காதல் விவகாரம் தயாரிப்பாளர்களை உலுப்பியிருக்கிறது.

ஜோதிகாவுடன் இணைத்துப் பேசப்பட்ட இயக்குனர் ஜே.சூர்யாவை பூமிகா ஆழமாகக் காதலித்து வருகிறாராம்.



# 'ஸ்ரீ' நடிகையின் மறுபக்கம்

புதிதாக நடிகை இயக்குனர் காதல் அரங்கேறி வருகின்றது. விரைவில் இந்த காதல் ஜோடியின் திருமண அறிவிப்பு வந்தாலும் வரலாம். அவ்வளவு வேகமாக இவர்களது காதல் வளர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த கில்லாடி டைரக்டர் வேறுயாருமல்ல, காதல் படங்களைத் தந்த கதிர் தான். இவரிடம் சிக்கியிருப்பவர் நட்சத்திர தம்பதியினரின் கடைசி வாரிசு 'ஸ்ரீ' நடிகை.

குழந்தை நடிகையாக நடித்தவர் குமரியாக அறிமுகமாவது கதிர் இயக்குனரின் படத்தில் தான். படத்தின் பெயரும் 'காதல் வைரஸ்' இப்படத்தின் கதையும் சினிமா சம்பந்தப்பட்டதுதான். உதவி இயக்குனர் கரெக்டரை (ஷாலினியின் அண்ணன்) நடிகை 'ஸ்ரீ' காதலிப்பார் 'ஸ்ரீ' யை நடிகர் காதலிப்பார்.

இது இப்படியிருக்க, நடிகை – உதவி இயக்குனர் தொடர்பான காதல் வசனம் ஒவ்வொன்றும் தனக்காக எழுதப்பட்டது.என்று நினைத்து இயக்குனரிடம் மயங்கி விட்டாராம் 'ஸ்ரீ' நடிகை.

ஆனால் கதிரானவருக்கு இது முதல் காதல் அல்ல. ஏற்கனவே ஒரு கல்லூரி மாணவியை உயிருக்குயிராகக் காதலித்து வந்தார். அவரையே திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் சொல்லி வந்தார். இடையில் என்ன நடந்ததோ அவருக்கு அல்வா கொடுத்துவிட்டு பேபி 'ஸ்ரீ' யைத் தன் வாழ்க்கைத் துணையாக்க முடிவு செய்திருக்கிறாராம்.

'காதல் வைரஸ்' படத்தின் ஷூட்டிங் ஸ்பொட்டில் முளைத்த கதிர் – பேபி காதல் நட்சத்திர ஹோட்டல்களில் நாளொரு சந்திப்பும் பொழுதொரு அன்பளிப்புமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. ஷூட்டிங் இல்லை என்றால் காலையிலேயே அவரைத்தேடி கதிரின் ஆபிஸுக்கு வந்து விடுகிறாராம் நடிகை. பின்னர் கதிரின் காரிலேயே காதலர்களின் பயணம் தொடங்கி விடுமாம். படத்தின் காஸ்டியூம்கள் வாங்குவதற்காக அண்மையில் மும்பை சென்றபோது 'ஸ்ரீ' நடிகையையும் கூடவே அழைத்துச் சென்றிருக்கிறார். கூடப் புறப்பட்ட தாயை நாசூக்காகத் தவிர்த்து விட்டு மும்பைக்குச் சென்றனராம். அங்கு லட்சங்களை வாரியிறைத்து நடிகைக்கு விலை உயர்ந்த காஸ்டியூம்களை வாங்கிக் கொடுத்திருக்கிறாராம்.

## ஸ்பெஷல் முத்தம் கிடைக்காது



கொஞ்ச நாள் காதல், கல்யாணம் என்று சினிமாவில் பரபரப்பில்லாமல் இருந்தார் சிம்ரன். இப்போது அதிரடியாக பல படங்களைக் கைவசம் வைத்திருக்கிறார்.

இதில் குறிப்பிடத்தக்கது கமலுடன் ஜோடி சேரும் பம்மல் கே.சம்மந்தம் கமல் படத்தில் நடிக்கிறீர்களே கமலின் ஸ்பெஷலான முத்தக்காட்சியும் உண்டுதானே! என்று

கேட்டால், பம்மல் கே. சம்மந்தம் காமெடிப்படம். காமெடிப் படத்தில் முத்தத்திற்கு வேலையில்லை. ஆகவே முத்தத்திலிருந்து தப்பிவிட்டேன் என்கிறார்.

(கமல் ஸார் விடுவாரா?)

சிம்ரன்

## திரை மறைவில்

நடிகைகளின் தொப்புளில் பம்பரம் விட்டு ஆட்டிய காலம் மலையேறி விட்டது. 'லவ்லி' படத்தில் ரன் நடிகையின் உடன் பிறப்பு குளிக்கும் காட்சியில் தண்ணீருக்குப்பதிலாக பாலைப்பயன்படுத்தியிருக்கிறார்களாம்.

**

கணவர் அமெரிக்காவில் என்று கூறி கட்சிப்பணிகளில் ஈடுபட்டு வந்தவர் கௌதம நடிகை. இப்போது கணவரைப்பிரிந்து குழந்தையுடன் தனிமையில் வாழுகின்றார். மீண்டும் நடிப்பதற்கு வாய்ப்புக்கேட்டு கோடம்பாக்கத்திற்குத் தூது விட்டிருக்கிறார்.

**

'விண்ணுக்கும் மண்ணுக்கும்' படத்தை மூன்றரைக்கோடி ரூபா செலவில் எடுத்தனர். படத்தில் கதையே இல்லை. மொத்தத்தில் தேவயானியிடம் தன் காதலைச் சொல்லும் கேடயமாகவே படத்தைப் பயன்படுத்தியிருந்தார் டைரக்டர் அரச குமாரன். தேவயானியும் மயங்கி டைரக்டருக்குக் கழுத்தை நீட்டி விட்டார். படத்தைப் பார்த்தவர்கள் தேவயானி – டைரக்டர் காதல் போலவே இருப்பதாகக் கூறினர். இந்தக்கதையாலோ என்னவோ படம் ஓடவில்லை. டைரக்டர் அரசகுமாரன் – தேவயானி புதுக்குடித்தனத்தில் சந்தோஷமாக இருக்கிறார்களோ என்னவோ கொதித்துப் போயிருப்பவர் தயாரிப்பாளர் தானாம். அவன் காதலிக்க என் படம் தான் கிடைச்சுதா? மூன்றரைக்கோடி ரூபாவில் ஒரு காதல் கடிதம் எழுதி என்பணத்தை செலவழித்து விட்டானே என்று கூறிக் கொண்டிருக்கின்றாராம்.

## முந்திக் கொண்டு மூச்சு விடுகிறது 'சுவாசம்'

அழகு நடிகை ப்ரியங்கா த்ரிவேதி நடிக்க வந்ததென்னமோ உபேந்திரா – பிரபுதேவா இணையும் படத்தில் தான். காவிரி நீர்ப்பிரச்சினையை மையமாகக் கொண்ட இப்படத்திற்கு இப்போது 'எச் டூ ஓ ' என்று பெயர் இடப்பட்டுள்ளது.

கன்னடம் ,தமிழ் ஆகிய இருமொழிகளில் உருவாகின்றது. இப்படத்திற்கு ப்ரியங்கா த்ரிவேதி, உபேந்திரா, பிரபுதேவாவை வைத்து படத்திற்குப் பெயர் வைக்காமல் பெரிதாகப் பூஜையும் போட்டார்கள்.

பெயர் தேடிய இடைவெளியில் ப்ரியங்காவை தன் மகன் எபி ஜோடியாக ஒப்பந்தம் செய்து 'சுவாசம்' படத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார் குஞ்சுமோன்.

இதனால் அம்மணி நடிக்க இருந்த காவேரிப்பிரச்சினைப்படம் தள்ளிப்போய், முந்திக் கொண்டு மூச்சு விடப் போகிறது 'சுவாசம்'.



ப்ரியங்கா த்ரிவேதி

## சுடர் ஒளி தொடர் கதை

# முத்தமிடும் ரோஜா இதழ்கள்

இதழ் – 2

மு.சிவநேசன்



ஜெபனின் கழுத்துக்கும் கன்னத்துக்கும் இடையே ஒரு கைத்துப்பாக்கியின் குழாய் சற்று அதிகமாகவே அழுத்திக் கொண்டிருந்தது. அதன் அழுத்தமும் அவனது கைப்பிடியும் அவனது உறுதியைப் பறைசாற்றின. ஸ்ரெயரிங்கில் இருந்த மறு கையை எடுக்கவும் இயலாது திணறினான் ஜெபன். 'நிலைமையைத் தந்திரமாகவே சமாளித்தாக வேண்டும்' என நினைத்துக் கொண்டான்.

பயணிகளைப் பதறாமல் இருக்கும்படி அவன் விடுத்த அறிவிப்பு பஸ்ஸின் சகல ஸ்பீக்கர்களிலும் தொனித்தது. சற்றும் எதிர்பாராத இந்த அறிவிப்பு உறக்கத்திலிருந்த பயணிகளைப் பதறச் செய்தது. அதே அறிவிப்பினால் அதிர்ந்துபோன துப்பாக்கிக் காரன் மைக்கைப் பிடுங்கித் தன் அறிவிப்பை மிகக் கடுமையான குரலில் விடுத்தான்.

''எவரும் அசையக் கூடாது. எங்களில் பத்துப்பேர் உங்களுக்குள் கலந்து இருக்கிறோம். இப்போது பஸ்ஸை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறோம். நீங்கள் அனைவரும் எமது பணயக் கைதிகள். உயிர் மேல் ஆசை இருப்பவர்களெல்லாம் உங்களிடமுள்ள கடைசி டொலர்வரை எடுத்துக் கையில் தயாராக வைத்திருங்கள். விரைவாக ஒத்துழைத்தால் சுலபமாகச் சுதந்திரம் கிடைக்கும்'' என்றான்.

ஜெபனின் கழுத்தைத் துப்பாக்கிக் குழலின் அழுத்தமே துளைத்துவிடும் போலிருந்தது. புல்லட் பாயத் தேவையில்லை. அவன் திரும்பவோ அசையவோ முற்பட்ட போதெல்லாம் துப்பாக்கி விசையை அழுத்தக் கடத்தற்காரனின் விரல்கள் துடிப்பது தெரிந்தது.

தனது பயணிகளிடமிருந்து கொள்ளை போகக்கூடாது. இதை எப்படியும் தடுத்தாக வேண்டும். இப்போது தான் சுடப்பட்டால் அசுர வேகத்தில் ஓடும் பஸ், விபத்தில் சிக்கிவிடும். எவருமே பிழைக்க இயலாது. எனவே விபரீதமாகச் செயற்பட இயலாது.

ஜெபன் எச்சிலை விழுங்கும்போது தாடை எலும்புகள் அசையத் துப்பாக்கிக் குழல் இடம்தரவில்லை. அழுத்தத்தினால் வலி அதிகரித்தது. சரியான தருணத்திற்காக அவன் காத்திருந்தான். பஸ் சாலை விரிப்புகளைப் பின்நோக்கிச் சுருட்டியவண்ணம் பலமைல் வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது.

அணியணியாக வாகனங்கள் சென்று கொண்டேயிருந்தன. அதிரடியாக ஒரு பக்கத் தெருவுக்குக்கூட பஸ்ஸைத் திருப்ப இயலாது. அதுவும் பஸ் அதிவேக வாகனங்களுக்குரிய நடுப் பீலியில் சென்றுகொண்டிருந்தது.

எதிரே விரைவில் வனப்பிரதேசம் ஒன்று வந்துவிடும். அதை நெருங்கிவிட்டால் தொலைதூரம் கொள்ளையர்கள் பாடு கொண்டாட்டம்தான். சுமார் முப்பது மைல்கள் வனத்தினூடு நீளும் நெடுஞ்சாலையில் எங்காவது வைத்து அவர்கள் சுழித்துவிடுவார்கள்.

பஸ் புறப்பட முன்னர் வழமைபோல அன்றும் பயணிகள் அனைவரும் ஏறிக்கொண்டதும் நடுவே நடைபாதையில் ஒரு திமிரான நடைபோட்டு பயணிகளை நோட்டமிட்டவன்தான் ஜெபன். அன்று புதிய பயணிகள் என்று இரண்டு மூன்றுபேர்தான் பஸ்ஸில் இருந்தார்கள். இவன் சொல்கிற மாதிரி பத்துப்பேர் குழுவில் இருக்க நியாயமில்லை.

எவரது முகமும் கண்ணாடியில் தெளிவாகத் தெரியவில்லை. திரும்பிப் பார்க்கவும் வழியில்லை. எனினும் இரண்டொரு உருவங்கள் எழுந்து நடமாடத் தொடங்கின என அவன் உணர்ந்தான்.

அந்த ஏஸியுள்ளும் பலருக்கு வியர்த்துக் கொட்டியது.

''அனைவரும் தத்தமது கைப்பைகளிலிருந்து பணத்தை எடுங்கள்'' மீண்டும் அவன் அறிவித்தான்.

''பைகளைப் பரிசோதித்து அதற்குள் எதையாவது கண்டுபிடித்தால் வெடிதான் மிச்சம்'' என்றான் மேலும்.

அவனது குரலைக் கேட்ட சுமரா அவன் ஒரு அசல் கில்லாடிதான் என நினைத்துக் கொண்டாள். எத்தனை கிரிமினல்களை அவள் கோர்ட்டில் கண்டிருப்பாள்? இவன் பிறப்பிலேயே இதற்குத்தான் பிறந்திருப்பான் போலிருந்தது அவளுக்கு.

ஒரு ஐம்பது டொலர்களை மட்டும் கையில் எடுத்துக் கொண்டாள். வருவது வரட்டும் என நினைத்தாள். தன்னைச் சுற்றும் முற்றும் இருப்பவர்களை இருளினுள்ளும் விழிகளால் துளாவினாள். அனைவரும் வழமையான பயணிகள்தான் எனத் தெரிந்து கொண்டாள்.

மீண்டும் கைப்பையுள் துளாவினாள். செல்போன் கையில் தட்டுப்பட்டதும் அவளது முகம் பிரகாசமடைந்ததை இருளினுள் எவரும் காணவில்லை.

ஜெபனுக்கோ ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. யுத்தகளத்தில் எத்தனை எதிரி விமானங்களையெல்லாம் அவன் சுட்டு வீழ்த்தியிருப்பான். இப்படி எக்கச்சக்கமாக அவன் மாட்டுப்பட்டு முழித்ததில்லை.

விமானக் கடத்தல் நாடகங்கள் பலவற்றைப் பற்றியெல்லாம் அவன் நிறையவே கேள்விப் பட்டிருக்கிறான். கடத்தல்களை முறியடிக்கும் அதிரடிப் பயிற்சிகூட அவன் பெற்றிருக்கிறான். ஒருமுறை விமான நிலையமொன்றில் கடத்தல்காரர்களால் பலவந்தமாகத் தரையிறக்கப்பட்ட விமானத்தை மீட்கும் பணியில் பிரதான பங்கு வகித்தும் இருக்கிறான்.

ஆனால் இப்பொழுதோ அவனது விழிகளைச் சுழற்ற முடிந்ததே தவிர தலையை இம்மியும் அசைக்க இயலவில்லை. தான் தன்னைப் பட்டியினால் பிணைத்திருந்ததையிட்டுத் திருப்திப்பட்டுக் கொண்டான். பயணிகளும் நிச்சயமாகப் பட்டிகளைப் போட்டே இருப்பார்கள் என எதிர்பார்த்தான்.

அவர்களின் அறிவிப்பு மீண்டும் வெளியானது.

''பணத்தைச் சேகரிக்கவும் தொடர்ந்து பைகளைச் சோதனை செய்யவும் ஒத்துழையுங்கள்.''

ஒருவன் நடைபாதை வழியே ஒரு கையில் டோர்ச் வெளிச்சத்துடனும் மறுகையில் துப்பாக்கியுடனும் முன்னேறி பயணிகளின் முன்வரிசைக்கு வந்திருந்தான். அவனுக்கு உதவியாக இன்னொருவனும் நின்றிருந்தான்.

கையில் செல்போனை எடுத்துக்கொண்ட சுமரா தனது வீட்டுடன் தொடர்புகொண்டாள். படு துணிச்சலாக இருட்டையும் அயலையும் நம்பி அவள் அழைப்பை விடுத்தாள். எனினும் அவளது கரங்கள் நடுக்கமெடுத்தன. ஒருமுறை போன் தவறி மடியில் விழுந்துவிட்டது. பஸ் தரையில் அது விழுந்து சத்தம் போட்டிருந்தால் அவள் நிலைமை என்னாகும்?

''ஹலோ……''

அவளது கணவன் வில்லியமின் குரல் காதில் கேட்டது. அவனோ ஒரு பொலிஸ் அதிகாரி. அவனிடம் சூசகமாக அவள் நிலைமையைக் கிசுகிசுத்தாள். பஸ் வனத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாகவும் கூறினாள்.

''நிலைமையைத் தொடர்ந்து தான் கண்காணிக்க வசதியாக போனை நிறுத்தாமலே வைத்துவிடு'' வில்லியம் அறிவுறுத்தினான்.

நிம்மதிப் பெருமூச்சுடன் அவள் மீண்டும் இருளினூடே நடப்பனவற்றை அவதானித்தாள். டோர்ச் வெளிச் சத்தில் பலரும் பணத்தை ஒப்படைப்பது தெரிந்தது. இன்னொருவன் அவர்களது பைகளைத் துளாவிக்கொண்டிருந்தான்.

இவளின் முறை வந்தது. ஐம்பது டொலர்களை மட்டுமே இவள் நீட்டியது அவனது ஆத்திரத்தைக் கிளறியது. கைத்துப்பாக்கியால் இவளின் நெற்றியில் அவன் ஓங்கிக் குத்தினான். நெற்றி வெடித்து இரத்தம் பீறிட்டது.

வலி தாங்காமல் துடித்த அவள் நெற்றியைத் தனது இடது கையால் பொத்திக்கொண்டு வலது கையால் கைப்பையைத் துளாவித் தனது வங்கியின் எலக்ட்ரோனிக் பண அட்டையைக் கையிலெடுத்தாள்.

''இதுதான் இருக்கிறது. இதிலுள்ள எல்லாவற்றையும் வேண்டுமானால் எடுத்துக்கொள்'' என்றாள் அவள்.

அவளிடம் பணம் இருக்காது என எதிர்பார்த்த அவன் அட்டையை வீசிவிட்டு அடுத்த ஆளிடம் போனான். அவளது கைப்பையையும் துளாவவில்லை. பணம் தப்பிக் கொண்டது.

பணத்தைப் பாதுகாப்பாக எடுத்துச்செல்ல உதவும் வங்கி அட்டைகள் கொள்ளையர்களுக்கு உதவாதே. அவற்றின் இரகசிய இலக்கத்தைக் கேட்டோ மிரட்டியோ தெரிந்துகொண்டாலும் இயந்திரமொன்றில் காசாக்கும் தருணத்தில் காத்திருந்து பிடித்துவிடுவார்களே.

சுமராவின் கணவன் நாற்பது மைல் தொலைவில் வீட்டில் தவித்துக்கொண்டிருந்தான். கொள்ளையர்களோடான சுமராவின் துணிச்சலான உரையாடல் அவனுக்குக் கேட்டது.

''டுமீல்!''

தொடர்ந்து கேட்ட துப்பாக்கி வேட்டொலி அவனைக் கலங்கடித்தது. அத்தோடு தொலைபேசித் தொடர்பும் துண்டிக்கப்பட்டு விட்டது.

சக பொலிஸாருடன் அவன் ஏற்கனவே மறு தொலைபேசியில் தொடர்பு கொண்டுவிட்டான். செயலில் இறங்கிவிட்டதாக அவர்கள் தெரிவித்து இருந்தனர். எனினும் தவிப்பின் உச்சத்தில் அவன் இருந்தான்.

'வேட்டொலி யாருக்கு? ஏன் தொடர்பு துண்டிக்கப் பட்டது? தொலைபேசி அவர்களிடம் பிடிபட்டுப் போயிற்றா?' வில்லியமின் இதயத்துடிப்பு எகிற ஆரம்பித்தது.

—தொடரும்

# ராசி பலன்

**27.05.2001 முதல் 02.06.2001 வரை**
**பொ.சந்திரன்.**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**
இராசிநாதன் கேதுவோடு சேர்ந்தாலும் பாக்கியஸ்தானத்தில் இருப்பது விசேஷம். சுக்கிரன் இராசிக்கு வருவது யோகம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் அன்பாய் இருப்பர். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு.

**இடபம் : கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**
இராசியில் நான்கு கிரகங்கள் இராசிநாதன் செலவுத் தானத்துக்கு செல்வது செலவுகள் அதிகரிக்கும். வீண் தொல்லைகளும் வந்து சேரும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குன்றலாம். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உறவினர் உதவுவர். உடற்சுகம் சிறிது பாதிப்படையலாம். பிரயாண வாய்ப்புண்டு. தொழில் செய்யும் இடத்தில் அமைதி இல்லை.

**மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**
இராசிநாதன் செலவுத் தானத்தில் இராசிக்கு பாம்புகளின் தொடர்பு சற்று சங்கடம் தான். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் அன்பாய் இருப்பர். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். தொழில் விருத்தியுண்டு. பதவி உயர்வு உண்டு. புதிய பொறுப்புக்கள் வந்து சேரும்.

**கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**
இராசிக்கு சூரியன், சனி, செவ்வாய் ஆகிய கெட்ட கிரகங்களின் பார்வை மத்திம பலனைத் தான் கொடுக்கும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் செலவை உண்டாக்கும். உறவினரின் ஆதரவு இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் போட்டி, பொறாமை இருக்கும்.

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம்1.**
இராசிநாதன் தசம கேந்திரத்தில் குரு, புதன், சனியோடு இருப்பது விசேஷம். எடுத்த காரியத்தை செய்து முடிப்பீர்கள். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் செலவை உண்டாக்கும். உறவினருக்குள் மனஸ்தாபத்திற்கு இடமுண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் துறை விருத்தியாகும். பதவி உயர்வு உண்டு.

**கன்னி : உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2.**
இராசிநாதன் பாக்கியஸ்தானத்தில் மூன்று கிரகங்கள் புடை சூழ இருப்பது விசேஷம். சுக்கிரனின் பார்வை, குருவின் பார்வை சுகம் செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் யோகம் உண்டு. பதவி உயர்வு உண்டு. இடமாற்றம் இருக்கும்.

**துலாம்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.**
இராசிநாதன் சுகஸ்தானத்தில் இருந்து இராசியை நோக்குவது விசேஷம். பணம்தட்டுப்படலாம். ஆனால் பணம் வரும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் செலவை உண்டாக்கும். உறவினர்களுடன் மனஸ்தாபத்துக்கு இடம் உண்டு. தேக ஆரோக்கியம் நல்லாயிருக்கும். தொழில் துறையில் சில சங்கடங்கள் இருக்கும். பிரயாண வாய்ப்புண்டு.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுஷம், கேட்டை.**
சந்திரனைத் தவிர அனைத்து கிரகங்களுடனும் இராசியும் இராசிநாதனும் தொடர்பு பட்டிருப்பது விசேஷமே. பணத்தட்டுப்பாடு இருக்காது. கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் அன்பாய் இருப்பர். உடற்சுகம் நல்லாயிருக்கும். தொழில் விருத்தியுண்டு. நண்பர்களின் உதவியுண்டு.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**
இராசிநாதன் சத்துருஸ்தானத்தில் மூன்று கிரகங்களுடன் இருப்பது மத்திமபலன். இராசிக்கு பாம்புகளின் தொடர்பு இருப்பது சங்கடம் தான். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்களுக்கிடையில் பிணக்கு வர வாய்ப்புண்டு. வீடு, வாகனத்தால் இலாபம் இல்லை. உறவினரும் விசுவாசமாக இல்லை. உடற்சுகம் நன்று. தொழில் விருத்தியுண்டு.

**மகரம்: உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2.**
இராசிநாதன் புண்ணியஸ்தானத்தில் மூன்று கிரகங்களும் இருப்பது விசேஷம். இராசியை குரு நோக்குவதும் நல்லது. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். அயலார் அன்பாய் இருப்பர். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் சிறப்பு உண்டு. பதவி உயர்வு உண்டு. பங்காளர் அல்லது கூட்டு தொழில் முயற்சி இருக்கும்.

**கும்பம்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.**
இராசிநாதன் சுகஸ்தானத்தில் மூன்று கிரகங்களோடு இருப்பது நலம். இராசிநாதன் இராசியை நோக்குவது நல்லது. கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரரும் நண்பர்களும் உதவுவர். வீடு, வாகனம் செலவை உண்டு பண்ணும். உறவினர் அவதானமாக இருப்பர். உடல் ஆரோக்கியம் நல்லாயிருக்கும். தொழில் யோகம் உண்டு. இலாபம் உண்டு.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**
இராசிநாதன் கேள்வி வீரியஸ்தானத்தில் இருப்பது நல்லதல்ல. ஆனால் செவ்வாயின் பார்வை நன்மை செய்யும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். சொந்தக்காரருடன் மனக்கசப்பு இருக்கும். உடல் ஆரோக்கியம் நல்லாயிருக்கும். தொழில் துறையில் சில பின்னடைவு இருக்கும்.

# ஐ.தே.க. எதிர்பார்ப்பது போன்று மு.கா. மனச்சாட்சிப்படி நடக்குமா?

## நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசின் நம்பிக்கைக்கு ஒரு சோதனை

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிராக குற்றப் பிரேரணை. மாவனல்லைச் சம்பவங்களுக்காக அமைச்சர் மஹிபால ஹேரத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை. நாட்டு நிலைமைக்காக அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க சில தினங்களுக்கு முன்னர் வகுத்த திட்டங்கள் இவை.

இத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளிலும் அது சுறுசுறுப்பாக ஈடுபட்டது.

எதிர்த்தரப்பில் உள்ள ஏனைய கட்சிகளின் ஆதரவைக் கோருவதில் ஐ.தே.க தலைவர்கள் ஈடுபட்டனர்.

அரசாங்கத்துக்கு எதிரான இவ்வாறான ஒரு பிரேரணையில் ஐ.தே.க வெற்றி பெறவேண்டுமேயானால் எதிர்த் தரப்பில் உள்ள எல்லாக் கட்சிகளினதும் ஆதரவு அதற்கு முதலில் தேவை.

அத்தோடு அரசாங்கத்தில் இணைந்துள்ள சிறுபான்மைக் கட்சிகளின் அல்லது பொ.ஐ.முன்னணியின் குறைந்தது ஐந்து உறுப்பினர்களினாவது ஆதரவும் தேவை.

அரசாங்கத்தைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தனக்கு இருப்பதாக ஐ.தே.க கூறி வந்தது. சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூட ஆதரவு வழங்க முன்வந்திருப்பதாகவும் அது கூறியது. ஐ.தே.கவின் இந்தத் திட்டங்களும் அறிவிப்புகளும் அரசாங்கத்தை ஓரளவு கலக்கமடையவே செய்தன.

அரசாங்கத்தை நாடாளுமன்றத்தில் கவிழ்க்க ஐ.தே.க திட்டமிட்டதை அடுத்தே 'அரசும்—புலிகளும் பேச்சுவார்த்தைக்கு இணக்கம்' என்ற அமைச்சர் கதிர்காமரின் அறிக்கை வெளியானது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களை அழைத்து புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா பேச்சுவார்த்தையும் நடத்தினார்.

ஐ.தே.கவின் திட்டங்களுக்கு எதிரான அரசின் இந்த நடவடிக்கைகள் அரசு எதிர்பார்த்த பலனை ஓரளவுக்கு அளித்தன என்றே கூறலாம். ''பானையில் வெண்ணெய் திரண்டு கொண்டு அல்லவா வருகிறது'' என்று சிறுபான்மைக் கட்சிகளை இது நம்ப வைத்துவிட்டது. பின்னர் அக்கட்சிகள் இது தொடர்பாக விடுத்த அறிக்கைகள் இதைப் புலப்படுத்தின.

ஐ.தே.கவின் எதிர்பார்ப்பு திட்டமிட்டபடி நிறைவேற முடியாத நிலையே உருவானது. இதனால் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை கைவிடப்பட வேண்டிய நிலைக்கு உள்ளாகியது.

ஜே.வி.பி பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை ஆதரிக்கப் போவதில்லை என அறிவித்து அறிக்கையும் விடுத்தது. அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முழு ஆதரவு கிடைக்குமா? என்பதிலும் சந்தேகமே ஏற்பட்டது.


ரவூப் ஹக்கீம்

அரசாங்கத்தை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்க முன்னர் கிடைத்த சந்தர்ப்பத்தை ஐ.தே.க தவற விட்டு விட்டது என்றே ஐ.தே.க தலைவர்களில் சிலர் இப்பொழுதும் கருதுகிறார்கள். அரசின் வரவு – செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பே அந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

வரவு – செலவுத் திட்டத்தை ஐ.தே.க முற்றாக எதிர்த்தது. ஜே.வி.பியும் எதிர்த்தது. த.வி.கூட்டணி, ரெலோ, தமிழ்க் காங்கிரஸ் ஆகியனவும் எதிர்த்தன, சிஹல உறுமயவும் எதிர்த்தது.

ஐ.தே.க தலைவர்கள் சிலரின் கணிப்பின்படி அரசாங்கத் தரப்பில் இருந்து ஐந்து உறுப்பினர்களின் ஆதரவே அச்சமயம் தேவைப்பட்டது. அதைப்பெற திட்டமிடப்பட்டிருந்ததாகவும் அவர்கள் கூறியிருந்தனர்.

ஐ.தே.க தலைவர் ரணில் இத்திட்டத்தை ஆதரிக்காததால் பலத்தைப் பரீட்சித்துப்பார்க்க வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது.

எவ்வாறாயினும், ஐ.தே.க தலைவர்கள் அனைவரும் ரணிலின் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு மீண்டும் அரசுக்கு எதிராக இப்பொழுது கிளர்ந்தெழுந்துள்ளனர். அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும் முயற்சியில் அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்பது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை. அது குறித்து ஆராய்ந்து வருகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே சில விடயங்களில் அரசுடன் முரண்பட்டு நிற்கிறது. இரண்டு தடவைகள் ''நூறுநாள்'' காலக்கெடுவையும் அது விதித்திருந்த கல்முனை தனி மாவட்டத்தையும் வலியுறுத்தி வருகிறது.

அரசுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான இந்த முரண்பாடுகளை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் என ஐ.தே.க எண்ணியிருப்பதாகத் தெரிகிறது.

அரசாங்கத்துக்கு எதிராக மனச்சாட்சி உள்ள ஒருவர் என்ற முறையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும்பொழுது மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் தீர்மானம் மேற்கொள்ள வேண்டிவரும் என ஐ.தே.க தலைவர்களில் ஒருவரான லொக்கு பண்டார பேட்டியொன்றில் கூறியுள்ளார். மாவனல்லைச் சம்பவம் முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல் என்பதையே அவர் இப்படி குத்திக் காட்டியிருக்கலாம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை தமிழ்க் காங்கிரஸ் ஆதரிக்க முடிவு செய்துள்ளது. நிபந்தனைகளுடன் ஆதரிக்க ரெலோ தீர்மானித்துள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரிப்பதா, இல்லையா என தீர்க்கமாக முடிவு செய்யாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது. எதிர்ப்பதென இ.தொ.கா தீர்மானித் திருப்பதாக அதன் தலைவர்களில் ஒருவர் கூறியுள்ளார்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐ.தே.க நாடாளுமன்றத்துக்கு கொண்டு வருமேயானால் அரசு ஒரு சங்கடமான நிலைக்கே உள்ளாகும்.

அரசாங்கத்துடன் இணைந்துள்ள சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவை அரசு தொடர்ந்து பெற்று வரவேண்டும். ஆதரவை இழக்கக் கூடிய எந்த ஒரு காரியத்தையும் செய்யாதிருக்கவும் வேண்டும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசு தப்பிப் பிழைக்குமேயானால் அமைச்சர் மஹிபால ஹேரத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐ.தே.க அடுத்து கொண்டு வரலாம். அப்படிக் கொண்டுவரப்பட்டால் முஸ்லிம் காங்கிரஸின் நிலை என்ன?

மாவனல்லையில் நடைபெற்ற சம்பவங்களுக்காக அமைச்சரைக் கண்டிப்பதா? அல்லது அரசாங்க நாடாளுமன்றக் குழு கொறடாவுக்கு கட்டுப்பட்டு அமைச்சரைப் பாதுகாப்பதா? முஸ்லிம் காங்கிரஸ் இதில் எதைச் செய்தாலும் தர்மசங்கடமான ஒரு நிலைக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாகும்.

—அவதானி

# முஸ்லிம் மகளிர் பாடசாலைகளுக்கு ஆண் அதிபர்கள் நியமனம் ஏன்?

## ஒழுக்கம், பண்பாடு குறித்து கேள்வி எழுப்புகிறார் பள்ளிவாசல்களின் சமாசத் தலைவர்

கிண்ணியாவில் உள்ள முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயங்களில் பெண் அதிபர்களை நியமிக்கும்படி கிண்ணியா பள்ளிவாசல்களின் சமாசத் தலைவரும் ஓய்வுபெற்ற கல்வி அதிகாரியுமான ஜனாப் ரீ.ஏ.எம். இஸ்ஹாக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கோரிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:

கிண்ணியா கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழ் 52 பாடசாலைகள் உள்ளன.

அவற்றில் மூன்று பாடசாலைகள் மாத்திரமே மகளிர் மகா வித்தியாலயங்கள் ஆகும்.

இவையே 80,000 முஸ்லிம்களின் பெண்கல்விக்காக இயங்கி வருகின்றன. கடந்த காலத்தில் இவை பெண் அதிபர்களாலேயே நிருவகிக்கப்பட்டுவந்தன.

அதன்பின்னர், அரசியல் தலையீட்டின் காரணமாக அரசியல் செல்வாக்கைப் பெற்ற ஆண் ஆசிரியர்களே அதிபர்கள் ஆகினர்.

காரணம், அவர்கள் பெற்ற கல்வித் தகமையோ, நீண்டகால கற்பித்தல், நிருவாக அனுபவமோ அல்ல.

மாறாக, கடந்த கால அரசியல் காரணமாக— பழிவாங்கப்பட்டவர் என்ற காரணத்துக்காக— 1ம் தர, 2ம் தர அதிபர், விசேட பதவி உயர்வு பெற்ற ஆண் ஆசிரியர்கள் இப்பாடசாலைகளில் நியமிக்கப்படுகின்றனர்.

ஆனால், தரத்திற்கேற்ற கல்வித் தகமையோ, நிருவாக அனுபவமோ இல்லாத அவர்கள், பழிவாங்கப்பட்டவர்கள் என்ற காரணத்தால் பதவி உயர்வு கிடைக்கப் பெற்றவர்கள்.

இத்தகையோர் எந்தவகையில் பிரபலமான மகளிர் மகா வித்தியாலயங்களைத் திறம்பட நிருவகிக்க முடியும்? இதை விட இவர்கள் ஆண்களாக இருப்பதனால், மகளிர் வித்தியாலயங்களை நிருவகிப்பதில் பலதரப் பட்ட சமய, கலாசார பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக கிண்ணியா சமய, கலாசாரத்தைப் பொறுத்தவரை மகளிர் வித்தியாலயங்கள் நிச்சயமாக பெண் அதிபர்களாலேயே நிர்வாகிக்கப்பட வேண்டும். வயது வந்த உயர் வகுப்பு மாணவிகள் ஆண் அதிபர்களின் நிருவாகத்தின் கீழ் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த அதிபர்களே விவாகம் முடியாத இளம் ஆசிரியர்களை வயது வந்த உயர் வகுப்பு மாணவிகளுக்கு ஆசிரியர்காளாக நியமிக்கின்றனர்.

இதனால் மாணவிகளின் ஒழுக்கம், கட்டுப்பாடு, தனியான பிரத்தியேகப் பண்புகள் சீரழிய இடமுண்டு. இவை பெண் அதிபர்களால் மாத்திரமே கட்டிப் பாதுகாக்க முடியும்.

இன்றையநிலையில் பெண் அதிபர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது என்ற காரணம் காட்ட முடியாது.

சுமார் 225 பெண் முஸ்லிம்ஆசிரியைகள் கிண்ணியா கோட்டக்கல்விப் பிரிவில் கற்பிக்கின்றனர். இவர்களில் பட்டதாரி ஆசிரியைகள், கல்வி டிப்ளோமா பட்டதாரிகள், பயிற்றப்பட்ட ஆசிரியைகள் ஆகியோர் அடங்குவர்.

இவர்கள் எந்தவகையான பதவிஉயர்வுமின்றி உதவி ஆசிரியைகளாகவே ஓய்வு பெறும் துர்ப்பாக்கிய நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

52 பாடசாலைகளிலும் ஆண் ஆசிரியர்களே அதிபர்களாக இருக்கின்றனர். 20 வருடங்களுக்கு மேலாக கற்பித்தல் அனுபவம் பெற்ற பெண் பட்டதாரிகளும் உதவி ஆசிரியர்களாகவே கடமையாற்றுகின்றனர்.

ஆனால், அயல் கோட்டக்கல்வி அலுவலகங்களில் எத்தனையோ தமிழ் மகளிர் பாடசாலைகள் பெண் அதிபர்களாலேயே நிர்வகிக்கப்பட்டுவருகின்றன.

அதேவேளை, முஸ்லிம் மகளிர் பாடசாலைகள் யாவும் ஆண் அதிபர்களாலேயே நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான அடிப்படைக்காரணம் அரசியல்வாதிகளின் விருப்பு வெறுப்புக்கேற்ப வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சும் நடைபோடுகின்றது.

இத்தகைய பெண் ஆசிரியைகளுக்குச் செய்யப்படும் அநீதி தமிழ் பாடசாலைகளில் நடைபெறுவதில்லை.

இதனால், இஸ்லாமிய சமய கலாசாரம் பாதிக்கப்படுவதை, முஸ்லிம் மகளிர் பாடசாலை ஆண் அதிபர்களுக்கெதிரான சுவரொட்டிகள், பத்திரிகை வெளியீடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

பெற்றாரோ, சமய ஸ்தாபனங்களோ, இப்பகுதி 72 பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்களோ ஆண் அதிபர்கள் கடமை செய்வதை விரும்பவில்லை என்பதை இவை நிரூபிக்கின்றன.

பெண்கல்விக்காக இஸ்லாம் அதிக முன்னுரிமை அளித்துள்ளது.

இதன் அடிப்படையில், சமய, சமூக ஸ்தாபனங்கள் ஆண் அதிபர்களுக்கெதிரான போராட்டத்தை மனத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

பெண் அதிபர்களை முஸ்லிம் மகா வித்தியாலயங்களில் நியமிக்கவும், அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவும் அணிதிரளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

இப்படி அவரது கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம் மக்களைக் கலக்கும் ஓட்டமாவடிக் கொலைகள்!

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் இரு முஸ்லிம் குடும்பஸ்தர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் இப்பகுதி முஸ்லிம்களை மீண்டும் கலக்கமடையச் செய்துள்ளது.

மாவனல்லையில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அராஜ கத்தனங்கள் அணைந்த நிலையில் ஓட்டமாவடியில் இரு முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் மாவனல்லை சம்பவத்தின் தொடரணி என மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் கருதுகிறார்கள்.

இவை திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கொலைகள் என்றும் இக்கொலைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் தெரிய வருகிறது.

கொலைச்சம்பவம் நிகழ்ந்த ஓட்டமாவடியை அண்டிய நாவலடி, மட்டக்களப்புக்கு வடக்கே 37 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இங்கு ஹிஜ்ரா நகர், கேணி நகர் ஆகிய சிறிய கிராம சேவகர் பிரிவுகளில் சுமார் நூறுக்கு மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் சிறு குடிசை அமைத்து விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களில் ஈடுபட்டு வருகின்றன.

சம்பவதினம் இவர்கள் குடிசைக்குள் உறங்கிக் கொண்டிருந்த சமயம் அங்கு சென்ற சீருடை தரித்த ஆயுத தாரிகள் இவர்களை ''அங்கிள்'' ''அங்கிள்,'' என அழைத்தனர். அச்சமயம் இவர்கள் வெளியே வரவே இவர்களை அழைத்துச் சென்று கொலை செய்துள்ளனர்.

இரு பிள்ளைகளின் தந்தையான நூர்முகமது அப்துல் லத்தீப் (35வயது), ஆறு பிள்ளைகளின் தந்தையான சீனிமுகமது சரீப் (43வயது) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்கள் ஆவர்.

நாவலடி இராணுவ முகாமில் இருந்து ஐந்நூறு மீற்றருக்குள் இச்சம்பவம் இடம்பெற்றது.

இந்த இருவரையும் காட்டுப் பகுதிக்குள் இழுத்துச் சென்று சுட்டுத் தள்ளுவதே அவர்களின் நோக்கமாக இருந்துள்ளது. எனினும் இவர்கள் இருவரும் இழுபறிப்பட்டதனால் இவர்களை வீதியில் வைத்து சுட்டுக் கொன்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது. அவ்வாறு இழுபறிப்படும் போதுதான் சீருடையினரின் தொப்பியும், அடையாள அட்டையும் தவறி விழுந்ததாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் இடம்பெற்ற மறுநாள் ஓட்டமாவடி முஸ்லிம்கள் கொதித்தெழுந்தனர். வீதியில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். வாகனப்போக்குவரத்தை தடைசெய்தனர். எங்கும் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டு நகரம் வெறிச்சோடியது.

இதனைத் தொடர்ந்து அங்கு விரைந்த படையினர் நகரை வழமை நிலைக்கு கொண்டு வரும் வகையில் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து கூட்டத்தைக் கலைத்தனர். நண்பகலுடன் வழமை நிலைமை திரும்பி போக்குவரத்து இடம் பெற்றது.

இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இறந்தவர்களின் சடலங்கள் பொலிஸாரினால் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அங்கு மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.தட்சணாமூர்த்தி பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பித்தார்.

நூர் முகமது லத்தீப் என்பவரின் தலை கனமான ஆயுதத்தினால் தாக்கப்பட்டதால் மூளை சிதறி மரணம் சம்பவித்ததாகவும், மற்றவருடைய தலையில் துப்பாக்கிச் சூடுபட்டு அவருக்கு மரணம் ஏற்பட்டதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சம்பவதினம இறந்தவர்களில் ஒருவரான சீனி முகமது சரீப் என்பவருடன் கூட இருந்த ஓ.அப்துல் காதர் என்பவர் தெரிவிக்கையில், இறந்தவரும் தானும் படுக்கைக்குத் தயாரானபோது பதினொரு மணியளவில் வீட்டுக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டதாகவும்—

இறந்தவர் யார் தட்டுவது எனக் கேட்டுக் கொண்டு கதவடிக்கு சென்றார் என்றும்

அவ்வேளை பின்னால் தானும் சென்றதாகவும்

படையினர்தான் வந்துள்ளார்கள், நீங்கள் வரவேண்டாம் என இறந்தவர் கூறவே தான் கதவைச் சாத்திவிட்டு வீட்டுக்குச் சென்று முப்பது நிமிடத்தின் பின் வெடிச் சத்தம் கேட்டதாகவும் தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணை வேண்டும் எனவும் பல தடவைகள் தாம் இப்படி அச்சுறுத்தல்களுக்கு உள்ளானதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த பொதுத்தேர்தலில் ஓட்டமாவடி முஸ்லிம்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய முகமட் அப்துல் காதர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார். பின்னர் பிரதி அமைச்சர் பதவியும் கிடைத்தது.

கடந்த கால அரசியல்வாதிகளால் புறக்கணிப்பு செய்யப்பட்ட ஓட்டமாவடியைக் கட்டி எழுப்பும் நோக்கில் அரசியல் பிரவேசம் செய்த முகமட் அப்துல் காதருக்கு ஓட்டமாவடி கொலைகள் இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளன.

மாவனல்லைச் சம்பவங்களின் தொடர்ச்சியா ஓட்டமாவடிச் சம்பவம் என்று முஸ்லிம் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

—சத்துருக்கன்

# ஆசிரியர் விவரங்கள் படையினருக்கு எதற்கு?

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி யில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்குப் பணிபுரியத் தினமும் செல்லும் ஆசிரியர்களின் விவரங்களைத் தமக்கு சமர்ப்பிக்க வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட பாது காப்புக்கான கட்டளையிடும் அதிகாரி கேணல் வி.ஆர்.எல். அன்ரனிஸ் பணித்துள்ளார்.

குறிப்பாக பட்டிருப்பு பாலத்தின் ஊடாக பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்களின் விவரங்களைத் தருமாறு கோரப்பட்டுள்ளது.

பட்டிருப்பு பாலத்தில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் தினமும் காலை 8 மணிக்குப் பின்னரே பொதுமக்கள் பிரயாணம் செய்யப் படையினர் அனுமதித்து வருகின்றனர்.

இதனால் படுவான் கரைப்பகுதிக்குச் செல்லும் ஆசிரியர்கள் காலை 9 மணிக்கே குறிப்பிட்ட பாடசாலைகளை சென்றடைகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரியிடம் கல்வித்திணைக்கள அதிகாரிகள் பலமுறை சுட்டிக் காட்டியிருந்தனர். அதற்கு ஆசிரியர்கள் மட்டும் காலை 8 மணிக்கு முன் செல்லலாம் எனவும், அவ்வாறு செல்லும் ஆசிரியர்களின் விவரங்களை தமக்கு ஒப்படைக்கும்படியும் கேணல் அன்ரனிஸ் கேட்டுள்ளார்.

ஆசிரியர்களுக்கான அடையாள அட்டைகள் சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் வழங்கப்பட்டிருந்த போதும் இப்படியான விவரப்பட்டியல் ஒன்று தேவைதானா? என பாதிக்கப்படும் ஆசிரியர்கள் சுடர் ஒளி நிருபரிடம் கூறி ஆதங்கப்பட்டனர்.

— நேரன்

## சுவாமி தந்திரதேவாவுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம்

கொக்கட்டிச் சோலையில் 'கதிரொளி இல்லம்' அண்மையில் திறக்கப்பட்டது.

போர் அனர்த்தங்களால் தாய், தந்தையர்களை இழந்து தத்தளிக்கும் அனாதைச் சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்காக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் இந்து ஆலய தலைமைஒன்றியமும், பட்டிப்பளைப் பகுதி அபிவிருத்தி மன்றமும் (பெற்றோ) இணைந்து இந்த இல்லத்தை ஆரம்பித்துள்ளன.

இல்லம் திறப்பதற்கான அழைப்பிதழில் குறிப்பிடப் பட்டிருந்தவர் அமெரிக்க நாட்டு இந்துமதத் துறவியான சுவாமி தந்திரதேவா மகராஜ். ஆனால் இல்லத்தை திறந்தவர் விஸ்வப்பிரம்மஸ்ரீ வை. இ.காந்தன் குருக்கள்.

ஏன் இவ்வாறு நடந்தது?

மட்டக்களப்பு மாவட்டத்தை இரண்டு பிரிவுகளாக அரசாங்கம் எப்போது வகுத்து செயல்பட ஆரம்பித்ததோ அன்றிருந்து இப்படித்தான் நடக்கின்றது.

அரசாங்க உத்தியோகத்தர்களை கொக்கட்டிச்சோலைப் பகுதிக்கு செல்லவிடாமல் தடைவிதித்த படையினர் தற்போது ஆன்மிகவாதிகளையும் விட்டு வைக்கவில்லை. சுவாமி தந்திரதேவாவால் ஒதுக்கிக் கொடுத்த சுபதினமான மே 6ஆம் திகதி கொக்கட்டிச் சோலை கதிரொளி இல்லம் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

சுவாமி தந்திரதேவா மகராஜ் தனது வாகனத்தில் பட்டிருப்புப் பாலம் ஊடாக கொக்கட்டிச்சோலை நோக்கிச் செல்லும் போது அங்கு கடமையில் இருந்த படையினர் இவரைத் தடுத்து திருப்பி அனுப்பிவிட்டனர்.

தான் அனாதை இல்லம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக செல்வதாகவும் தானே அதை திறப்பதாகவும் அழைப்பிதழை எடுத்துக் காட்டியும் கூட அங்கு செல்ல அவர் படையினரால் அனுமதிக்கப் படவில்லை.

இதனால் படுவான்கரைப் பகுதியான முனைத்தீவு மாணிக்கப்பிள்ளையார் ஆலய பிரதமகுருவான விஸ்வப் பிரம்ம ஸ்ரீ வை. இ.காந்தன் குருக்களால் கதிரொளி இல்லம் திறந்து வைக்கப்பட்டது.

## உறுதிமொழிகள் காற்றிலா?

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் தங்களுக்கு வேலை வழங்க வேண்டுமென பிரதி அமைச்சர் கணேசமூர்த்திக்கு வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாக தமக்கு வேலை வழங்கப் படாமையை அடுத்து கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் மட்டக்களப்பில் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றினை இவர்கள் மேற்கொண்டனர்.

அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றிருந்த, தற்போதைய பிரதி அமைச்சர் சோ.கணேசமூர்த்தி உட்பட பல அரசியல் வாதிகள் பட்டதாரிகளின் உண்ணா விரதத்தை கைவிடும்படியும், வருட இறுதிக்குள் வேலை வாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுப்போம் எனவும் உறுதி கூறியிருந்தனர்.

இந்த உறுதி மொழிகளை நம்பிய பட்டதாரிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

ஆனால் கிட்டத்தட்ட பத்து மாதங்களாகியும் இது வரை இவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை.

கடந்த 1997ஆம் ஆண்டுப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 750 பட்டதா[illegible]ள் வேலையற்றிருந்தனர். இந்தத் தொகையானது இந்த வருட (2001) டிசம்பருடன் 1100 வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்தும், பட்டப்படிப்பினை முடித்துவிட்டுத் தாய் தந்தையரின் உழைப்பிலும், கூலித் தொழிலாளராகவும் பல பட்டதாரிகள் கண்ணீருடனும், வேதனையுடனும் வாழ்வதையே காணமுடிகிறது.

தாம் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வருடக் கணக்காக பெரும் தொகைப் பணத்தினை செலவு செய்து, பட்டம் பெற்றாலும் உரிய தொழில் ஒன்றைப் பெறுவதற்கு உண்ணாவிரதம் நடத்தும் அவல நிலைதான் இன்னும் தொடர்கின்றது என பட்டதாரி மாணவி ஒருவர் எமது சுடர் ஒளி நிருபரிடம் கூறினார்.

# ஒருபுறம் வரவேற்பு; மறுபுறம் சுற்றிவளைப்பு!

மட்டக்களப்பில் உள்ள படை முகாம்களில் ஒரு சாரார் குளிர்பானமும் இனிப்பும் வழங்க மறுசாரார் சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த வெசாக் தினத்தன்று பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதால் மட்டக்களப்பு மாவட்டமே வெறிச்சோடிக் கிடந்தது.

எனினும் வெசாக் தினத்திற்காக படையினர் தயார் செய்திருந்த குளிர்பானம், பிஸ்கட் என்பன ஹர்த்தால் முடிந்து இரு தினங்களுக்குப்பின் கடந்த 9ஆம் திகதி பொதுமக்களை வழி மறித்து வழங்கப்பட்டன.

செங்கலடி — பதுளை வீதியில் உள்ள கறுத்தப் பாலம் சோதனைச் சாவடியிலும், ஏறாவூர் பொலிஸ் நிலையம், மட்டுநகர் — திருமலை வீதியில் உள்ள ஜெயந்திபுரம் பொலிஸ் நிலையம், கல்லடி பொலிஸ் நிலையம் என்பவற்றிலும் இவ்வாறு குளிர்பானங்களும் பிஸ்கட்டும் வழங்கப்பட்டன.

இது இவ்வாறிருக்க மட்டுநகர் வெள்ளைப் பாலத்தின் ஊடாகச் சென்ற பொதுமக்கள், பலத்த சோதனைக்கு உள்ளாகினர்.

இதேபோன்று சகல சோதனைச் சாவடி நிலையங்களிலும் சோதனைகள் கடுமையாக இருந்தன. இதைவிட தாண்டவன்வெளி, பாரதி லேன் பகுதிகளில் வீடுவீடாகச் சென்று சோதனை இடப்பட்டதுடன் சுற்றி வளைப்பும் அதே தினத்தில் இடம்பெற்றது.

குளிர்பானமும், பிஸ்கட்டும் படையினரிடம் வாங்கி வயிறாற உண்ட சிலரும் மட்டுநகர் நுழைவாயிலில் வைத்து பலத்த சோதனை இடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதே தினம் மட்டுநகரில் இருந்து வாழைச்சேனைப் பகுதியை நோக்கிச் சென்ற வாகனங்களும் வாழைச்சேனைப் பகுதியில் இருந்து மட்டுநகர் நோக்கி வந்த வாகனங்களும் பிள்ளையாரடியில் முகாமிட்டுள்ள அதிரடிப்படையினரால் தடுக்கப்பட்டனர்.

வீதித்தடை போட்டு உள் வீதியான சத்துருக்கொண்டான் — கொக்குவில் ஊடாகவே செல்வதற்கு காலை 6 மணி தொடக்கம் காலை 10 மணிவரை படையினர் அனுமதிக்கவில்லை.

வெசாக் தினத்தை முன்னிட்டு இரண்டு நாள் பூரண ஹர்த்தால் இடம்பெற்றமையினால் அதை சகித்துக்கொள்ளாதவர்களே இவ்வாறு வீதித்தடை போட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# கால்பந்தாட்டத் தலைமை...
# கோலாகலமாகத் திற...

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் புதிய தலைமையகத்தின் திறப்பு விழா, தேசிய கால்பந்தாட்டப் பயிற்சி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் என்பன அண்மையில் கோலாகலமாக நடைபெற்றன.

சர்வதேச கால்பந்தாட்டச் சங்கங்களின் சம்மேளனத்தின் (ஃபிஃபா) தலைவர் ஜோஸப் பிளாட்டர் இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதற்காக கடந்த 14ஆம் திகதி காலை தனது சொந்த ஜெட் விமானத்தில் அவர் இலங்கை வந்தார்.

அன்றையதினம் காலை 11 மணிக்கு கோட்டே பெத்தேகானவில் அமையவுள்ள தேசிய கால்பந்தாட்டப் பயிற்சி நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். அமைச்சர் மங்கள சமரவீர கோட்டே மேயர் சந்திரா சில்வா ஆகியோருட்பட பலர் இதில் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

15ஆம் திகதி காலையில் இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத் தலைமையகத்தின் திறப்பு விழா நடைபெற்றது.

அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, கொழும்பு மாநகரப் பிதா ஒமர் காமில், (ஃபிஃபா) நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், ஆசிய கால்பந்தாட்டக் கூட்டமைப்பின் செயலாளர் பீட்டர் வேலப்பன் மற்றும் பல ஆசிய நாடுகளின் கால்பந்தாட்டச் சங்கங்களின் பிரதிநிதிகள், பல இலங்கை விளையாட்டுச் சங்கங்களின் தலைவர்கள் ஆகியோர் இதில் பங்குபற்றினர்.

பல்லாயிரக்கணக்கான பாடசாலை மாணவர்கள், கால்பந்தாட்ட வீரர்கள் ஆகியோரும் இவ்வைபவங்களுக்குச் சமுகமளித்திருந்தனர்.

குறித்த இரு தினங்களும் பிளாட்டருக்கு மிக விமர்சையான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தலைமையக கட்டடத் திறப்புவிழாவில் பிளாட்டர் இதுபற்றி மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுப் பேசினார். தனது 26 வருடகால ஃபிஃபா அனுபவத்தில் எங்குமே தனக்கு இத்தகைய மாபெரும் வரவேற்பு அளிக்கப்படவில்லை என்றார் அவர்.

பின் உபதலைவருமான ... பெர்ணாண்டோவின் திட்ட... வானது இத்தலைமையகம்.

அவர் தனது உரையில் ஃபுட்போல் ஹவுஸ் எனப் பெயரிடப்பட்டுள்ள இக்...

...கருடன் கால்பந்... ணம் செயற்பட வேண்டும் என்று கூறினார்.

தலைமையகக் கட்டடத்தை திறந்து வைத்தபின் ஜோஸப் பிளாட்டர் ஏனைய



கால்பந்தாட்டத் தலைமையகத் திறப்பு விழாவின்போது ஜோஸப் பிளாட்டர் மேடையில் நடனமாடுகிறார். ஃபிஃபா உறுப்பினர் முஹம்மது பின் ஹமாம், சம்மேளனத்தின் தலைவர் போதி லியனகே, மணிலால் பெர்ணாண்டோ மற்றும் சம்மேளன அங்கத்தவர்கள் அவரை அவதானிக்கின்றனர்.



விழாவில் பார்வையாளர்களாகப் பங்குபற்றிய மாணவர்களில் ஒருபகுதியினர்.

ஃபிஃபா தலைவர் நிதியிலிருந்து 40 லட்சம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்குவதாகவும் அவர் அறிவித்தார்.

"சுமார் ஐயாயிரம் சிறுவர்களும் சிறுமிகளும் இவ்வைபவத்தில் திரண்டிருக்கின்றனர். கால்பந்தாட்டத்தில் அவர்களின் ஆர்வத்தை அது வெளிப்படுத்துகிறது. எதிர்காலத்தில் இந்த நாட்டில் கால்பந்தாட்டம் சிறந்து விளங்கும்" என்று அவர் கூறினார்.

இ.கா.ச. நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் ஆசிய கால்பந்தாட்டக் கூட்டமைப்

கட்டடம் சகல தேசிய விளையாட்டுச் சங்கங்களும் உபயோகப்படுத்துவதற்கு இடமளிக்கப்படும் என்றார்.

தமது திட்டங்களுக்கு உறுதுணையாக விளங்கும் இ.கா.ச. உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்த அவர், சம்மேளனத்தின் செயலாளர் கிருஷாந்த பெரேரா, உபதலைவர் ஆனந்தராஜா ஆகியோர் விசேடமாக குறிப்பிடத்தக்கவர்கள் என்றும் அவர் கூறினார்.

2008ஆம் ஆண்டில் ஆசியாவின் சிறந்த ஐந்து கால்பந்தாட்ட அணிகளுள் ஒன்றாக

பிரமுகர்கள் சகிதம் அதைச் சுற்றிப் பார்வையிட்டார். அதன்பின் மீண்டும் மேடைக்கு வந்தபோது இசை நிகழ்ச்சி ஆரம்பமாகியிருந்தது.

சிறுவர்கள் இசைக்கேற்ப நடனமாடிக் கொண்டிருந்தனர். உடனே பிளாட்டரும் நடனமாடத் தொடங்கினார். அருகிலிருந்த பல அதிதிகளும் அவருடன் இணைந்து ஆடினர்.

பிளாட்டர் தனது இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதியையும் சந்தித்து இலங்கையில் கால்பந்தாட்ட அபிவிருத்தி குறித்து உரையாடினார்.

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

## இந்திய கிரிக்கெட் சபை பகிஷ்கரிப்பை கைவிடுகிறது!

உலகக்கிண்ணம், ஆசியக்கிண்ணம், ஐ.சி.சி கிண்ணம் ஆகியவற்றுக்கான சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றுவதில்லை என்ற முடிவை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கைவிட்டுள்ளது.

பாகிஸ்தான் அணியுடன் போட்டிகளில் பங்குபற்றுவதற்கும், எதிர்வரும் மூன்று வருடத்தில் 'வழக்கமல்லாத' மைதானங்களில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றவும் அனுமதியளிக்க இந்திய அரசாங்கம் முன்னர் மறுத்திருந்தது.

இத்தீர்மானத்தை மாற்றாவிடின் இருதரப்புப் போட்டிகள் தவிர்ந்த ஏனைய பல்கோணப் போட்டிகளை பகிஷ்கரிக்கப்போவதாக இந்திய கிரிக்கெட் சபை அச்சுறுத்தியிருந்தது.



ஏ.சி. முத்தையா

ஆனாலும் இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர் உமாபாரதி 'இந்தத் தீர்மானத்தை மாற்ற முடியாது. போட்டிகளைப் பகிஷ்கரிப்பதென முடிவு செய்தால் அது கிரிக்கெட் சபையின் பிரச்சினையே'' எனக் கூறியிருந்தார்.

இதனால் இந்தியாவில் நடத்தத் திட்டமிடப்பட்ட ஐ.சி.சி. கிண்ணப் போட்டிகளை அவுஸ்திரேலியாவுக்கு மாற்றவும் உத்தேசிக்கப்பட்டது.

எனினும் தற்போது இவ்விவகாரத்தில் சுமுகமான முடிவு ஏற்பட்டுள்ளது.

''இந்திய அரசாங்கம் பல்தரப்புப் போட்டிகளில் பாகிஸ்தானுடன் போட்டியிடவும் அனுமதி அளித்துள்ளது.

பாகிஸ்தானில் நடைபெறும் போட்டிகளிலும் இப்போது நாம் பங்குபற்ற முடியும்'' என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஏ.சி. முத்தையா கூறினார்.

இதையடுத்து அடுத்த வருடம் செப்டெம்பர் மாதம் ஐ.சி.சி கிண்ணப்போட்டிகளையும் இந்தியாவிலேயே நடத்துவதற்கான ஏற்பாடுகளை இந்திய கிரிக்கெட் சபை மேற்கொண்டுள்ளது.

''இதற்கான வரிவிலக்கு தொடர்பாக அரசாங்கத்தின் அனுமதியைக் கோரியுள்ளோம். அதுபற்றிய முடிவு கிடைத்ததும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்'' எனவும் முத்தையா கூறுகிறார்.

## உலகக் கிண்ணத் தகுதிகாண் போட்டிகளில் இலங்கை அணி

2002ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளைத் தேர்வு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இலங்கை ஆசிய கண்டத்தின் குழு 5 இல் போட்டியிடுகிறது. இக்குழுவில் லெபனான், தாய்லாந்து, பாகிஸ்தான் ஆகிய அணிகளும் இடம்பெறுகின்றன.

இக்குழுவிற்கிடையிலான முதல் சுற்றுப்போட்டிகள் மே 13-17ஆம் திகதி வரை லெபனானில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் இலங்கை அணி தாய்லாந்து (4-2), லெபனான் (4-0) அணிகளுடனான போட்டிகளில் தோல்வியைத் தழுவியது. பாகிஸ்தானுடனான போட்டி 3-3 கோல்கள் விகிதத்தில் சமநிலையில் முடிவுற்றது.

இதே அணிகளுக்கிடையில் மற்றொரு சுற்றுப்போட்டி தாய்லாந்தில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் இலங்கை அணி தாய்லாந்து, லெபனான், பாகிஸ்தான் அணிகளுடன் முறையே 27, 28 ,30ஆம் திகதிகளில் மோதவுள்ளது.

## ஒலிம்பிக் போட்டிகளுக்குப் பெருந்தொகை உணவு

2004ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இவ்விளையாட்டு விழாவுக்காக 115 லட்சம் உணவுப்பொதிகள் தயாரிக்க வேண்டியுள்ளது என அறிவிக்கப்படுகிறது.

17 நாட்கள் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விழாவில் பங்குபற்றும் வீரர்களும் பார்வையாளர்களுக்குமே இவ்வளவு உணவு தேவைப்படுகிறது.

இதற்காக 300 தொன் மரக்கறிகள் - பழங்கள், 85 தொன் கடல் உணவுகள், 20 தொன் முட்டைகள் என்பன தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் பெருமளவு உணவுகள் மேற்கு ஏதென்ஸில் அமையவுள்ள ஒலிம்பிக் கிராமத்தில் பயன்படுத்தப்படும்.

போட்டி நடைபெறும் இடங்கள் பயிற்சித் தளங்கள் என்பவற்றிலும் உணவுவகைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

250 சமையல் நிபுணர்கள் மற்றும் 250 உதவி சமையல் நிபுணர்களும் இவ்வுணவு தயாரிக்கும் பணியை மேற்கொள்ளவுள்ளனர்.

விநியோகிப்பாளர்கள் முதல் கணக்காளர்கள் வரையிலான பணிகளில் 2500 பேர் ஈடுபடுவர்.

உணவு வகைகளுக்கான மொத்தச் செலவு 116 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் 17,300 வீரர்கள், வீராங்கனைகள் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சச்சினிடம் குவியும் பணமும் புகழும்

ஒருநாள் போட்டிகளில் 10,000 ஓட்டங்களைக் குவித்த முதல் வீரர் என்ற பெருமையை டெண்டுல்கர் கடந்த மார்ச் 31ஆம் திகதியன்று தட்டிக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து சச்சினுக்கு விருதுகள், பரிசுகள், பணம் என்பன குவிந்து கொண்டிருக்கின்றன.

சச்சினுடன் 'வேர்ல்ட் டெல்' நிறுவனம் அண்மையில் புதிய வர்த்தக ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது.

ஐந்து வருடக்காலத்திற்கான இவ்வொப்பந்தத்தின்படி டெண்டுல்கரின் விளம்பர ஒப்பந்தங்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை இந்நிறுவனம் கையாளும்.



சச்சின்

இதற்காக 80 கோடி இந்திய ரூபாவை (சுமார் 153 கோடி இலங்கை ரூபா) இந்நிறுவனம் டெண்டுல்கருக்கு வழங்கியுள்ளது.

மும்பாயைத் தளமாகக் கொண்ட இந்நிறுவனம் விளையாட்டுகள் தொடர்பான நிர்வாகங்களை மேற்கொள்கிறது.

1995ஆம் ஆண்டிலும் டெண்டுல்கருடன் ஐந்துவருட ஒப்பந்தமொன்றை இந்நிறுவனம் செய்திருந்தது. அப்போது டெண்டுல்கருக்கு 30 கோடி இந்திய ரூபாவே வழங்கப்பட்டது.

அதில் அதிக லாபம் பெற்றதால் புதிய ஒப்பந்தத்திற்கு முன்னதைவிட அதிக பணத் தொகையை சச்சினுக்கு வழங்கியுள்ளது வேர்ல்ட் டெல் நிறுவனம்.

கடந்த மே. முதலாம் திகதி மகாராஷ்டிரா மாநில அரசாங்கம் 'மகாராஷ்டிர பூஷன்' என்ற விருதை டெண்டுல்கருக்கு வழங்கி கௌரவித்தது.

மகாராஷ்டிரா மாநில அரசினால் வழங்கப்படும் அதி உயர் விருது இதுவாகும்.

இதேவேளை மும்பையிலுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் ஒரு பார்வையாளர் அரங்கிற்கு சச்சின் டெண்டுல்கரின் பெயர் சூட்டப்பட்டது.

# லா வழிகாட்டி சிறப்பிதழ்

# SEASON GUIDE

நாள் ஒவ...

...பான்னான நாள். அந்த நன்நாளுக்கு உ... படுத்திக்கொள்ள வேண்டாமா?

முதலில் திருமணத்துக்கு நீங்கள் எவ்வளவு பணம் செலவிடத் தாயாராக இருக்கிறீர்கள் என்பதைத் தீர்மானியுங்கள். அதற்கேற்பவே திருமண ஆயத்தங்களைச் செய்யுங்கள்.

திருமண திகதி தீர்மானிக்கப்பட்டவுடன், திருமண மண்டபத்துக்கு அல்லது கோயிலுக்கு முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

அழைப்பிதழ்களை தெரிவு செய்து முன் கூட்டியே அச்சிட்டுக் கொள்ள வேண்டும். விருந்தினர்களின் பெயர் பட்டியல் ஒன்றை தயாரித்து அழைப்பிதழ்களை விநியோகித்து விடுங்கள்.

திருமணத்துக்குத் தேவையான உணவுகளுக்கு கால அவகாசம் வைத்து ஓடர் செய்ய வேண்டும். விநியோகிக்கும் பொறுப்பையும் அவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள்.

முக்கியமாக திருமண கேக்கை எவ்வாறு செய்து கொள்ளப் போகிறீர்கள் என முடிவு செய்து, அதற்கும் விருந்தினர்களுக்கு கொடுக்கும் கேக்குக்கும் ஒழுங்கு செய்யுங்கள்.

திருமணத்துக்குத் தேவையான ஆடைகளை வாங்குவதை ஒரு மிகப் பெரிய வேலையாக பலர் நினைக்கின்றார்கள்.

மணமகள், மணமகன் ஆகிய இருவரிடமும் கலந்தாலோசித்து, பின்பு குடும்பத்தாருக்கும் ஏனையோருக்கும் தேவையான உடைகளை வாங்கி ஒழுங்குபடுத்திக் கொள்ளவும்.

மிக முக்கியமாக மணப் பெண்ணின் தாலியைச் செய்யத் தேவையான ஏற்பாடுகளை அவரவர் கலாசாரத்துக்கேற்ப செய்ய வேண்டும்.

திருமண புகைப்படம், வீடியோ எடுப்பவர்கள் இருவரைப் பதிவு செய்யுங்கள். வாகனமும் அவ்வாறே. இதன் மூலம் தேவையற்ற பதற்றத்தை தவிர்த்துக்கொள்ளலாம்.

மண்டப அலங்காரத்தையும், மணவறை ஒழுங்குகளையும் ஒரே நபரிடம் ஒப்படைத்து விட்டால் அவை நேர்த்தியாக அமையும்.

எளிமையான அலங்காரம் எப்போதும் அழகாக இருக்கும் என்பதை மனதில் கொள்ளவும்.

ஒவ்வொரு பெண்ணும் வேவ்வேறு விதத்தில் அழகானவர்கள். அவர்கள் மிக அழகாக இருக்கும் நாள் திருமணநாள்.

மணப்பெணை அலங்காரம் செய்பவரை முன் கூட்டியே சந்தித்து அவருடன் கலந்தாலோசித்து, எவ்வாறு அலங்காரம் செய்தால் பொருத்தமாக இருக்கும் எனத் தீர்மானியுங்கள்.

முகத்துக்கு ஏதும் மாற்றங்கள் தேவைப்பட்டால் செய்ய இது உதவியாக இருக்கும்.

இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ பெண்கள் தத்தமது பாரம்பரியங்களுக்கு ஏற்ப ஆடைகளை ஒழுங்குப்படுத்த வேண்டும்.

இந்துப் பெண்கள் சேலையை கடையில் வாங்குவார்கள். கிறிஸ்தவ, முஸ்லிம் பெண்கள் ஆடைகளை தயார் செய்ய வேண்டும். அதற்கான ஒழுங்குகளை முற் கூட்டியே செய்ய வேண்டும்.

திருமணத்துக்கு நாள் நெருங்கும் போது மணப்பெண் பதற்றத்தை விட்டு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். நன்றாக நித்திரை கொண்டு எழும்பவேண்டும்.

திருமண ஏற்பாடுகள் செய்யப்படும் போது மணப்பெண்ணின் விருப்பங்களுக்கு இடமளிப்பது அவசியம். ஏனெனில் அவருக்கென சில கனவுகள் ஆசைகள் இருக்கும்.

மணப்பெண்ணுக்கு மட்டுமா ஆயத்தம் என யோசிக்க வேண்டாம். இன்று பல ஆண்கள் தமது முகவாகு, தலைமுடி என்பவற்றில் அதிக கவனம் எடுக்கின்றனர்.

இவற்றில் ஆர்வம் உள்ளவர்கள் ஆண்களுக்கான அழகு நிபுணர் ஒருவரைச் சந்தித்து தகுந்த ஆலோசனை பெறலாம்.































# ஆபத்தில் உதவுபவர்கள் உங்கள் நண்பர்களே!



உலகத்திலேயே இன்றியமையாதது நட்புத்தான். அம்மாவின் கையால் சாப்பிட்டால் தான் வயிறு நிரம்பும். அதே போன்று ஒவ்வொருவருக்கும் தன் அன்பையும், வேதனையையும், மகிழ்ச்சியையும், துக்கத்தையும் பகிர்ந்து கொள்ள ஒரு நண்பனோ அல்லது நண்பியோ இருக்க வேண்டும்.

மேற் கூறப்பட்ட கருத்துக்கள் மூலம் உலகத்தில் மிகவும் உன்னதமான, ஈடிணையில்லாத உறவு நட்பு என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

இயந்திர வேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் உலகத்திலே நண்பர்களுடன் நட்பை வளர்த்துக் கொள்ள எங்கே நேரம் ஒதுக்க முடியும் என்று பலர் அங்கலாய்க்கின்றனர்.

ஆனால் போராட்டம் நிறைந்த இக்கால வாழ்க்கையில் நண்பர்களின் உதவி மிகவும் தேவை. நண்பர்களை உடையவர்கள் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கு சோர்வோ, ஏக்கமோ, உடல்நலக் குறைவோ அதிகமாக ஏற்படுவதில்லை என மனோ தத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

உண்மையான நண்பன் என்பவன் உங்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படும் போது தன் வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு உங்களுக்கு உதவவேண்டும். நீங்கள் வெற்றியடையும் போது உங்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். நீங்கள் துக்கத்துடன் இருக்கும்போது அவன் தோள் கொடுக்க வேண்டும். உங்கள் எதிர்பார்ப்புகளும், திட்டங்களும் நிறைவேற வேண்டுமென்று ஊக்கு வித்து அறிவுரைகள் கூறவேண்டும். உங்களை மதித்து நேசிக்க வேண்டும். நீங்கள் விடும் தவறுகளைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

இப்படியான உயர்வான உறவான நட்பை வளர்த்துக் கொள்ள நாம் கட்டாயமாக நேரம் ஒதுக்கியே ஆகவேண்டும்.

இளமையாக இருக்கும் போது பல நண்பர்களைப் பெற்று ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் இருக்கும் பலர் திருமணத்தின் பின் நண்பர்களுடன் உள்ள உறவை வலுப் படுத்திக்கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். இதற்குக் காரணம் குடும்பத்தையும் கவனித்துக் கொண்டு பிறகாரியங்களையும் பார்த்துக்கொள்ளவே நேரம் சரியாக இருப்பதுதான்.

எவ்வளவு தான் வேலைகள், சிரமங்கள் இருந்தாலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் நண்பர்களுடன் உள்ள உறவைத் துண்டித்து விடாதீர்கள். ஏனெனில் ஆபத்துக்கு உங்களுக்கு உதவுபவர்கள் அவர்கள் தான்.

நண்பர்களுடனான உறவை வளர்த்துக் கொள்ள சில ஆலோசனைகள்.

* ஒரு வாரத்தில் ஒரு நாள் மாலைப் பொழுதை நண்பர்களுடன் இனிமையாகக் கழிப்பது என்று முடிவு செய்யுங்கள்.
* நண்பர்களின் பிறந்தநாள், திருமண நாளை நினைவு கூர்ந்து வாழ்த்து மடல்களை அனுப்பி வையுங்கள்.
* உங்கள் தகுதிக்கு ஏற்றபடி சிறிய பரிசுகளை பரிமாறிக் கொள்ளுங்கள்.
* உங்கள் நண்பரைச் சந்தித்து பல ஆண்டுகள் ஆகிவிட்டாலும் அவர்தான் முதலில் உங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று இருந்து விடாமல் முதலில் நீங்களே தொடர்பு கொள்ளுங்கள்.
* நேரம் இல்லையே என்று அங்கலாய்க்காமல் சந்தர்ப்பம் கிடைக்கும் போது தொலைபேசி மூலம் நண்பர்களுடன் கதைத்து நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.
* சம வயதுள்ளவர்களுடன்தான் நட்புக் கொள்ள வேண்டும் என்றில்லை. வித்தியாசமான வயதைச் சார்ந்தவர்களுடனும் நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் அவர்களிடமிருந்து பலதரப்பட்ட அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
* நண்பர்களிடம் எதையும் மறைக்காமல் வெளிப்படையாகப் பேசுங்கள். வெளிப் படையான பேச்சு நட்பை மேலும் உறுதியாக்கும்.

எனவே சகோதரிகளே உங்கள் இயந்திர வாழ்க்கையை சுவாரசியமாக்க நண்பர்களுடனான உறவை இறுக்கமாக வலுப்படுத்திக் கொள்ளுங்கள்!

பெண்

பிரதீபா

# இது பூஜை அறை

வீட்டில் மிகவும் புனிதமான இடமாக போற்றப்பட வேண்டியது பூஜை அறை ஆகும்.

வணக்கத்துக்குரிய பூஜை அறையைப் புனிதமாக வைத்துக்கொள்ள சில ஆலோசனைகள்:—

* சுவாமிப் படங்களைத் துடைத்து பளிச் சென்று வையுங்கள்.
* படங்களைத் துடைக்கும் நீரில் கற்பூரத்தைக் கலந்து துடைத்தால் படங்களைப் பூச்சி அரிக்காது.
* எவ்வளவு சிறிய இடத்தில் சுவாமிப் படங்களை வைத்தாலும் அந்த இடத்தையும், அதன் அயல் பகுதிகளையும் சுத்தமாக வைத்திருங்கள்.
* விளக்கு, மணி, தீபத்தட்டு, தண்ணீர் செம்பு ஆகியவற்றை வாரத்திற்கு ஒருமுறை மினுக்கிச் சுத்தம் செய்யுங்கள்.
* குத்து விளக்கிற்கு எண்ணெய் வெளியே சிந்தாதபடி அளவாக விட்டு ஏற்றுங்கள்.
* எண்ணெய் பிசுக்கைத் துடைக்க விளக்கடியில் ஒரு துணியை கட்டாயமாக வைத்துக் கொள்ளுங்கள்.
* குத்து விளக்கை ஏற்றப் பயன் படுத்திய தீக்குச்சிகளை அங்கேயே போடாமல் அவற்றை அப்புறப்படுத்தி விடுங்கள்.
* ஊதுபத்தி ஏற்றி வைக்கும் தாங்கியின் அடியில் ஒரு தட்டு வைத்து சாம்பலை அதில் சேகரித்து தினமும் அதை அப்புறப்படுத்திச் சுத்தம் செய்து விடுங்கள்.
* விளக்கு, மணி, தீபத்தட்டு, விபூதித்தட்டு, குங்குமச் சிமிழ், தண்ணீர் செம்பு ஆகிய வற்றை உரிய இடங்களில் ஒழுங்காக வையுங்கள்.
* தினமும் சுவாமிக்குச் சாத்தும் பூக்களை மறுநாள் அப்புறப்படுத்தி புதிய பூக்களை வையுங்கள்.
* கோயிலிலிருந்து எடுத்து வரும் விபூதி, குங்குமம் ஆகியவற்றை சிந்தாமல் அவற்றுக்குரிய சிமிழ்களில் உடனேயே போட்டு வையுங்கள்.

பூஜை அறை தூய்மையாக இருந்தால் தான் மனம் ஒன்றி வணங்க முடியும். எனவே பூஜை அறையை மனதுக்கு இதம் தரும் ரம்மியமான இடமாக அமைத்துக் கொள்வோம்.





# எண்ணெய் பசையான சருமத்துக்கு

எண்ணெய்ப் பசையுள்ள சருமம் உடையவர்கள் வெயில் காலத்தில் அதிகம் பாதிக்கப் படுகிறார்கள்.

அநேகமாக பருவ வயதில் உள்ளவர்களுக்கே எண்ணெய்ப் பசையுள்ள சருமம் இருக்கும். இவர்களுக்கு பருக்களின் தொல்லையும் இருக்கும். இத்தகைய சருமம் உடையவர்களுக்கு சில ஆலோசனைகள்:—

* ஒரு நாளில் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு தடவை சுத்தமான குளிர்ந்த நீரினால் முகத்தைக் கழுவுங்கள்.
* முகத்துக்கு மென்மையான துவாயையோ அல்லது ஒரு முறை மட்டுமே பயன்படுத்தும் 'ரிஷ்யூ'வையோ உபயோகியுங்கள்.
* தலைக்கு அதிகம் எண்ணெய் பூசுவதைத் தவிருங்கள்.
* தலைக்கு எண்ணெய் வைத்தால், வைத்து இரண்டு மணித்தியாலங்களுக்குப் பின் சுத்தமாக அலசிக் குளித்து விடுங்கள்.
* எண்ணெய் கலந்த உணவுகள் உண்பதைத் தவிருங்கள்.
* ஊறுகாய் வகைகளையும், இனிப்பு வகைகளையும் இயன்றளவு குறைப்பது நல்லது.
* வெயில் காலத்தில் குளிர்பானங்களையும், ஐஸ்கிறீமையும் தவிர்த்து, சுத்தமான நீர், இளநீர், மோர் என்பவற்றை அதிகமாகப் பருகுங்கள்.
* கீரை வகை, பழங்கள், பச்சைக்காய்கறிகளையும் அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

# அழகு மட்டும் போதாது சுவையும் வேண்டும்

திருமதி மல்லிகா ஜோசப்பின் வீட்டுக்குள் சென்றவுடன் அவரின் எளிமையான தோற்றமும் மாறாத புன்னகையும் எம்மை வரவேற்றன.

சமையற்கலை, ஓவியம், அழகுக் கலை என பல்வேறு துறைகளில் திறமையுள்ள இவரிடம், கேக் தயாரிப்பதை சுய தொழிலாகச் செய்ய விரும்பும் பெண்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள் எனக் கேட்டோம்.

''என்னிடம் வரும் மாணவர்கள் பலர், எமக்கு எல்லாம் தெரியும் ஐசிங் பற்றிக் கொஞ்சம் படிக்க வேண்டும் எனக் கூறுகிறார்கள்.

''எனக்கு எல்லாம் தெரியும் என்ற மனநிலையை விட்டு முதலில் வெளியே வர வேண்டும். அப்போது தான் புதியவற்றைக் கற்க முடியும்.

''கேக் தயாரிப்பது ஒரு கலை. அதில் ஆர்வம் தேவை. அதேபோன்று செயற் திறமையும் இருக்க வேண்டும்.

''இவை அனைத்தும் உள்ள ஒரு பெண், கேக் தயாரிப்பதில் டிப்ளோமா பாடத் திட்டத்தைக் கற்பது அவசியம். அதில் அடிப்படை விடயங்களிலிருந்து கற்பிக்கப்படும்.

''கேக் தயாரிப்பு சுய தொழிலுக்கு அதிக அளவு பண முதலீடு தேவைப்படும் என்று பலரும் நினைக்கிறார்கள்.

''இது ஒரு தவறான கருத்து. வீட்டில் உள்ள பொருட்களை வைத்துக் கொண்டு தொழிலை ஆரம்பிக்கலாம்.

''நானும் இத்துறையில் பிரவேசித்தது இப்படித் தான்.''

திருமதி மல்லிகா ஜோசப் எம்மிடம் மேற்கண்டவாறு கூறினார்.

''கிடைக்கும் வருமானத்தில் ஒரு சிறிய தொகையைச் சேமித்து மேலதிகமான பொருட்களை ஆறுதலாக வாங்கலாம்.

''கேக் செய்யும் போது தனியே அழகு மட்டும் இருந்தால் போதாது. சுவையும் இருக்க வேண்டும். அத்துடன் சுத்தமாகவும், நேர்த்தியாகவும் இருப்பதையே வாடிக்கையாளர்கள் விரும்புகின்றனர்.

''தொழிலை ஆரம்பிக்கும் போது, நண்பர்கள், உறவினர்களுக்கு முதலில் செய்து கொடுக்கவேண்டும். அவர்கள் மூலமாக மற்றவர்கள் தெரிந்து கொள்வார்கள்.

''ஒருபோதும் வாடிக்கையாளர் மனம் கோணும்படி நடந்து கொள்ளக் கூடாது'' என்று அவர் மேலும் சொன்னார்.



கேக் செய்வதை சுயதொழிலாகச் செய்ய விரும்பும் பெண்களுக்கு வழி காட்டிய திருமதி ஜோசப் தனது அனுபவத்தில் ஒரு சில அறிவுரைகளையும் கூறினார்:

''பெண்ணாகப் பிறந்த ஒவ்வொருவரும் சமைக்க, தைக்க கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும். வேறொருவரிடம் கொடுத்து வேலை செய்விக்கவும் எமக்கு விஷயம் தெரிந்திருப்பது அவசியம்'' என்றார்.

ஆடம்பரமில்லாத பிரபல்யம் பெற்ற ஒருவரின் அழகான வீட்டிலிருந்து பல விடயங்களைத் தெரிந்து கொண்ட திருப்தியில் நாம் விடை பெற்றுக் கொண்டோம்.

பேட்டி — பசீனா

# சுடர் ஒளி சிறுகதை

# தொலைபேசி....!

சி.சிவாணி

நர்மதாவுக்கு திரும்பவும் தொலைபேசி அழைப்பு வந்திருப்பதாக லொட்ஜ் பெடியன் சொல்லிவிட்டுப் போகின்றான். அவளுக்கு அலுப்புத் தட்டவில்லை. வாழ்க்கையின் கடைசி எல்லையே அந்த தொலைபேசி அழைப்பில்தான் தங்கியிருக்கின்றது.

கொழும்பு நகரம் சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருக்கிறது.

தினமும் 'லொட்ஜு'க்கும், தொலைபேசி அழைப்பு வருகிற கொமினிகேசனுக்கும் என்று இவள் நடந்து வருவது வழமையாக இருப்பதால் புதிதாக எதுவும் கடினமாக இல்லை. மனதில் ஏறிய சுமையால் கால்கள் பின்னிக் கொண்டாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவள் நடக்கும் வேகத்தில் எந்த வாழ்வுக்கும் தயாராகி விட்ட துணிவைத் தான் காட்டி நிற்கிறதோ என்னவோ?

இன்றைக்கு இந்த தொலைபேசி அழைப்பு வழியாக அவளுக்கு புதிதாக என்ன செய்தி வரப்போகிறது.

"ஒரு மணித்தியாலத்தில எடுக்கிறன் எண்டு சொன்னவர்" 'கொமினி கேசன்' பெடியன் சொல்லி விட்டு கதிரையொன்றைக் காட்டுகிறான். தினமும் அவள் வருகின்றாள். வருவாயைப் பெற்றுக் கொடுக்கும் அவளைப் போன்றவர்களுக்காக அந்த வாசல் வரவேற்போடு காத்திருக்கிறது. தெளிவில்லாத மனச்சுமைகளோடு ஒன்றிரண்டல்ல, ஓராயிரம் ஓட்டங்களோடு வந்து போகும் அவளது வாழ்விற்கு தொலைபேசி கூட ஒருவிதத்தில் விரோதியாகி விட்ட மாதிரித்தான்.

மழை நீர்பட்டுத்தெறிக்கும் கழிவுக்கான் ஓரமாக, அவள் பார்வை விழுந்தது.

ஊரில் என்றால் மழை காலம் வந்தாலே கொண்டாட்டம் தான். கட்டிலை விட்டு இறங்காமல் அம்மா சமைக்கிற சாப்பாட்டுக்காக மூன்று வேளையும் காத்திருந்து உடன் பிறந்தவர்களோடு அடிபட்டுக் குதூகலித்து, காகிதக் கப்பல் விட்டு அது தாண்டுபோகாமல் கரை சேரும் வரை கைதட்டி ஆர்ப் பரித்து அம்மா, முதுகில் 'நச்'சென்று ஓங்கி வைக்கும் வரை அந்தக் குதூகலத்தில் இருந்து மீள முடியாமல் இருந்தது நினைவுத் திரையில் ஓடி மறைந்தது.



கமலம் மாமியின் தொலைபேசி அழைப்பு வரும்வரை இந்த வாழ்க்கையில் எத்தனையோ எதிர்பார்ப்புக்கள் இருந்தன. 'ஷெல்'லடி பழக்கப்பட்டு அது வாழ்க்கைக்குள் இணைந்து போன ஒன்றாக இறுக்கமாகி விட்டது.

நர்மதா பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருட பரீட்சைக்காக மிக அக்கறையோடு படித்துக் கொண்டிருந்தாள். இடம்பெயர்வு, அகதி வாழ்க்கை இவை எல்லாவற்றினதும் அனுபவத்திற்குள்ளும் அவளது கல்விப் படிப்பும் அதிகமாயிருந்தது. தாளப்பறக்கிற மிக் விமானங்கள், ரொக்கட் வீசும் ஷெல்கள் இவற்றுக்கு மத்தியில் அவள் பாடப் புத்தகத்தோடு இருந்தாள்.

"நல்ல குடும்பம், நல்ல பெடியன் சீதனமும் ஒன்றும் இல்லாமல் நகைகூட வேண்டாம் என்று வரேக்க ஓமெண்டு சொல்லுங்கோ உதயத்துச் செவ்வாய்க்குப் பொருந்துகிறது கஷ்டம்."

கமலம் மாமி தினமும் கொழும்பிலிருந்து தொலைபேசியில் அவசரப்படுத்திக் கொண்ட விதம் நர்மதாவின் வாழ்வில் ஏற்பட்ட திடீர் திருப்பமாகிப் போய்விட்டது. அம்மாவின் மடிச் சூட்டுக்குள் முகம் புதைத்துப்படுத்துக் கொள்கிற நர்மதா, இதற்கு இஷ்டப்படவில்லை.

"அம்மா என்னைப் படிக்க விடு படிச்சு இந்த நாட்டிலேயே ஒரு வேலை எடுக்க வேணும். எனக்கு வெளிநாடு போறதிலை இஷ்டம் இல்லை."

நர்மதாவின் நியாயமான மறுப்புக்களை எவரும் கேட்பதாக இல்லை. யாழ்ப்பாணச் சூழலை ஒரு காரணமாகக் காட்டி அவளை எல்லோரும் எதிர்க்கத் தொடங்கிய போதும் வெகுவாக நிலை குலைந்து போனாள்.

மண்வாசனை கரைந்து நிற்கும் அவளது பூந்தோட்டம், நாலு குட்டிகளோடு தாய்மை நிரம்பி நிற்கும் அவளுடைய நாய் இவையெல்லாம் அவளைப் பிரிய மனதில்லாத போது ஆறறிவு படைத்த மனிதர்கள் மட்டும் அவளை அனுப்ப விரும்புவதை நினைக்கும் போதுதான் அவளுக்குப் புதுமையாக இருந்தது. அன்றிரவு அம்மாவும் வெகுவாக அழுதாள்.

"இந்த நாடு .......... எப்ப படிப்புக் குழம்புமோ தெரியாது. உன்ர படிப்புக்கு இஞ்ச கலியாணம் கட்டிக்கொடுக்க எத்தனை லட்சம் வேண்டும் என்று நினைச்சுப் பார் பிள்ளே, பின்னால் இருக்கிற தங்கச்சிக்கு ஆர் பொறுப்பு."

அம்மா மூக்கைச் சிந்தி அழுது வடித்த போது அவளுக்கு தாய் மீது எரிச்சல் வந்தது. அவர்களுடைய இயலாமைக்காக அவளைத் தீனியாகப் போடும் அந்தத் தன்மைக்கு அவள் ஆட்படப் போவதில்லை என்று பிடி வாதமாக மறுத்த போதுதான், அவள் எதிர் பாராத விதமாக தாய் அவளுடைய காலில் விழுந்து புலம்ப முடிவில்லா நர்மதாவின் கற்பனைக் கோட்டைகள் சரிந்து விழ படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு கமலம் மாமி பேசிய திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தாள்.

வானத்தில் தெரியும் முகிலுக்குள்ளே மறைந்து போவது போன்ற அவளது ஆயிரக்கணக்கான ஆசைகளும் அந்த நொடியில் மறைந்து போய் எல்லாவற்றையுமே சுகமாக எடுத்துக்கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தினை ஆண்டவனிடம் கேட்டுக்கொண்டு அவள் எதற்கும் தயாராகிவிட்டாள்.

இரண்டாண்டு முடியும் முன்பே அவள் தனது பல்கலைக்கழக வாழ்வை முடித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

பணக்கார மருமகன் கிடைத்த மகிழ்வு அம்மாவின் முகத்தில் ஆயிரம் மின்னல்களை தோற்றுவித்த மகிழ்ச்சி. மகள் அனுப்பும் பணம் பல மடங்காக யாழ்ப்பாணத்திற்கு வந்து சேரப் போகிறது என்னும் ஒருவித புத்துணர்ச்சி.

பக்கத்துவீட்டு மகேஸ்வரி அத்தையைப் போல அம்மாவும் இனி எதற்கும் பயப்படத் தேவையில்லை. மாதம் இரு தடவையாவது கொடுக்கிற நிவாரணத்திற்கு விழுந்தடித்து ஓடத் தேவையில்லை. கரைசேர ஒரு குமர் வீட்டில் இருக்கிறாள் என்ற ஆதங்கமும் அம்மாவுக்கு இனி இல்லை.

கட்டிக் கொடுத்ததும் பெற்றெடுத்த பொறுப்பு முடிந்ததென்ற மகிழ்வில் தாயும், தந்தையும் யாழ்ப்பாணத்திற்கு திரும்பிய போதுதான் நர்மதா தனது தனிமையை உணர்ந்தாள். வழமையான சம்பிரதாயங்களை சுந்தரின் வீட்டாரோடு முடித்துக் கொண்டு அவர்கள் திரும்பியதும் ஆறுமாதத்தில் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து இவளை அழைத்துக்கொள்வதாக உறுதிப்படுத்தும் அவளது சுந்தரின் வாக்கின் முழு நம்பிக்கை ஒளி துவங்கக் காத்திருந்தாள்.

தனிமை அவளைச் சூழ்ந்து கொள்ள சொந்தக்காரர்கள் நினைவும், அம்மாவின் நினைப்பும் அடிக்கடி வந்து மனதைக் குழப்பும். ஆனால் கமலம் மாமியின் அரவணைப்பில் ஓரளவு தேறக்கூடிய நிம்மதி இருந்தது.

அவளுடைய மனக் குழப்பத்தைப் போக்கு வதற்காக அடிக்கடி சுந்த ரின் தொலைபேசி அழைப் புக்கள்வந்தன.

யாழ்ப்பாணத்தில் தொலைபேசி வசதியின் பலனாக தாயும் அடிக்கடி பேசிக்கொள்கின்றாள்.

"பிள்ளை அவர் என்னவாம், எப்ப கூப்பிடுகிறாராம்? கெதியா கூப்பிடச் சொல்லு, உங்க இருக்கிறது பாதுகாப் பில்லை."

அவர்களுடைய உறவு, தொலைபேசி அழைப்புக்களில் வளர்ந்தது. 'நர்மு' என்று தாய் அழைக்கும் அந்த சிறுபிள்ளை ஞாபகமும் மறைந்து எங்கோ தூரப் போய்விட்டதாக அவளால் உணர முடிகிறது.

அவள் சிரமப்பட்டுப் படித்த பரீட்சையும் முடிந்துவிட்டதாக, வகுப்புத்தோழி அன்று தொலைபேசியில் கூறியிருந்தாள்.

சொட்டுச் சொட்டாகப் பெய்யும் மழை நீர் வானத்தின் எல்லைக் கோடுகளை மீறிக்கொண்டு பூமிக்குள் நுழைந்து விட்டதால், அவற்றை கரையேற்ற ஓரமாயி ருந்த கழிவுக் கான்கள் இழுத்துக்கொண்டு ஒரு பக்கமாக ஒதுங்கிக் கொண்டன.

சூரியன் விடுவதாக இல்லை, வானம் மங்கி கரு நீலம் பூசிக்கொண்ட அந்த வேடிக்கையின் வேளை நர்மதாவுக்கு வியப்பைக் கொடுத்தது.

"அக்கா! அவற்ற கோல் வாங்கோ"

அழைப்புக்காய் காத்திருந்தவள் சுதாகரித் துக் கொண்டு எழுந்து கண்ணாடிப் பெட்டிக் குள் தன்னை மறைத்துக் கொள்கின்றாள்.

சுந்தரின் குரல் கேட்கும் ஆவலில் கண்களை மூடிக்கிடந்தவளுக்கு அவனின் திடீரென்ற பேச்சு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

மறுமுனையில் சோகம் தாளாமல், பேசிய வார்த்தைகளில் மனமுடைந்து போய் எதையுமே கூற மனமற்றவளாகி நிற்கிறாள்.

"எப்ப"

"நாளைக்கு பத்து மணி பிளைற்றில"

நர்மதாவின் கை செயலிழந்து சுவரில் அழுத்துகிறது. மௌனம் கலையாத இறுக்கத்தோடு கூண்டை விட்டு வருகின்றாள். வாசலில் கிடந்த சறுக்கலில் கால் தடுக்கி விழுந்த சமயம்,

"அக்கா காசு தராமல் போறியள்?"

என்ற வார்த்தையில் சுயநினைவுக்கு வந்து அந்த நிமிடங்களுக்கே உள்வரும் அழைப்புக்கு பணத்தை எடுத்துக் கொடுத்தாள். அங்கிருந்து விலகி இறங்கி நடக்க, தெருவில் வாகனமொன்று பள்ளத்தில் நின்ற சேற்று நீரை அள்ளி வாரி இறைத்துவிட்டு விலகிப் போகிறது.

பேச சக்தியற்றவளாய் வந்து உட்கார்ந்த போது கமலம் மாமியின் எந்தக் கேள்விக்கும் பதில் கூற முடியாத ஒரு கருங்கல்லாகிவிட்டிருந்தாள்.

"என்னவாம் பிள்ளே உண்ணாவிரதத்துக்கு ஒரு முடிவுமில்லையாமே"

* * *

பலத்த சத்தத்தோடு வெளியே மழை பெய்கிறது. ஊனமுற்ற மனமாய் அவளும் அழத் தொடங்குகிறாள்.

"என்னவாம் பிள்ளே"

"சொல்லன்"

திரும்பவும் கமலம் மாமிதான் கேட்கிறாள்.

"நாளைக்கு திருப்பி அனுப்புகினமாம் பத்து மணிக்கு" சொல்லிவிட்டு வெளியே வெளிக்கிடுகின்றா மழை பெய்து கொண்டிருக்கின்றது.

இருபத்தைந்து நாட்களாக, அவள் தொலைபேசி அழைப்புக்காய் நடந்து காத்திருந்து இறுதியில் தோற்றுப் போய்விடுவோமோ என்ற கேள்வி... ஏதோ ஒரு விரக்தியில் குலுக்குகின்றாள்......

* * * *

கனதியான காத்திருப்போடு காலை விடிகிறது. எதையும் மறுப்பதற்கு முடியாமல் விலங்குகளோடு சுதந்திரம் பெற்ற தமிழர்களைக் காவு கொண்டு போவதற்கென்று விடியும் விடியலாக அது இருக்கிறது. நர்மதா வீங்கிய விழிகளைக் கழுவிக் கொண்டு நிற்கிறாள்.


சொந்த மண்ணில் அகதிகளாகவும் சோற்றுக்குக் கையேந்தியும் அடிமைப்பட்டு நிற்கும் தமிழர்களே, அழுகையோடு படைத்த ஆண்டவனே கையேந்த மனமற்று நின்ற அவளைத் தேடி கமலம் மாமி ஓடி வருகிறாள்.

திரும்பவும் அவளுக்குத் தொலைபேசி அழைப்பு வந்திருப்பதாக கொமினிகேசன் பொடியன் சொல்லி விட்டுப் போகின்றான்.

இம்முறை நர்மதா போகவில்லை. அவளுக்குத் தெரியும் ஏதோ ஒன்றின் அழுத்தம் தான். அவளுக்குள் விழுந்த முடிச்சு அவிழ்க்கப்படக் காத்திருக்கின்றது. விவரம் அறிந்து வந்த கமலம் மாமி ...... நர்மதாவிடம் சொல்வதற்கு தயங்கி நிற்பதற்கும் "ஏயாபோர்ட்டில் வச்சு விசாரணைக்கு கூட்டிக் கொண்டு போயிட்டினமாம்" என்று கொமினி கேசன் பெடியன் சொல்வதற்கும் சரியாக இருந்தது.........

மீண்டும் இதயம் கலங்கி நிற்க நிமிர்ந்தவள் ஒரு நம்பிக்கையோடு காத்திருக்கிறாள். அவளுக்காக திரும்பவும் தொலைபேசி அழைப்பு வரும்.

# தகவல் சேகரிப்பில் தன்னிகரில்லா ஸி.டி. புரட்சி!



கைக் கடக்கமான ஃவ்ளொப்பிகள் (Floppy) தற்போது எவ்வளவோ வழக்கத்தில் இருக்கின்றன. ஆனால் அவற்றில் குறைந்த கொள்ளளவு உடைய தகவல் களையே 1.44 மெகா பைட்ஸ் (MegaBites) பதிவு செய்ய முடிகிறது. மல்டி மீடியா கொண்ட கோப்புக்கள் அதிக அளவு இடம் பிடிப்பவை.

இவற்றை எல்லாம் ஃவ்ளொப்பிகளில் பதியாமல் ஸி.டிகளில் பதிவு செய்து எளிதாகப் பயன்படுத்தலாம்.

இந்த வகையிலேயே தற்போது வெளியாகும் திரைப்படங்கள், ஒலிப் பேழைகள் என்பவை எல்லாமே ஸி.டி வடிவில் வெளியாகின்றன.

இந்த ஸி.டி தொடர்பாகச் சற்றுப் பின்னோக்கி அதன் வரலாற்றை எட்டிப் பார்த்தால் — 1980களில் "பிலிப்ஸ்" நிறுவனமே ஸி.டிகளை அறிமுகப்படுத்தியது.

ஒரு காலத்தில் எல்.பி (Long Play) என்ற இசைத் தட்டுகள் பாடல்கள் கேட்கப் பயன்படுத்தப்பட்டு வந்தன.

பறக்கும்தட்டுப் போல் பெரிய உருவமுடையதாகவும், கைக்கடக்கமற்றதாகவும், பாவனைக்குக் கடினமான வகையில் இந்தத் தட்டுக்கள் அமைந்திருந்தன.

இதனைக் கருத்தில் கொண்டு 'பிலிப்ஸ்' நிறுவனம் இவற்றை ஸி.டியில் பதிவு செய்ய ஆரம்பித்தது. இந்தப் புதியவகையின் உச்சம் பயன்பாடு என்னவென்றால் உயர்ரக ஒலியமைப்பு. பழைய பாடல்களைக் கேட்கும் போது வழமையாகக் கேட்கும் "ஷ்ஷ்...." என்ற எரிச்சலூட்டும் பின்னணிச் சத்தம் ஸி.டியில் தவிர்க்கப் பட்டது.

தெட்டத் தெளிவாக, தூய்மையான இசை ஒன்றைக் கேட்கக் கூடியதாக உள்ளது என்றால் அந்தப் பெருமை ஸி.டி வகையையே சேரும்.

அலுமீனிய முலாமிடப்பட்ட சிறிய பிளாஸ்றிக் வடிவான இந்த வகை ஸி.டிகளில் மில்லியன் பிட்ஸ் கணக்கில் தகவல்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

ஸிடிகளில் ஸி.டி. ரோம் CD - ROM (CD - Read Only Memory) ஸி.டி ரோம் மல்டி தரெட் (CD - ROM Multi Thread) ஸி.டி..ஆர் டபிள்யு (CD Rewritable), டி.வி.டி. ரோம் (Digital Versatile Disk Random Access Memory) போன்ற பல வகைகள் உள்ளன.

ஸி.டிகள் உபயோகப்படுத்தப்படும் பணிகளுக்கு ஏற்ப மேற்கண்ட ஸி.டி வகைகள் வகைப்படுத்தப்படுகின்றன.

ஸி.டி வகைகளில் சந்தையில் தற்போது அதிகம் பயன்படுத்தப்படுவது CD - ROM.

1984இல் முதன்முதலாகப் பயன்பாட்டுக்கு வந்த ஸி.டி ரோமில் சுமார் 680 மெகா பைட்ஸ் அளவு தகவல்களைப் பதிவு செய்யலாம். இந்த ஸி.டியின் திறனை இன்னும் தெளிவாக கூறுவதானால் 470 ஃவ்ளொப்பிகளில் சேகரிக்கும் தகவல்களை ஒரு ஸி.டி. ரோமில் பதிவு செய்யலாம்.

நேர்முகப் பரீட்சைக்கான கேள்விகள் முதல் அண்மையில் வெளி யான திரைப்படம் வரை இன்று எல்லாமே ஸி.டி மயம்.

திருக்குறளே ஸி.டியில் வெளிவந்து விட்டது என்றால் பாருங்களேன்!

இணையத்தின் மூலம் வேண்டிய படங்களை இணையிறக்கம் (Down load) செய்யும்போது படங்களில் ஏற்படும் தரக்குறைவை (Quality) ஸி.டிகளில் பார்த்த பின்னர் தான் உணரமுடிகிறது.

இன்றைய விஞ்ஞான உலகின் இணையற்ற கண்டு பிடிப்புக்களின் ஸி.டியும் ஒன்றே!



"காதில என்ன புதுசா பெரிய தோடு"

"இதுதான் ஸி.டி. தோடு. இரண்டு ஸி.டி.க்கள் இருந்தால் போதும் காதில் மாட்டிக்கலாம்."

# பித்தன் பதில்கள்



ஆர். சுவர்ணலதா, கொட்டாஞ்சேனை.
கே : டியர் பித்தனே...! சுசந்திகா சந்திரிகா வானால்...?
ப : பத்திரிகையாளர்கள் உள் மூச்சி ழைக்க ஓடிக் கொண்டே பேட்டிகள் எடுக்க வேண்டி இருக்கும்.

பி.ஜானகி, நல்லூர்.
கே : பித்தனே...! தம் மீதான தடையை நீக்கும் வரை சமாதானப் பேச்சில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று புலிகள் அறிவித்து விட்டனரே?
ப : தடைக்காக ஓடித் திரிந்த போது அரசுக்குத் தெரிந்திருக்க வேண்டும் இப்படியான ஒரு நிலைமை ஏற்படும் என்று.

எல்.எம். ஜவ்பர், மன்னார்.
கே : பித்தனே...! படையினர் மீண்டும் அக்கினிச் சுவாலை நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தால்....?
ப : சூடு கண்ட பூனை அடுப்படி நாடுமா?

கே. மாலதி, வத்தளை.
கே : ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
ப : ஐம்பதில் வளைந்து தான் என்ன பயன்?

எஸ்.லோகன், வவுனியா.
கே : கருணாநிதி மீது ஊழல் மோசடி வழக்குகளைத் தொடுப்பாரா ஜெயலலிதா?
ப : தொடுப்பதென்ன, சிறையில் அடைக்கவும் பார்ப்பார்.

ஆர். முனியாண்டி, கம்பளை.
கே : பித்தனே...! முனிவர்கள் கொடுக்கும் வரம் நிச்சயம் பயன் தருமா?
ப : முற்றும் துறந்த முனிவர் வரம் கொடுத்தால் நிச்சயம் பலன் தரும்.

ஆர். பாலன், மாத்தளை.
கே : பித்தனே...! மின்சாரத்தையும் காதலியையும் ஒப்பிட முடியுமா?
ப : மின்சாரத்தினால் ஒளிவரும். காதலியினால் பழி வரும்.

சொர்ணம், கரவெட்டி.
கே : சில ஆண்கள் காதலித்துப் பின் கைவிட்டு விடுகிறார்களே?
ப : காதலிப்பவர் 'கைவிடுவது' புதுமை இல்லையே.

ரா.சேகர், கம்பளை.
கே : கைதுகள் இல்லாத விசாரணைகள் மாவனல்லையின் உண்மை நிலையை வெளிக்கொணருமா?
ப : தற்பொழுது தான் சிலர் கைதாகி இருக்கிறார்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.



ஆர்.சுபன், வவுனியா.
கே : பித்தனே...! தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பது பழமொழி. புதுமொழி ஒன்று சொல்லுங்களேன்.
ப : மனைவி சொல் மிக்க மந்திரமில்லை.

சு.ஜானகி, தெஹிவளை.
கே : பித்தனே...! ஜெயலலிதா, கருணா நிதி ஆகியோரை ஓரங்கட்டி விட்டு சிம்ரன், மும்தாஜ், லைலா, ஜோதிகா ஆகியோர் தமிழக சட்ட சபைத் தேர்தலில் போட்டியிட்டிருந்தால் உங்கள் வாக்கு யாருக்கு?
ப : அவர்கள் போட்டியிடும் சின்னங்களைப் பற்றி முதலில் சொல்லுங்களேன்..!



அ. ஜெயந்தி, கண்டி.
கே : பித்தனே...! எனது கணவர் அடிக்கடி குடிக்கிறார் எப்படித் திருத்தலாம்?
ப: முதலில் ஒரு தலைப்பட்சமான "முத்த நிறுத்தம்" செய்து பாருங்கள்.

குமாரவேல், மன்னார்.
கே : பால்மா ஏழு ரூபாவால் அதிகரித்து விட்டதே. அடுத்து என்ன?
ப : பொதுமக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் பொருட்கள் இன்னும் இருக்கின்றனவே! பாண், எரி பொருள், மா.

மௌலானா, அக்கரைப்பற்று.
கே : பித்தனே இலஞ்ச ஒழிப்பையும் ஜெயலலிதா தனது அமைச்சுப் பொறுப்பில் வைத்துள்ளாரே?
ப : வகுப்பில் குழப்படி செய்வோர் மொனிட்டர் ஆவது போல.

கே.சுஜீவன், அக்கரைப்பற்று
கே : ஹஸான் திலகரத்ன மீண்டும் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றுவாரா?
ப : எதிர்வரும் தொடர்களுக்கான 22 பேர் குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார். இறுதிப் பட்டியலில் இடம்பெறுவாரா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

எஸ்.காரியப்பர், மருதானை.
கே : சொல்ஹெய்மின் அரசியல் காய் நகர்த்தல்கள் சரிவருமா?
ப : சரி வந்தால் அது சரித்திரமாகும். அல்லது தரித்திரம்தான்.

ஆர்.சுதன், ஜா—எல.
கே : 'தெஹெல்கா' இணையத்தள நிர்வாகிகள் தமது நிறுவனப் பங்குகளை வெளியாருக்கு விற்கப்போகிறார்களாமே?
ப : ஆனைக்கும் அடி சறுக்கும். இந்தியாவில் கிரிக்கெட் மற்றும் ஆயுத பேர ஊழல்களை அம்பல மாக்கிய நிறுவனம் இப்போது நிதி நெருக்கடியால் தவிக்கிறது.

ஏ.கே.கண்ணன், மருதானை.
கே : தேர்தலுக்கு முன் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவின் வேட்புமனுக்களை துணிந்து நிராகரித்த அதிகாரிகள், இன்று முதலமைச்சராக இருந்து கொண்டு ஆறு மாத கால எல்லைக் குள் அவர் தாக்கல் செய்யும் மனுவையும் நிராகரிப்பார்களா?
ப : நெற்றிக் கண்களைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று வாதாடிய நக்கீரன் பரம்பரை இன்றும் தமிழ்நாட்டில் இருந்தால் நிராகரிப்பு நிச்சயம்.

என்.அற்புதன், நல்லூர்.
கே : ஜனாதிபதி சந்திரிகா அடுத்த நாடாளுமன்றத்திலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமராகத் தெரிவுசெய்யப்படுவார் என்கிறார்களே. இதற்கு அரசியலமைப்பில் இடமிருக்கிறதா?
ப : இன்றைய அரசியல் அமைப்பில் அதற்கு இடமில்லை. அதனால் என்ன? புதிய அரசியலமைப்பை உருவாக்கப் போகிறார்களே!

ஆர்.குபேரன், லிங்கநகர்.
கே : தமிழ் இளைஞர்களின் கல்வி நிலையின் பின்னடைவுக்குக் காரணம் என்ன?
ப : அதுதான் போர் என்கிறார்களே!

ஆர்.அல்போன்ஸ், வெள்ளவத்தை.
கே : போலந்தில் கிளின்ரன் முட்டை வீச்சுக்கு உள்ளாகி இருக்கிறாரே?
ப : நாகரிகம் தெரியாதவர்கள் நாகரிக மற்றவருக்குக் கொடுத்தபதிலடி.



# வேலைவாய்ப்பு பணியகம் மோசடியில் ஈடுபடுகிறதாம்

## முகவர்கள் சம்மேளனம் கூறுகிறது.

வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கும் சில ஏஜென்சிகள் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகப் பல குற்றச்சாட்டுக்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும், ஊடகங்களும் முன்னர் தெரிவித்திருக்கின்றன. ஆனால் மிகப் பெரிய மோசடியை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமே செய்திருப்பதாக இப்பொழுது பதிலுக்கு குற்றஞ் சுமத்தப்படுகிறது.

பாகிஸ்தானைச் சேர்ந்த போலி வேலை வாய்ப்பு முகவர் ஒருவருடன் கூட்டுச் சேர்ந்து இம்மோசடியை வெளிநாட்டுவேலை வாய்ப்புப் பணியகம் செய்திருப்பதாகவும் கடந்த வருடம் 7 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு தருவதாகக் கூறி அவர்களிடம் இருந்து 70 இலட்சம் ரூபாவை மோசடியாக அறவிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இக் குற்றச்சாட்டுகளை அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் சம்மேளனத்தின் தலைவரான சுராஜ் டி. தன்தெனிய சுமத்தியுள்ளார். மேற்படி சம்மேளனம் சவூதி அரேபிய விமானசேவை, கல்ப் விமான சேவை, குவைத் விமான சேவை, ஏயார் லங்கா விமான சேவை ஆகியவற்றுடன் இணைந்து அண்மையில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தியது.

செய்தியாளர் மாநாட்டில் இக்குற்றச்சாட்டை சுமத்தி அவர் மேலும் கூறிய விவரங்கள் வருமாறு:

கடந்த 3 வருட காலத்துக்குள் வேலை வாய்ப்பு முகவர்களாகிய நாம் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துக்கு 50 கோடி. ரூபாவை வழங்கியுள்ளோம். இத்தொகையை வெளி நாடுகளுக்கு வேலை வாய்ப்புக்களுக்காகச் சென்றவர்களின் நலன்களுக்காகவே வழங்கியுள்ளோம்.. இவ்வளவு பணம் செலவழித்தும் வெளிநாடு செல்லும் பணிப் பெண்கள் தொழிலாளர்களின் நலன்கள் உரிய வகையில் பேணப்படாத காரணத்தினால், விமான சேவை நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அவர்களின் நலன்களைப் பேண திட்டங்களை வகுத்து வருகிறோம்.

வெளிநாடுகளில் வேலை செய்யும் பணிப் பெண்களுக்கு ஏற்படும் சில துன்பங்கள் துயரங்களுக்கு பணியகத்தால் வழங்கப்படும் பயிற்சிகளும் காரணங்களாக அமைகின்றன. பணிப்பெண்களுக்கு வழங்கப்படும் உள்ளூர்ப் பயிற்சிகளின் தரத்தையிட்டு நாம் திருப்திப்பட முடியாது. சரியான பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தால் உண்மையில் பிரச்சினைகள் குறைந்திருக்க வேண்டும். ஆனால் பிரச்சினைகள் தொடர்ந்து வளர்ந்து வருகின்றன. பயிற்சிகளின்போது, வேலை செய்யும் இல்லங்களில் இருந்து தூதரகங்களுக்குத் தப்பிச்செல்வது பற்றி போதிக்கப்படுகிறது.

ஆனால் தூதரகங்களுக்குத் தப்பி வரும் பெண்களின் நலன்களைக் கவனிக்கப் போதிய ஆட்கள் அங்கு இல்லை. சவூதி அரேபியாவில் 3 இலட்சம் பெண்களும், குவைத்தில் 2 இலட்சம் பெண்களும் பணிபுரிகின்றார்கள்.

வெளிநாடுகளில் வேலை செய்யும் பணிப் பெண்கள், தொழிலாளர்களுக்காக பல நலன் புரித் திட்டங்களை நாம் எதிர்வரும் அக்டோபர், நவம்பர் மாதம் தொடக்கம் அமுல்படுத்தவுள்ளோம். புதிய வகை காப்புறுதித் திட்டங்கள், பாதிக்கப் பட்வர்களுக்கு இலவச விமான டிக்கட், பயிற்சி வசதிகள் முதலான இன்னோரன்ன திட்டங்களை நடத்தவுள்ளோம்.

# களுகங்கையில் குதித்து உயிர்நீத்த நால்வர்

களுத்துறை ரயில் பாலத்தின் மீதிருந்து களுகங்கையில் குதித்த நால்வர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் இருவர் ஆண்கள். இருவர் பெண்கள்.

ஞாயிறு இரவு இச்சம்பவம் நடந்துள்ளது. திங்கள் பிற்பகல் வரை ஒரு பெண், ஒரு யுவதி, ஒரு ஆண் ஆகிய மூவரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

இந்நால்வரும் கங்கையில் குதித்த தகவல் கிடைத்த உடனேயே களுத்துறைப் பொலிஸார் அந்த இடத்துக்கு விரைந்துள் ளனர். பாலத்தின் மீது ஒரு பேக் இருப்பதை பொலிஸார் கண்டுள்ளனர். உள்ளே சுமார் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் 4 ஆயிரம் ரூபா பணமும் இருந்துள்ளது. சில துணிமணிகளும் இருந்தன.

இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஞாயிறு காலை முதல் களுத்துறை போதி மரம் அருகே இவர்கள் நடமாடியுள்ளனர். அவர்கள் அந்த இடத்திலேயே பகல் உணவையும் உட்கொண்டுள்ளனர். இந்தத் தகவல்கள் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளன.

பேக்கின் உள்ளே இருந்த ஒரு பர்ஸில் ஒரு கடிதத் துண்டும் இருந்துள்ளது. "எமக்கு நேர்ந்த அழிவில் நெருப்பில் இருந்து காப்பாற்றித் தாருங்கள்" என அதில் எழுதப் பட்டுள்ளது.

பொலிஸ் விசாரணைகள் தொடருகின்றன.

# புகலிடம் மறுக்கப்பட்டோர் திருப்பி அனுப்பப்படுகின்றனர்

பிரிட்டனில் அரசியல் புகலிடம் கோரி புகலிடம் மறுக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் விரைவில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட உள்ளனர். பிரிட்டிஷ் குடிவரவு – குடியகல்வுத்துறை இதை அறிவித்துள்ளதாக ஐரோப்பியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதற் கட்டமாக அடுத்த ஓரிரு வாரங்களில் 18 இலங்கைத் தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட உள்ளனர். இவர்களது பெயர் விவரங்கள் உத்தியோகபூர்வமாக விரைவில் அறிவிக் கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே மற்றும் ஜேர்மன் நாட்டிலுள்ள – அரசியல் புகலிடம் மறுக்கப்பட்ட – இலங்கைத் தமிழர்களும் திருப்பி அனுப்பப்பட உள்ளனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு வாரங்களில் நோர்வேயிலிருந்து ஐந்து தமிழர்களும் ஜேர்மனியிருந்து இரண்டு தமிழர்களும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்.

## சிஹல உறுமய புதிய எம்.பி.

சிஹல உறுமய கட்சியின் புதிய எம்.பியாக சம்பிக ரணவக்க பதவி ஏற்றுள்ளார். அவர் செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் பதவிப் பிரமாணம் செய்தார்.

சிஹல உறுமய கட்சியின் தலைவரான திலக் கருணாரத்ன இதுவரை காலம் எம்.பி பதவி வகித்து வந்தார். இரு வாரங்களுக்கு முன்னர் அவர் அப்பதவியிலிருந்து விலகினார். அந்த இடத்துக்கே சம்பிக ரணவக்க புதிய எம்.பியாக நியமிக்கப்பட்டார்.

# தனியார் பஸ் கட்டணங்கள் ஜூனில் மீண்டும் உயரலாம்

தனியார் பஸ் கட்டணங்கள் மீண்டும் அதிகரிக்கப்படலாம். இதற்கான தீர்மானத்தை அகில இலங்கை தனியார் பஸ் உரிமை யாளர்களின் சங்க சம்மேளனம் மேற்கொண்டுள்ளது.

டீசல் விலை அதிகரிப்பால் தனியார் பஸ் உரிமையாளருக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நஷ்டத்தைச் சமாளிக்க அரசு நிவாரணம் வழங்க வேண்டும். நிவாரணம் வழங்காவிடின் ஜூன் முதலாம் திகதி முதல் பஸ் கட்டணங்கள் 20 சதவீதத்தால் அதிகரிக்கப்படும்.

பஸ் உரிமையாளர்கள் சங்க சம்மேளனக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகக் குறைந்த கட்டணமான மூன்று ரூபாவும் அதிகரிக்கப்படலாம். ஆடம்பர பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்படும்.


சுடர் ஒளி நடத்திய

கேள்விக் கணைகளும் விமர்சன மாலையும்



கம்பன் விழா 2001

தங்கப் பதக்கப் பரிசுப் போட்டி முடிவு

அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில் எழுதி அதிக புள்ளிகளைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றெடுத்த அதிஷ்ட சாலி

கொழும்பு 13ஐச் சேர்ந்த செல்வி ஆர். அகல்யா.

ஏனைய பத்து ஆறுதல் பரிசுகளைப் பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விவரங்களும் பரிசளிப்பு தினம் குறித்த மேலதிக தகவல்களும் அடுத்த வார இதழில் வெளிவரும்.

# இராணுவம் கைவிட்ட பொருள்களை வீடுகளில் பயன்படுத்தும் வன்னி மக்கள்

## தோட்டங்களில் வெருளிகளுக்கு சீருடை!

இராணுவத்தினரின் பாவனைப் பொருட்கள் பல தற்போது சாதாரண மக்களின் அன்றாட பாவனைப் பொருட்களாக மாறிவிட்டன.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் மக்களே இவ்வாறாக இராணுவத்தினரின் பொருட்களை தமது அன்றாட பாவனைக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

'ஜயசிக்குறு' நடவடிக்கை மூலம் வன்னியில் பெருமளவு நிலப்பகுதி படையினரின் கட்டுப் பாட்டுக்குள் வந்திருந்தது.

பின்னர் அந்தப் பகுதிகளில் ஓயாத அலைகள் என்ற பெயரில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய போது போட்டது போட்ட படியே விட்டுவிட்டு படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

படையினர் விட்டுச் சென்ற பொருட்களில் ஆயுத தளவாடங்கள், இராணுவ வாகனங்கள் என்பவற்றை அந்தப் பகுதிகளிலிருந்து புலிகள் எடுத்துச் சென்று விட்டனர்.

படையினர் பின்வாங்கிச் சென்ற பகுதிகளில் தற்போது மக்கள் மீளக் குடியமர்த்தப்படுகின்றனர்.

மீளக்குடியமரும் மக்களும் ஏற்கனவே இராணுவம் முன்னேறி வந்தபோது தமது உடைமைகளைப் போட்டதுபோட்ட படியே விட்டு விட்டு ஓடியவர்கள் தான். ஆனால் திரும்பி வந்து பார்த்த போது தமது உடைமைகள் இல்லாது இராணுவ உடைமைகள் தான் அங்கிருப்பதைக் கண்டனர்.

எனவே இழந்த தமது உடைமைகளுக்கு பிரதியீடாக இராணுவப் பொருட்களை தமது அன்றாடப் பாவனைப் பொருட்களாக மாற்றிவிட்டனர்.

இதன்படி துப்பாக்கிகள் வைத்துவரும் மரப்பெட்டிகளும், எறிகணைகள் வைக்கப்பட்டுவரும் இரும்புப் பெட்டிகளும் பொதுமக்களின் சூட்கேஸ்களாக மாறிவிட்டன. உடைகளையும், முக்கிய ஆவணங்களையும் பத்திரமாகப் பேணும் பெட்டகங்களாகப் பலரும் இவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர். கராஜ்களிலும் சாவிகளைப் போட்டுவைக்க இந்தப் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கைக்குண்டுகள் வைத்து வரும் பிளாஸ்டிக் குவளைகள், உணவுப் பொருட்களைப் போட்டு வைக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

துப்பாக்கி ரவைப் பெட்டிகள் நிலத்திலே மாபிள் பதிப்பது போன்று பதித்து வைக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வீட்டினுள் நிலத்திலே இந்த ரவைப் பெட்டிகளைப் பதித்து வைத்து அதற்கு வர்ணப் பூச்சுக்கள் பூசி மாபிள் பொருத்தப்பட்ட தரை போன்று பலரது குடிசைகள் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

ஆட்டிலறி எறிகணைகளின் வெற்றுக் கோதுகள் பொருட்களைப் போட்டுவைக்க, பூச்சாடியாக என்று பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

படையினரால் விட்டுச் செல்லப்பட்டு ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் துப்பாக்கி ரவைகளைப் பொறுக்கிச் சேர்க்கும் சிலர் அவைகளை வேட்டைக்காரர்களுக்கு நல்ல விலைக்கு விற்றுவிடுகிறார்கள்.

வேட்டைக்காரர்கள் அந்தத் துப்பாக்கி ரவைகளை உடைத்து அவற்றிலிருக்கும் மருந்தை எடுத்து தங்களிடமிருக்கும் வேட்டைத் துப்பாக்கிகளுக்கான குண்டுகளைத் தயாரிக்கிறார்கள்.

50 கலிபர் போன்ற பெரிய துப்பாக்கிகளின் வெற்று ரவைக்கூடுகள் கத்திப்பிடியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இராணுவத்திற்கென பிரத்தியேகமாக தருவிக்கப்படும் முட்கம்பிகளை கம்பி வேலிக்குப் பலரும் பயன்படுத்துகின்றனர்.

இராணுவத்தினர் விட்டுவிட்டு வந்த சீருடைகள் தோட்டங்களில் வெருளிகளுக்கு மாட்டி விடப்பட்டுள்ளன. பலவீடுகளில் இராணுவத்தினர் விட்டு வந்த சமையல் பாத்திரங்கள் உடுப்புத் தோய்க்கவும், கிணற்றுத் தொட்டியாகவும், சமையலுக்கும் பயன்படுத்தப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

புதிதாக அமைக்கபட்டுள்ள வீடுகள் பலவற்றில் வெடித்த எறிகணைகளின் 'புறப்லர்கள்' மூலம் சாளரம் அமைக்கப்பட்டுள்ளது. ஆர்.பி.கே எனப்படும் எறிகணையின் 'புறப்லரை' வானொலிக்கு ஏரியல்களாக பயன்படுத்துகின்றனர்.

இன்னும் படையினரின் மழைக் கவசங்களை எடுத்துச் சென்று தாழும் மழைக்குப் போட்டுக் கொண்டு பலர் நடமாடுகின்றனர்.

இதுதவிர படையினர் விட்டுச்சென்ற துப்பாக்கிகள், கிரனேட் என்பவற்றில் புலிகளின் கண்ணில் படாதவற்றை எடுத்துச் சென்று பலர் வீட்டிலேயே வைத்திருந்தனர். சிலர் அவைகளைக் கொண்டு சொந்தப் பகைகளைத் தீர்த்துக் கொள்ளவும், களவு போன்ற முயற்சிகளுக்கும் பயன்படுத்த முற்படுகின்றனர்.

ஆயினும் புலிகள் அவர்கள் விடயத்தில் கடும் நடவடிக்கை எடுத்ததை அடுத்து அவை அனைத்தும் புலிகளின் காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.

மேலும் படையினர் பயன்படுத்திய பச்சை நிறத்திலான சாக்குகள் தற்போது மக்களின் நிவாரணப் பொருட்களை சுமந்துசெல்லவும், விளை பொருட்களை பாதுகாத்து வைக்கவும் பயன்படுகின்றன.

இவ்வாறாக படையினர் விட்டு வந்த பொருட்கள் பொமக்களின் அன்றாட பாவனைப் பொருட்களாக மாறிவிட்டன. இராணுவம் விலகிச் சென்ற பகுதிகளுக்குச் சென்று இவ்வாறான பொருட்களை எடுத்துவந்து விற்று— பணம் சம்பாதிக்கும் கூட்டமொன்று வன்னியில் உருவாகி இருக்கிறது.

இவர்களால் எடுத்துவரப்படும் இரும்புப் பெட்டிகள், பலகைப் பொருட்கள் என்பன 50 ரூபா முதல் 200 ரூபா வரை விற்கப்படுகின்றன. சாக்குகள் 20 ரூபாவிற்கு வன்னிப் பகுதியில் உள்ள கடைகளில் தாராளமாக விற்கப்படுகின்றன. தவிர சிறிய ரவைகள் 5 ரூபாவுக்கும் 10 ரூபாவுக்கும் விலை போகின்றன.

வன்னியில் தற்போதுள்ள கஷ்டமான நிலைப்பாட்டில் வேறு தொழில்கள் இல்லாத நிலையில் பலரும் இராணுவம் விட்டுச் சென்ற பகுதிகளுக்கு உயிரைப்பணயம் வைத்துச் சென்று இராணுவம் விட்டுச் சென்ற பொருட்களை எடுத்து வந்து விற்பதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் பலர் இராணுவத்தினர் விட்டுச் சென்ற பொறி வெடிகள், மிதிவெடிகள், கண்ணிவெடிகள் ஆகியவற்றில் சிக்கி கால்களை இழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

சிலர் சாமர்த்தியமாக குப்பை வாரிகளை எடுத்துச் சென்று நிலத்தை சுரண்டிச் சுரண்டி முன்னேறிச் சென்று இராணுவத்தினர் விட்டுச் சென்ற பொருட்களை எடுத்து வந்து விடுகின்றனர்.

ஆயினும் புலிகள் இவ்வாறான வியாபார முயற்சிகளைத் தடைசெய்தே வருகின்றனர். மக்கள் போக முடியாதென்று சில பகுதிகள் வரையறுக்கப்பட்டு அவற்றின் எல்லைப் புறங்களில் காவல்துறையினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை மீறிப் படையினர் விட்டுச் சென்ற பகுதிகளுக்கு மக்கள் செல்ல முடியாதுதான். ஆயினும் தமது வீடுகளைப் பார்வையிடப் போவதாகச் சொல்லிச் செல்லும் மக்களே இவ்வாறான வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

புலிகளும் இது விடயத்தில் இறுக்கமாக இருக்கின்றனர்.

உதாரணமாக, படையினர் விலகிச் சென்ற போது பெருமளவு உணவுப் பொருட்களையும் விட்டுத்தான் சென்றிருந்தனர். பரிதாபப்பட்ட புலிகள் அவைகளை மக்கள் எடுத்துச்செல்ல அனுமதியும் வழங்கியிருந்தனர். ஆனால் அவ் வாறு எடுத்துச்செல்லப்பட்ட அரிசி, மா போன் றன கடைகளிலே விற்கப்பட்டு — பலராலும் வீண் விரயமாக்கப்பட்டது புலிகளால் கண்டுபிடிக் கப்பட்டது.

குடும்பங்கள் பட்டினியால் வாட குடும்பத் தலை வர்கள் இந்தப் பணத்தைக் கொண்டு வீண் செலவு கள் செய்தது கண்டுபிடிக்கப் பட்டது. இதை அடுத்து தற்போது வியாபார நோக்கமாக இராணுவத்தினரின் பொருட்களை எடுத்துச் செல்லக்கூடாதென்று இறுக்கமான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் ஆங்காங்கே அவ்வப்போது இன்னமும் தவறுகள் இடம்பெறத்தான் செய்கின்றன.

— வன்னி மைந்தன்

# வவுனியா செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவை நிறுத்தம் என்று யார் சொன்னது?

## தலைவர் மார்க்கண்டேயர் 'நெருப்பெடுக்கிறார்'!

வவுனியா செஞ்சிலுவைச் சங்க இடைக்கால நிர்வாக சபை தனது பணிகளில் இருந்து ஒதுங்கி வாளாவிருக்கவில்லை.

வன்னிக்கான தபால் சேவை, நோயாளர் போக்குவரத்து, அரச வங்கிகளுக்கு திரவப் பணம் எடுத்துச் செல்லல், பிரேதங்களை அனுப்புதல், முதலுதவிச் சேவைகள், நிவாரணப் பொருட்கள் வழங்கல்—

இலவச மூக்குக் கண்ணாடி விநியோகம், இலவச செயற்கைக்கால் பொருத்தல் சேவை, கண் சத்திரசிகிச்சைக்கான கற்றாக்ட் வில்லைகள், மருந்துப் பொருட்கள் விநியோகம் — மற்றும் காணாமல் போனோரைத் தேடுதல், அனர்த்த முகாமைத்துவம் போன்ற செஞ்சிலுவைச் சங்க கோட்பாடுகளுக்கு உட்பட்ட பணிகளை அது ஆற்றி வருகிறது.

> "வவுனியா செஞ்சிலுவைச் சங்கம் சேவையை நிறுத்திவிட்டதா?" "வவுனியா செஞ்சிலுவைச் சங்கச் சீரழிவுகள் பற்றி மேலும் தகவல்கள்" என்ற தலைப்புகளில் சுடர் ஒளி 4.3.2001 மற்றும் 11.3.2001 இதழ்களில் கட்டுரைகள் வெளியாகி இருந்தன. அவற்றை மறுத்து விளக்கம் அளிக்கிறார் மேற்படி சங்கத் தலைவர் செ.மார்க்கண்டேயர். படித்துப் பாருங்கள்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் வவுனியா வடக்கு பிரிவுக் கிளையை ஆரம்பித்து இடம்பெயர்வு மருத்துவ நிலையங் களையும், ஆரம்ப சுகாதார நிலையங் களையும் அது நடத்தி வருகின்றது.

வதிவிட அனுமதி பெற்றுக் கொடுத்தல், வெளிநாடுகளில் அரசியல் புகலிடம் கோருபவர்களுக்கு பொய்யான ஆவணங்களை வழங்கல் ஆகி யன செஞ்சிலுவைச் சங்கத் துக்குரிய பணிகள் அல்ல என்று தலைமைக் காரியாலயத்தால் எமக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

வெளிநாடுகளில் புகலிடம் கோருவோருக்கு வழங்கப்பட்ட பொய்யான ஆவணங்களின் உண்மைத் தன்மையை நிரூபிக்குமாறு அந்நாடுகளின் தூதுவராலயங்கள் கடிதங்களை எமக்கும், தலைமை யகத்திற்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் அனுப்புகின்றன. அறிவுறுத்தல் காரணமாக அப்பணிகளை நாம் மேற் கொள்வதில்லை.

செஞ்சிலுவைச் சங்க வாகனங்கள் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் வன்னிக்கு பிரேதங்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதி சுடர் ஒளி செய்தி வெளியான பின்னர் 27/03/2001 அன்றுதான் பாதுகாப்புப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மாவட்டக்கிளையின் செயற்பாடுகளுக்கு வேண்டிய நிதி வாகன வாடகைகள் மூலமே பெறப்படுகிறது.

வவுனியாக் கிளையினூடாக செயற்படும் கிளிநொச்சி, முல்லைத்தீவு வாகன வாடகைகளுக்குக் கூட பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டே நிதி பெறப்படுகின்றது.

வறுமை நிலையிலுள்ளவர்களுக்கு மட்டுமே இலவச சேவை நடத்தப்படுகின்றது. பிரேதங்களை எடுத்துச் செல்லும் போதும் இதே நடைமுறையே பின்பற்றப்படுகின்றது.

3 வருடங்களுக்கு முன்னர் தேசிய தொழில் பயிற்றுநர் அதிகார சபை(NAITA) பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு தேவையான இடத்தைப் பெறமுடியாத நிலையில் வவுனியாச் சங்கம் அதற்குரிய இடத்தை வழங்கி பயிற்சி நெறியைத் தொடக்கி வைத்தது.

வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச செயலகம் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்திற்கு அண்மையில் மாற்றப்பட்டதன் காரணமாக இந்நிலையம் வெற்றிடமாகியுள்ள நிலையத்தில் பயிற்சி நெறியை வழமை போல் நடத்தி வருகின்றது.


படையினரால் கொல்லப்பட்ட ஓர் இளைஞன் வசம் செஞ்சிலுவைச் சங்க தொண்டருக்கான அடையாள அட்டை இருந்ததன் காரணமாக தேசிய பத்திரிகைகளில் பயங்கரவாதிகளுக்கு இலங் கைச் செஞ்சிலுவைச் சங்க வவுனியாக் கிளை தொண்டர்களுக்கான அடையாள அட்டை வழங்கி உதவுவதாக பாரியளவு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

அந்த வேளையில் நாம் தலைமை யகத்தால் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டோம்.

அவ்வேளையில் தொண்டர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் உரிமை ஒரு கிளையினருக்கும் வழங்கப்பட வில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

முன்னைய நிருவாகத்தால் வழங்கப்பட்ட சகல அடையாள அட்டைகளையும் மீளப் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டோம்.

இதற்கமையவே இயலுமான அளவு அடையாள அட்டைகள் மீளப் பெறப்பட்டன.


செ.மார்க்கண்டேயர்

வவுனியா நகரை விட்டு வெளியேறுமாறு 10.11.99 அன்று புலிகளால் விடுக்கப்பட்ட அறிவித்தலின்போது செஞ்சிலுவைச் சங்க உயர் பதவி வகிப்போர் ஆளுக்கொரு வாகனம் எடுத்துக் கொண்டு கொழும்புக்கும் நாவலப்பிட்டிக்கும் சென்றதாக அபத்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

10/11/99 க்கு முன்பாகவே சிகிச்சைக்காக நாவலப்பிட்டிக்குச் சென்ற தலைவர் பிரத்தியேகமாக அமர்த்தப்பட்ட வாடகை வாகனத்திலேயே சென்றிருந்தார்.

9/11/99 அன்று செயலாளர் இரவு தபால் ரயிலிலேயே மகளுக்குத் துணையாக கொழும்பு சென்றிருந்தார்.

புதிய நிருவாகத்தால் தனிப்பட்ட தேவைகளுக்கு சங்க வாகனங்கள் ஒருபோதும் பயன்படுத்தப்படுவதில்லை.

99 இடம்பெயர்வின் போது வவுனியா ஆதார வைத்தியசாலை நோயாளர்கள் கவனிப்பாரற்று கைவிடப்பட்டிருந்த நிலையில் எமது தொண்டர்கள் எமது வாகனங்கள் மூலம் அவர்களை செட்டிக்குளம் வைத்தியசாலைக்கு கூட்டிச்சென்று பாதுகாத்தனர்.

இது தொடர்பாக கந்தளாமவிருந்தினர் விடுதியில் 13.11.2000 அன்று நடைபெற்ற தெற்காசியநாடுகளின் செஞ்சிலுவைச்சங்க செயலாளர்களின் மாநாட்டில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமைப் பிரதிநிதி டாக்டர் இயங்கோ பாராட்டி இருந்தார்.

அதுமட்டுமன்றி 1999 இல் தம்புள்ள தொழிநுட்பக் கல்லூரியில் நடைபெற்ற இலங்கையின் தேசிய செஞ்சிலுவைச் சங்க பொதுக்கூட்டத்தில் இலங்கையின் 25 சங்கக் கிளைகளில் இடைக் கால நிருவாக சபை யின் கீழ் இயங்கும் வவுனியா செஞ்சிலுவைச்சங்கமே திறம் பட இயங்குவதாகவும் மனித நேயப்பணிகளை சிறப்புற மேற்கொள்வதாகவும் டாக்டர் இயங்கோ தெரிவித்திருந்தார்.

இடைக்கால நிருவாக சபையின் யாப்பின்படி மூன்று மாதங்கள் மட்டுமே அது இயங்கலாம் எனக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அப்படியான வரையறை யாப்பின் எந்த இடத்திலும் காணப்படவில்லை. தலைநகர் கொழும்பிலுள்ள கிளை நீண்ட காலமாக இடைக்கால நிருவாகத்தின் கீழ் இயங்குவது குறிப்பிடத்தக்கதாகும். தேர்தலை வைக்கும் பொறுப்பு தலைமையகத் துக்கே உரியது.

முன்னைய வவுனியாக் கிளை நிருவாகத்தினர் நிதியைக் கையாண்ட விதம் கணக்காய்வறிக்கை மூலம் பாரதூரமாக விமர்சிக்கப்பட்டுள்ளதாலும், அங்கத்துவப் பணம் முன்னர் மோசடி செய்யப்பட்டுள்ளதாலும் தலைமை அலுவலகத்தினர் இடைக்கால நிர்வாக சபைக் காலத்தில் சேமிக்கப்பட்ட சுமார் 5 இலட்சம் ரூபாவையும் சில வாகனங் களையும் பொறுப்பேற்க முன்வந்துள்ளனர்.

இந்த விடயத்தில் தலைவரோ, அல்லது செயலாளரோ எவ்விதத்திலும் சம்பந்தப்படவில்லை.

எதிர்காலத்தில் பதவி ஏற்கும் புதிய நிர்வாகத்திடம் சொத்துக்கள் இல்லாத வெறும் செஞ்சிலு வைச் சங்கக் கிளையை கையளிப்பதற்கே இடைக்கால நிருவாக சபை முயல்வதாக குற்றஞ்சாட்டும் முன்னாள் செயலாளர் சிவநாதன் கிஷோர் எம்மிடம் விட்டுச் சென்றது, 1 இலட்சம் ரூபா வரை யிலான கடன்களையும் திருத்தப்படாது பழுதடைந்த நிலையிலுள்ள 3 வாகனங்களையுமே ஆகும்.

இந்நிலையிலிருந்த வவுனியாக் கிளையை இடைக்கால நிருவாக சபை பொறுப்பேற்று அபிவிருத்தி செய்துள்ள காரணத்தினாலேயே இதனைத் தொடர்ந்தும் செயற்படுத்த தலைமையகம் முயற்சிக்கின்றது.

தேர்தல் மூலம் புதிய நிருவாகத்தை தெரிவு செய்யுமாறு நாம் கொடுத்த அழுத்தங்கள் பயனளிக்காத நிலையில் நிருவாகத் தீர்மானத்துக்கிணங்க வவுனியா செஞ்சிலுவைச் சங்கத்தைப் பாரமெடுக்குமாறு 02.04.2001 அன்று நாம் கடிதம் அனுப்பி இருந்தோம்.

இதனைத்தொடர்ந்தே 27.05.2001 அன்று தேர்தல் மூலம் புதிய நிருவாகத்தைத் தெரிவு செய்ய சங்கத் தலைமையகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

# சங்கம் வைத்து தமிழ் வளர்த்த இனம் வயிறு வளர்க்க சங்கம் நிறுவலாமா?

''தமிழகத்தில் சங்கம் வைத்து தமிழ் வளர்த்ததாக சொல்லுவினம், இப்ப நாங்கள் தமிழை வளர்க்கிறமோ இல்லையோ, சங்கம் வளர்க்கிறதில் எங்களை மிஞ்ச ஆளில்லை''.

தேரடியில் வந்து அமர்ந்ததும் கூறினார் விநாசியர்.

''ஊரிலை சங்கம் வைச்சு கூட்டம் சேர்த்தால்தான் காரியம் நடக்குது. அதனாலை தங்களுக்கு நியாயமாகச் சேரவேண்டிய உரிமைகளைப் பெறுவதற்குக் கூட, பாவம் சங்கம் அமைச்சு வெயிலிலை வாடி, மழையிலை நனைஞ்சு பார்க்க வேண்டியவையைப் பார்த்து தங்களுக்கு சேரவேண்டியதை, ஏதோ பிச்சை வாங்கிறதைப் போல வாங்கிச்சினம். எப்படியோ அவர்களின் பிரச்சினை தீருது என்று சந்தோஷப்படுங்கோ!''

ஊர் நிலவரத்தை விளக்கினான் டானியல்.

''அந்தச் சங்கங்களைக் குறைசொல்லவில்லை தம்பி. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும். அதுமாதிரி அந்தச் சங்கங்களில் உள்ளவையின் கஷ்டம் அவரவர்க்குத்தான் தெரியும்''.

''நான் சொல்வது சமீபத்தில் வெளிவந்த பத்திரிகை விளம்பரத்தைப் பற்றி'' என்றார் விநாசியர்.

''அதென்ன விளம்பரம்?'' கேட்டான் லோகன்.

''மினி சினிமா உரிமையாளர் சங்கம் அவசரக் கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்து யாழ்ப்பாணப் பத்திரிகையில் விளம்பரம் வெளிவந்தது. அதில் எல்லா மினி சினிமா உரிமையாளர்களையும் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படியும், சந்தாப்பணம் 250 ரூபா செலுத்தத் தயாராக வரும்படியும் தெரிவிக்கப்பட்டிருந்தது'' என்றார் விநாசியர்.

''அதில் என்ன தவறு? ஒரு தொழிலில் இருப்பவர்கள் தங்கள் கஷ்ட நஷ்டங்களைத் தீர்க்க சங்கம் அமைக்கிறதும், அதைக்கொண்டு நடத்த சந்தா வாங்குவதும் சாதாரண விஷயம்தானே அண்ணை'' என்று கேட்டான் லோகன்.

''அது சாதாரணம்தான் லோகன். ஆனால் கூட்டத்தில் கலந்துகொள்ளத் தவறுவோர் மினி சினிமா நடத்தும் உரிமையை இழக்க நேரிடும் என்று அந்த விளம்பரத்தில் எச்சரிக்கைத் தொனியில் குறிப்பிடப்பட்டிருந்தது. மினி சினிமா நடத்த அனுமதி வழங்குவது அந்தந்தப் பகுதிகளின் உள்ளூராட்சி அமைப்புகள் தான். அப்படியிருக்க சங்கக் கூட்டத்தில் கலந்துகொள்ளத் தவறிய காரணத்துக்காக மினி சினிமா நடத்தும் அனுமதியை ரத்துச் செய்யும் உரிமையை மினி சினிமா உரிமையாளர்கள் சங்கத்துக்கு யார் கொடுத்தது? இப்படி சங்கங்கள் நிர்வாகத்தைப் பார்த்தால் பிறகு அரசாங்கம் எதற்கு? உள்ளூராட்சி அமைப்புகள் எதற்கு?''

தனது சந்தேகத்தைக் கேட்டு முடித்தார் விநாசியர்.

''அதிகாரத்தில் இருக்கிறவை தங்களது முன்னேற்றத்தை மட்டும் பார்த்தால் இப்படித்தான் தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரனாகி விடுவான்'' என்றார் அதுவரை அமைதியாக இருந்த மாஸ்டர்.

''மாஸ்டர் யாரையோ மனதில் வைத்துக் கொண்டுதான் கதைக்கிறார்'' கூறினான் டானியல்.

''குடாநாட்டிலை நிர்வாகத்தைக் கவனிக்கிறவர், நல்லா 'வீணை' வாசிக்கிறாராம். ஏனென்றால் அமைச்சுச் செயலாளர் பதவி மேல் அவருக்கு ஒரு கண்ணாம். ஒத்தாசை செய்தால் 'தேவ' கடாட்சம் கிடைக்கும் என்று நம்புகிறாராம்'' கேள்விப்பட்டதைச் சொன்னார் மாஸ்டர்.

''இதுக்கு ஒரு பின்னணி இருக்கு'' என்று சொல்லுகினம்'' என்றபடி மணலில் சாய்ந்த லோகன் பின்னணியை விளக்கத் தொடங்கினான்.....

''அவர் படித்த பாடசாலைக் கட்டட நிதிக்கு கணிசமான அளவு அரச உதவிப்பணம் ஒதுக்கப்பட்டதாம். இராச தோர ணையான பாடசாலை அதிபர் ஒருவர் அதெப்பிடி ஒரே பள்ளிக்கூடத்துக்கு இவ்வளவு தொகை ஒதுக்கலாம் என்று கேள்வி எழுப்பி அந்தப் பணத்தை தனது பாடசாலை உட்பட வேறு சில பாடசாலைகளுக்கும் பகிர்ந்தளிக்கச் செய்து போட்டாராம்.''

''இப்ப பெரிய பதவியைப் பிடிச்சு அதிகாரம் பெற்று, அந்த அதிபருக்கு 'பதில்' தர வேணும் என்பதுதான் அவரின் ஆசையாம்'' சொல்லி முடித்தான் லோகன்.

''யார் குத்தினாலும் அரிசியானால் சரி, இவை இரண்டு பேருக்கும் இடையில் நடக்கிற போட்டியாலை பள்ளிக் கூடங்கள் முன்னேறினால் சந்தோஷம்'' என்றபடி அரட்டையில் கலந்துகொண்டாள் சின்னாச்சி.

''யாழ்ப்பாணத்திலை வேலைக்காக காசு கொடுத்து ஏமாந்தோம் என்ற பெயரில் சங்கம் என்று ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படும் போல இருக்கு'' வேதனைச் சிரிப்புடன் சொன்னான் டானியல்.

''ஏமாத்தினது யார்? கேட்டார் விநாசியர்''.



## தேரடி அரட்டை

அதற்கு உடனே பதில் சொல்லாமல், கதையை ஆரம்பித்தான் டானியல்...

''தேர்தல் சமயத்தில், வேலை வாய்ப்புகள் பெற விரும்பும் இளைஞர், யுவதிகள் தமது சுதந்திரமான அலுவலகத்தில் வந்து பெயர்களைப் பதியும்படி நீலக்காவு சட்டைக்காரர் கேட்டவை.

''அதிகாரத்திலை இருக்கிறபடியால் வேலை எடுத்துத் தருவினம் என்று நம்பி எங்கடை பெடிபெட்டையள் வேலைக்காக பெயர் பதிந்து வைச்சினம்.

''தேர்தலில் யாழ்ப்பாணத்திலை படுதோல்வியாகிவிட இவை இப்ப வேற வித்தை காட்டியிருக்கினம்.

''ஆஸ்பத்திரி வேலைக்கு ஐம்பதினாயிரம், கச்சேரி வேலைக்கு 75 ஆயிரம், வங்கி வேலைக்கு லட்சத்துக்கு மேல் என்று விலைப்பட்டியல் வைத்து பேரம் பேசினமாம். இதில் பகுதிப் பொறுப்பாளர்கள் முதல் தலைமை வரை சம்பந்தப்பட்டிருக்கினம். வேலை வாங்கித் தாறம் என்று சொல்லி கனபோ[illegible] வாங்கப்பட்டிருக்காம். இப்ப காசைக் கொடுத்தவை திரும்பக் காசை வாங்க கட்சி அலுவலகத்துக்கு நடையாய் நடக்கினமாம்.

ஆனால் ஒரு தலைவர் கொழும்புக்குக் காவடி எடுத்துக் கொண்டு போட்டாராம். கட்சி முக்கிய உறுப்பினர்களும் இந்தப் பிரச்சினை பெரிசாகிவிட நைஸாக கழன்று கொண்டார்களாம். இப்ப காசைக் கொடுத்து ஏமாந்தவை கட்சி அலுவலகத் துக்குப் போனால் நீலக்கலர் சுவரிலை சிரிக்கிற அம்மாவின் படத்தைப் பார்த்துப் போட்டு திரும்ப வேண்டியது தானாம்'' கூறி முடித்தான் டானியல்.

''அதுதானே பார்த்தனான், அந்தக் கட்சி யாழ்ப்பாணத்திலை நடத்தின மேதின கூட்டத்திலை மொத்தமாக இருபது இருபத்தைஞ்சு பேர்தான் வந்திருந்தவை. அதிலும் முக்கிய உறுப்பினர்கள் பலர் அந்திரட்டி ஆட்டத் திவசம் என்று கூறி கூட்டத்திலை கலந்து கொள்ளவில்லை'' என்றான் டானியல்.

''யாழ்ப்பாணத்திலை தலைமையின் துணைக்கு முளைத்தவை. ஆனால் அதன் திறப்பு விழா பிற்போடப்பட்டுக் கொண்டே போகுது திரையைத் திறக்கப் பெரிய கைகளை நாடும் போது, அவையிடம் காசு கொடுத்து ஏமாந்த சனம் முறையிட்டால் தாங்கள் மாட்டுப்படுவம் என்றுதானாக்கும் நடிகரின் சிலையைப் போர்த்து மூடிக் கட்டியிருக்கினம்'' சொன்னார் விநாசியர்.

''கெதியிலை நாடாளுமன்றத்திலை இந்த விஷயம் களை கட்டப்படலாமாம்.''

மீண்டும் பேசினான் டானியல்.

''நல்ல வேளை, இரண்டு மூன்று கட்சிகளிலை இருந்து எம்.பி.மாரை அனுப்பினதாலை ஒருத்தரைப் பற்றி மற்றவர் அம்பலப்படுத்துவினம் என்ற பயத்திலையாவது பிழை விட யோசிக்கினம்.

''அதுக்குப் பதிலா ஒரே கட்சியிலிருந்து எல்லா எம்.பிமாரும் போயிருந்தால், தோற்றவையும் யாழ்ப்பாணத்தை எட்டிப் பார்க்க மாட்டினம், வென்ற ஆட்களும் தட்டிக் கேட்க ஆளில்லாமல் தங்கடை ஆட்டத்தைத் தொடங்கிப்போடுவினம்.'' என்றபடியே காலை மாற்றிப் போட்டுக் கொண்டார்.

''ஆனால் மாஸ்டர், கூட எம்.பிமாரை ஒரு கட்சியில் இருந்து அனுப்பினால், கூட உதவிகளைப் பெற்றுத் தரலாம் என்று எல்லோரும் சொல்லுகினம்'' கேட்டார் விநாசியர்.

''எம்.பிமாரின் எண்ணிக்கையை வைத்துத்தான் மேலையிருந்து உதவி கிடைக்கும் என்றால், கட்சித் தலைமைக்கு அங்கை மதிப்பில்லையாமோ?'' கேட்டாள் சின்னாச்சி. அதற்கு பதில் கூறாமல் தொடர்ந்தார் மாஸ்டர், ''இரண்டு மூன்று கட்சிகளில் எம்.பிமாரைத் தெரிவு செய்தால், மற்றக் கட்சியை விட தாங்கள் கூட உதவி செய்த வாக்காளர்களை கவர வேணும் என்றதுக்காகவாவது ஒவ்வொருத்தரும் சனத்துக்கு நல்லது செய்வினம், குறைந்தது நல்லது செய்யிற மாதிரி நடிக்கவாவது செய்வினம்.

''ஆனபடியால் அரசாங்கத்திடம் உதவி பெறக் கூடியவை 4 பேரென்றால் மிச்ச ஆட்கள் மற்ற கட்சிகளாக இருக்க வேணும். அப்பதான் சனத்துக்கு அதிக பிரயோசனம் கிடைக்கும்''.

''அப்ப மக்களுக்கு அதிக லாபம், பல கட்சிகளிலிருந்தும் எம்.பிமாரைத் தெரிவு செய்வது தான் என்று சொல்லுறியள். ஆனால் வாக்களிக்கும் போது யாருக்கு யார் போடுவது என்று எப்படி தீர்மானிக்கிறது?'' கேட்டான் லோகன்.

''அது சுலபம் தம்பி, ஒரு ஆட்சிக்கு ஒரு பகுதியிலை நிறைய வோட்டுகள் கிடைக்கும் என்று தெரிந்தால், மற்றப் பகுதியிலை இருக்கிறவை அந்தக் கட்சிக்கு வாக்களிக்காம விடலாம். அப்ப ஒரு பகுதியிலை பெற்ற அதிக வாக்குகளோடை அவை எம்.பியாவினம். மற்றப் பகுதி வாக்குகளாலை மற்றக் கட்சிக்காரர்கள் எம்.பியாவினம், கடைசியிலை மக்களுக்கு தான் கூடுதல் நன்மை கிடைக்கும்'' என்று கூறிவிட்டு எழுந்தார் மாஸ்டர்.

தேரடி கலைந்தது.

—ஏகலைவன்

## வாசகர் இதயம் பேசுகிறது

தமிழகத்தில் மீண்டும் எம்.ஜி.ஆர் ஆட்சி ஏற்பட்டதை அட்டையில் புரட்சித் தலைவர், புரட்சித் தலைவி ஆகியோரின் படங்களுடன் அறிவித்து அசத்தி விட்டீர்களே.

— எம். மாரிமுத்து, கம்பளை.

மும்முனைகளில் அரசு சிக்கலில் மாட்டித் தவிக்கும் உண்மைகளை காண்டீபம் தந்த விதம் சுவையாக இருந்தது.

—ஏ. சுகவனம், மாத்தளை.

''தொழிலாளர்களைச் சுரண்டும் மாவட்ட கூட்டுறவுக் கடைகள்'' பற்றி மலையகக் கண்ணோட்டத்தில் விலாசியிருந்தீர்கள், நன்றி

— ஆர். பழனிச்சாமி, அட்டன்.

பிறந்த மண்ணில் சாகவந்த ரயில் கொள்ளைக்காரன் பற்றி படித்தபோது அவன் மீது அனுதாபம்தான் வந்தது.

— எம்.எம். கலீல், கண்டி.

மாவனல்லையில் நிகழ்ந்த பயங்கரம் மகாகொடுமை. இப்படி ஒரு கொடுமை இனிமேல் வேண்டாமே.

— த. சிவராசா, கண்டி.

பொது மக்களின் அசௌகரியங்களைத் தீர்த்து வைப்பதற்கு ''சுடர் ஒளி'' நேரடிக் கவனம் செலுத்துவதற்கு நன்றி

— க. பிலேந்திரன், பொற்கேணி.

தமிழக அரசியல் களம் பற்றி ''சுடர் ஒளி''யில் தரப்படும் விவரங்கள் நிறைவைத் தருகின்றன.

— வா. ஆனந்தராஜ், புசல்லாவ.

''சுடர் ஒளி'' 06.05.2001 இதழில் வெளியாகியிருந்த ''வாழ்த்துக்கள்'' சிறுகதையை ந.தருமலிங்கம் சுவை படத் தந்திருக்கிறார்.

— ஏ.ஏ. அப்துல் ஸலாம், கிண்ணியா.

ஆந்தையாரின் ''க்ரைம் டயறி'' சூடு பிடித்திருக்கிறது.

— டொ. டெனிபர், ஜா—எல.

''தவறான கணக்கினால் குறி தவறிய தாக்குதல்'' (06.05.2001) கட்டுரை சுவைபட எழுதப்பட்டிருந்தது.

— ரா. சேகர், கம்பளை.

''சுடர் ஒளி''யில் ''பெண்கள்'' பக்கம் கண்கவரும் கலரில் வந்து அசத்துகிறது. ''தேரடி அரட்டை'' யும் கலகலப்புத்தான்.

— பி. பிறேம், வவுனியா.

துணிச்சல் நிறைந்த முறையில் செய்திகளையும், புகைப்படங்களையும் வெளியிடும் உங்களைப் பாராட்டுகிறோம்.

— ம. ஏ. ரபீக்கா, கல்முனை.

சர்ச்சையைக் கிளப்பிய பல்குழல் ரொக்கெட் லோஞ்சர் விவகாரம் பற்றி சுவையான தகவல்களைப் படித்து அதிசயித்தோம்.

— செ. மரியதாஸ், வத்தளை.

அரசின் சமாதான வேஷத்தை முழு உலகும் கண்டு கோபம் அடைந்தது பற்றி ''காண்டீபம்'' தந்த விளக்கம் பிரமாதம்!

—க. குமாரதாசன், பதுளை.

பஞ்சாங்கக் குளறுபடிகள் காரணமாக கன்னியர் வாழ்வு குலையும் கொடுமை பற்றி ''தேரடி அரட்டை''யில் சுவையாக அலசியிருந்தார்கள்.

— செ. குணராசா, மட்டக்குளி.

''அக்கினிச் சுவாலைக்கு நிகழ்ந்த கதி'' பற்றி குமரன் அருமையாக விளக்கியிருந்தார்.

—சி. பேரின்பராசா, கந்தளாய்—02.

சுடர் ஒளி சிறுவர் வாசகர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி!

மாஸ்டர் சிவலிங்கத்தின்

மர்மப் பெண்



சிறுவர் சித்திரத் தொடர்கதை

விரைவில் எதிர்பாருங்கள்

படிக்கத் தவறாதீர்கள்!

# காதலர் களியாட்ட பூமியாக மாறிவரும் திருமலை கடற்கரை

## தமிழர் பண்பாட்டை புதைக்கும் மாணவ மணிகள்


காலிமுகத் திடலாக மாறும் திருமலைக் கடற்கரை

திருகோணமலைக் கடற்கரை எழிலான தோற்றம் கொண்டது. காலாற நடந்து செல்வதற்கு ஏற்ற விதத்தில் பரந்த அளவில் மணற்பாங்கான நிலப்பரப்பினைக் கொண்டது. சுற்றுப்புறச் சூழலை எழிலாகப் பேணும் அந்தத் தங்கக் கடற்கரை காதலர்களின் களியாட்ட பூமியாக மாறி வருகிறது. உயர்கல்வி மாணவ மணிகள் தமிழ்ப்பண்பாட்டை அங்கு குழி தோண்டிப் புதைக்கும் சம்பவங்கள் ஊர்


குழந்தைகள் கூடிக் களிப்பதும் இங்குதான்

மக்கள் மத்தியில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

கொழும்பில் காலி முகத்திடலில் மாலை வேளைகளில் குழந்தைகளுடன் கூடிக் குதூகலம் அடைவது குடும்ப அங்கத்தவர்களின் இனிய பொழுது போக்கு ஆகும். சில வேளைகளில் காதலர்களின் பூமியாகவும் அது மாறிவிடுவதும் உண்டு. ஆனால் காலி முகத் திடலாக திருகோணமலைக் கடற்கரை இப்போது மாறிவருகின்றது. குழந்தைகள் கூடிக் களிக்கும் இடமாக மாறினால் மகிழ்ச்சி. ஆனால் காதலர்களின் களியாட்ட பூமியாக அது மாறி வருவது தான் வேதனை தருகிறது.

ஒரு சமூகத்தை அல்லது ஓர் இனத்தை அழிக்க வேண்டுமானால் அதன் கல்வி வளத்தை அழித்தாலே போதும். ஏனைய அழிவுகள் தாமாகவே நிறைவேறிவிடும்.

இந்த வகையில், திருகோணமலையில் உயர் கல்வி பயிலும் மாணவர்களின் நிலை குறித்து கவலை எழுப்பப்படுகிறது.

ஆரம்ப வகுப்பு முதல் ஜி.சி.ஈ (உயர்தரம்) வரை திருகோணமலையில் கல்வி வசதிகள் இருக்கின்றன. அங்கு வந்து கல்வி கற்கும் மூதூர், கந்தளாய், தம்பலகாமம், கிண்ணியா மற்றும் வன்னி, வவுனியா, யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் படிப்பில் கூடிய கவனம் செலுத்து கின்றனர்.

ஜி.சி.ஈ (உயர்தர) வகுப்பு வரை ஒழுங்காகக் கல்வி பயிலும் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லப் பாடுபடுகிறார்கள். பல்கலைக்கழகம் செல்ல முடியாது போய்விட்டால் வெளிவாரிப்பட்டப் படிப்புப பெறவோ, தொழில் நுட்பக் கற்கை நெறிக்கோ முயற்சி செய்வதில்லை.

இவர்களில் பலர் கல்வியைப் பாதியில் நிறுத்திவிட்டு வேலை தேடுகிறோம் என்ற ''திருமொழியுடன்'' தம்மைத்தாமே அழித்துக் கொள்கின்றனர்.

இலங்கைத் துறைமுக அதிகார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பிறிமா கோதுமை ஆலை, டோக்கியோ சீமெந்து ஆலை, உல்லாச ஹோட்டல்கள், கடைகள், பாலம் அமைக்கும் வெளிநாட்டு திட்டங்கள் என்பவற்றில் இணைந்து சுமார் 800 பேர் வரை வேலை செய்கின் றனர். மேலும் சிலர் கடற்றொழி லில் குதித்திருக கிறார்கள்.


ஒரே ஒரு வெளிவாரிப் பட்டதாரி கல்வி நிலையம்

பிற மாவட்டங் களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் திருகோணமலை மாவட்டம் எவ்வளவோ வசதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

அப்படியிருக்கையில் பெருமளவு மாணவர்கள் அந்தவளங்களைப் பயன்படுத்தப் பின்னடிப்பது அப்பகுதி கல்விமான்கள், புத்தி ஜீவிகள் அனைவரையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

இந்த வகையில் திருகோணமலை மாவட்டவர்த்தகர்கள் தமது சுயலாபத்துக்கு இந்த மந்தநிலையைப் பயன்படுத்துகின்றனர்.

திருகோணமலை கடற்படை முகாம் முதல் அநுராதபுரம் சந்திவரை 7 படமாளிகைகள் உள்ளன; 10 வைன் ஸ்ரோஸ் உள்ளன; 10 பார்கள் உள்ளன; அனுமதி பெறாத 18 வடிசாராயக் கொட்டில்கள் உள்ளன. ஆனால் கல்வி போதிப்பதற் கென ஒரே ஒரு வெளிவாரிப் பட்டப் படிப்பு அக்கடமியே ''கிக்ஸ்'' உள்ளது.

1986 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'கிக்ஸ்' வெளிவாரிப்பட்டப்படிப்பு அக்கடமி எடுத்த எடுப்பிலேயே 35 சதவீதமான மாணவர் களைப் பட்டதாரி களாக்கியது. கடந்த வருடம் கலை மாணிப் பரீட்சையில் தனது மாணவர் களில் நூறுவீத தேர்ச்சியை எட்டியது.

இருந்த போதிலும் 'தண்ணிப்' பந்தல்களுக்கு மாணவர்கள் மத்தியில் இருக்கும் வரவேற்பைப் போல் கல்விக் கூடங்களுக்கு வரவேற்பு அவ்வளவாக இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

''மாணவர்களின் ஆர்வம் குன்றி விட்டதால் கல்வி நிலையங்கள் குறைந்து விட்டன.''

— இவ்வாறு கூறினார் வெளிவாரிப் பட்டப்படிப்பு அக்கடமியின் நிர்வாக இயக்குநர் ஏ.நவரட்ணம்.

இன்று இளம் சமுதாயம் மரத்தடியிலும் கடற்கரை யிலும் தாங்களே இந்நாட்டுக் ''குடிமக்கள்'' என்று சாதிக்கிறார்கள்.

காதல் என்ற மோகத்தால் மாணவ மணிகளில் ஒரு பகுதியினர் சமுதாய அந்தஸ்தை இழந்து நிற்கின்றனர். ஆள் நடமாட்டம் இல்லாத ஒழுங்கைகளிலும் தங்கள் களியாட்டங்களை அரங்கேற்று கிறார்கள். ''கல்வி'' யில் ஆர்வம் இல்லை. ''கலவி'' யில் தான் நாட்டம்.

திருகோணமலை இயற்கையாகத் தன்ன கத்தே கொண்ட இயற்கை வளங்கள், இளசு களின் இதமான பொழுது போக்குக்கு தீனி யாகின்றன. தாங்கள் சுதந்திரத்தைக் கொஞ் சம் அதீதமாகவே அனுபவிக்கின்றனர்.

காலிமுகத்திடலாக மாறிவரும் திருகோணமலைக் கடற்கரையில்


விரிவுரை நடைபெறுகிறது

தமிழரின் பாரம்பரியமும் கலாசாரமும் பண்பாடும் குழி தோண்டிப் புதைக்கப்படுகின்றன.

உல்லாசம் கரைகடந்து போய்விட்டால் என்ன என்ன நடக்கும்? அடுத்தடுத்து ''பிக்னிக்'' போவார்கள் பின்னர் ஆபத்து வந்து விட்டால் ''கிளினிக்'' போவார்கள். கெட்டுப் போவது எமது பெண் பிள்ளைகள் அல்லவா?

ஆதங்கப்படுகின்றனர் பெற்றோர்கள்.

—எஸ்.எஸ்.ஆர்.



வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கான கழகம் ஒன்று கடந்த 29ஆம் திகதி காலை கொழும்பு சகததாஸ ஸ்போர்ட்ஸ் ஹோட்டல் ஒடிட்டோரியத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

புகைப்படக் கலைஞர் டீன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கலாபூஷணம் கொட்டார முல்லை பாரூக் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். இந்தக் கழகத்தை அமைத்தது மூலம் மூத்த கலைஞர்களின் கனவை இளைய கலைஞர்கள் நனவாக்கி உள்ளனர். இதனைப் பிரதிபலிக்கும் முகமாக இதன் சின்னமும் உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கழகத்துக்கான சின்னத்தை புகைப்படக் கலைஞர் நியாஸ் வடிவமைத்திருந்தார்.

அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்ட மூத்த கலைஞர்கள் கிங்ஸ்லி செல்லையா, ஜெய்னுலாப்தீன், ஜெயசேன, பந்துகொடிக்கார, சிஹாப்தீன், புகாரி உட்பட மற்றும் பலரைப் படத்தில் காணலாம்.







இப்பத்திரிகை கொழும்பு -06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 மே 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.